# வெல்லாவெளி வழிபாட்டியலும்

## அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்



**-கவிக்கோ வெல்லவூர்க் கோபால்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்

- கவிக்கோ வெல்லவூர்க் கோபால் -

வெளியீடு:

**ஆலய பரிபாலன சபை**

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருத்தலம்

வெல்லாவெளி

மனுவேதா-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் தரவுகள்


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும் |
| வகை | : | ஆய்வு |
| நூலாசிரியர் | : | கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (தேசியக் கலைஞர் - கலாபூஷணம் சீ. கோபாலசிங்கம்) |
| பதிப்பு | : | 1ம் பதிப்பு (2019) |
| வெளியீடு | : | அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை, வெல்லாவெளி |
| பிரதிகள் | : | 750 |
| பக்கங்கள் | : | 150 |
| வடிவமைப்பு | : | த. சங்கர் |
| அச்சுப்பதிவு | : | வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு, தொ.பே. 065 2227170 |

| | | |
|---|---|---|
| Title of the Book | : | |
| Editor | : | Kaviko Vellavoor Gopal (National Artist - Kalabooshan S.Gopalasingham) |
| Edition | : | 1st. (2019) |
| Publish | : | Arulmiku Muthumariyammman Temple Society, Vellavely |
| Copies | : | 750 |
| Pages | : | 150 |
| Printed By | : | Wanasinghe Printers, Batticaloa. |

ISBN : 9 789554 269460





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

மட்டக்களப்புத் தேசத்தின் புகழ்பூத்த வரலாற்றில் சுமார் 2300 ஆண்டுகால சிறப்பியல்புகளைக் கொண்டிலங்குவது வெல்லாவெளிக் கிராமம். இங்கு நமது முன்னோர்தம் வாழ்வியலும் வழிபாடும் என்றுமே தனித்துவம் மிக்கதாகவே விளங்கியுள்ளது. ஆய்வுகளில் மெய்ப்பிக்கப்படும் வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் வழிபாடு நீண்டகாலமாக இங்கு நிலவிவந்த சுவாதியம்மன் வழிபாட்டினை அடியொற்றிவந்த வழிபாடு என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

வெல்லாவெளி என்றதும் பொதுவாக அதன் மையப்புள்ளியாக நம் அனைவரதும் நினைவுக்கு முதலில் வருவது வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயமே. பச்சை போர்த்திய வயல்நடுவே இச்சா சக்தியாக வீற்றிருந்து அருள்பாலிப்பவள் அன்னை மகமாயி. அவளது அருட்கடாட்சம் பலரும் அறிந்ததே.

ஊர்விட்டுப் போனாலும் சிவமுத்துமாரி – உன்
உறவுவிட்டுப் போகாதம்மா சிவமுத்துமாரி
பாரினிலே உன்னைவிட்டால் சிவமுத்துமாரி – வேறு
யாரெமக்குக் காவலம்மா சிவமுத்துமாரி

என நமது கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களின் பாடல் அடிகள் குறிப்பிடுவதைப்போல இவ்வூரார் எங்கு வாழ்ந்திருந்தபோதும் அன்னை முத்துமாரியின் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருப்பதை யாருமே மறுதலிக்கமாட்டார்கள். பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்பால் கொண்டுள்ள இவ்வம்மனின் அருள்வேண்டி நாளாந்தம் இங்கு குவியும் பக்தர்களும் தங்கள் தீராத வினைகளையும் நீங்காத நோய்களையும் போக்கிக்கொள்ள ஆலயத்தை நாடிவரும் அடியார்களும் எண்ணில் அடங்கார்.

அத்தனை பெருமைக்கும் ஈடு இணையற்று விளங்கும் அன்னை மாரிக்கு ஒரு தலவரலாறு எழுதப்படவேண்டுமென்பது எமது நீண்டநாள் ஆதங்கமாகவே இருந்துவந்தது. அந்தக் கைங்கரியம் இன்று எமது கவிக்கோ அவர்களால் நிறைவேற்றப்படுவது எமக்கெல்லாம் பெருமையே. இத்தல வரலாற்று நூலினை செம்மையாகத் தொகுத்து எமது கிராமத்தின் மேலும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக நமக்குக் கையளித்த அவருக்கு அன்னையின் அருட்கடாட்சம் கிட்டப் பிரார்த்திப்பதோடு அவருக்குப் பக்கபலமாகவிருந்து இதனை வெளியிட ஊக்குவித்த நமது ஆலய பரிபாலன சபையினருக்கும் கூடவே இந்நூலுக்கான அனுசரணையை வழங்கிய - இதன் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ள அனைத்து நல்லுளங்களுக்கும் ஊர் மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். அன்னையின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டுவதாக.

| | | |
|---|---|---|
| **சி.கருணேஸ்வரன்** | **மு.பேரின்பராசா** | **சி.தயானந்தன்** |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

ஆலய பரிபாலன சபை, அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தலம், வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

'வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்' எனும் இந்நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மட்டக்களப்புத் தேசத்தில் பல்வேறு சிறப்பியல்புகளைத் தனதாக்கிக்கொண்டு சீரோடும் சிறப்போடும் மிளிர்கின்ற பழந்தமிழ்க் கிராமமே வெல்லாவெளி. பச்சை போர்த்திய வயல் நிலங்களும் வாவிகளும் பொய்கைகளும் சூழவரப்பெற்ற - இயற்கை எழில் கொஞ்சும் இக்கிராமம் கேட்போர்க்கும் பார்ப்போர்க்கும் என்றுமே தித்திப்பை உண்டுபண்ணுவதாகும். சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டதான குடைவரைக் கல்வெட்டினைச் சான்றுபடுத்தி தமிழினத்தின் பாரம்பரியமிக்க நீண்டகால வரலாற்றினை சர்வதேச அரங்கில் முன்னிறுத்திய பெருமையும் இக்கிராமத்திற்கேயுரியது. அதேபோன்று அங்கு கோவில்கொண்டு வேண்டுவோர்க்கு வேண்டும் வரமருளி அருளாட்சி புரிகின்ற வெல்லாவெளி முத்துமாரியம்மன் திருத்தலத்திற்கும் பெரும் மகத்துவமும் குன்றாப் பெருமையும் கூடவே ஒரு நீண்டகால வரலாற்றுப் பின்னணியுமுண்டு.

இத்தகைய பெருமைகளைத் தனதாக்கிக்கொண்ட வெல்லாவெளிக் கிராமத்தினது வழிபாட்டியலையும் அங்கு கோவில்கொண்டு அருளாட்சி புரிகின்ற அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாற்றினையும் நாளைய சந்ததிக்கும் சர்வதேச அரங்கிற்கும் ஆவணமாக்கி வழங்கும் பாரிய பணியினை ஆலய பரிபாலன சபையின் முன்னீட்டில் பல்துறை ஆற்றல் மிக்கவரான கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் முன்னெடுத்துள்ளமை ஒரு பெரும் வரப்பிரசாதகமாகவே அமைகின்றது. இவ்வாலயத்தின் பிரதம குருவாக தொண்டாற்றக்கிடைத்த பெரும் பாக்கியத்தில் இந்நூற்பணி சிறப்புற அன்னை மகமாரியின் அருட்கடாட்சம்வேண்டி எனது நல்லாசியினை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

என்றும் இறைபணியில்,
தேசாபிமானி - ரெத்தினதீபம்

**சிவஸ்ரீ சி.கு.சாம்பசிவக் குருக்கள்**

பிரதம குரு, வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர்

**மேதகு மனோ கணேசன் அவர்களின்**



# வாழ்த்துச் செய்தி

"வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்" நூல் வெளியீட்டிற்கு இந்துசமய அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் வாழ்த்துச் செய்தியினை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் தொன்மையும் பெருமையும் வாய்ந்த வெல்லாவெளிக் கிராமத்தில் குடிகொண்டு அருள்புரியும் ஸ்ரீ முத்துமாரியம்மனின் பழமையையும் புகழையும் ஆவணப்படுத்தும் முயற்சியாக எழுத்தாளரும் கவிக்கோவுமான வெல்லவூர்க் கோபால் அவர்களின் முயற்சியினால் உருவாகியுள்ள படைப்பிற்கு எனது வாழ்த்துக்கள்.

தேசிய ஒருமைப்பாட்டினையும் இந்து கலாசாரத்தையும் கட்டியெழுப்புவதற்கும் இழந்த எம் உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் வழிமுறைகளை முன்னெடுக்கும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் - தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் என்ற முறையில் அனைவருக்கும் அன்னையின் அருளாசி கிடைத்திட வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**மனோ கணேசன்**

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் -

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள்,

சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

வெல்லவூர்க் கோபால் என்ற புனைபெயரோடு மரபுக் கவிஞனாக வலம்வரத் தொடங்கிய திரு.சீ.கோபாலசிங்கம் அவர்கள் எங்கள் வெல்லாவெளிக் கிராமத்தின் ஒரு முகவெற்றிலை எனலாம். காலச் சூழ்நிலையில் பிறந்த இடம் புகுந்த இடமென்று தேட்டங்கள் அத்தனையும் இழந்தபோதும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக (இந்தியா) மாறிமாறி இடம்மாறியபோதும் தனது பிள்ளைகளின் உயர்படிப்பு, வாழ்வு என்ற கடமைகளுக்கு மத்தியிலும் நிமிர்த்திய எழுதுகோலை கீழே வைக்காது கவிதைகளென்றும் கட்டுரைகளென்றும் அவர் எழுதிக் குவித்தவை ஏராளம்.

காலவோட்டத்தில் இவரது எழுத்துப்பணி நூல்களை ஆக்கும் பரிணாமம் பெற்றமை பெருமைக்குரியதாகும். கவிக்கோ வெல்லவூர்க் கோபால் எனப் பலராலும் அறியப்படும் இவர் இதுவரை பல்துறை சார்ந்த 21 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றுள் அனேகமானவை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு நூல்களாக அமைந்தவையே.

இவரது வெல்லாவெளி வரலாறும் பண்பாடும் எனும் ஆய்வு நூலானது பிராமிக் கல்வெட்டு ஆதாரங்களூடாக சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டு இங்கு வாழ்ந்த தமிழினத்தின் வழித்தோன்றல்களை - அவர்கள் வாழுகின்ற வெல்லாவெளிக் கிராமத்தின் தொன்மையை - அவர்களது பண்பாட்டுக் கூறுகளை மிகத் துல்லியமாக வெளிக்கொணர்ந்துள்ளமை பலரும் அறிந்ததே.

இங்கு வாழுகின்ற மக்கள் அவர்களது நீண்டகால வழிபாட்டியலில் இன்று தங்களது குலதெய்வமாக மாரியம்மனை முன்னிறுத்தியுள்ளதைப் பார்க்கின்றோம். இவையனைத்தையும் தெளிவாக முன்னிறுத்தும் தன்மையில் - வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தலவரலாறும் - எனும் நூலினை தனது 22வது படைப்பாக கவிக்கோ நமக்கு கையளிக்கின்றார். அந்த வகையில் இந்நூலுக்கான வாழ்த்துரையொன்றினை வழங்குவது உண்மையில் பெருமகிழ்ச்சிக்குரியதே.

கிழக்கு மேற்காக ஒன்றிக்கிடந்த வாழிடத்தில் - அடையா நெடுங்கதவாய் திறந்துகிடக்கும் கடப்பினூடாகப் பகிர்ந்துண்டு ஒட்டி உறவாடிய வாழ்க்கைக்கு சொந்தக்காரர்கள் நாங்கள். எங்களது கிராமத்தின் ஒட்டுமொத்த வாழ்வியலும்கூட இதுவே. நான் சிறுவனாக - வாலிபனாக வளர்ந்துவந்த நாட்களில் எனது மனோநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியவர் கோபால் மாமா. இவரது பிம்பத்தையும் நடையுடை பாவனை மற்றும் பழக்கவழக்கங்களையும் ஆற்றல்களையும் நெஞ்சில் சுமந்தவன் நான்.

கடந்தகால போர்க்காலச் சூழலில் பல தடவைகள் சிக்குண்டு சிதறிப்போன எங்களது எழில்கொஞ்சும் கிராமம் தனது சொந்தங்களை வலிந்து இடம்பெயரவைத்தது. எங்களில் பெரும்பாலோர் தங்கள் போக்கிலேயே சென்ற இடங்களில் வாழ்க்கையையும் அமைத்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் அவர்களால் தங்கள் உயிர் மூச்சான மண்ணையும் அங்கு கோவில்கொண்ட தங்கள் உயிர்ப்பான குல தெய்வம் மகமாரியையும் மறக்காமல் என்றும் நெஞ்சில் சுமந்தவர்களாகவேயுள்ளனர்.

எமது ஊர்ச்சிறப்பினை இன்று சர்வதேச மட்டத்தில் முன்மொழிந்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் மேற்கொண்டுள்ள இப்பணியானது எமது பிராமிக் கல்வெட்டுப்போல் நிச்சயம் நிலைத்தேயிருக்கும். அவரது இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்தமை நிச்சயம் எனக்கு ஒரு பேறாகவே அமையும். மாமா அவர்கள் நோய்நொடியின்றி பல்லாண்டு வாழ்ந்து தனது எழுத்துப் பணியை மென்மேலும் தொடர அன்னை மகமாரியின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சட்டத்தரணி மு.கணேசராசா**

B.Com (Hons), LLB, Dip.in Eng.,

Dip in B'mgt., MBA(HR), MBA (Taxation)

ஆணையாளர் – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,

வருகை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



'நீதிதோய் வன்னிமைக்கு நிகரில் நாதனைநாடு' எனப் பிரதேச வன்னிமைக்கு தலைமைத்துவத்தைக் கொண்டிலங்கிய புகழ்பூத்த வரலாறு வெல்லாவெளிக் கிராமத்திற்கு உண்டு. சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட வெல்லாவெளித் தமிழ்ப் பிராமிக் குடைவரைக் கல்வெட்டு ஊடாக மட்டக்களப்புத் தேசத்தின் தமிழின அடையாளத்தை சர்வ தேசத்திற்கும் எடுத்துச்சென்ற பெருமையும் இதனையே சாரும். மிக நீண்டகால சக்தி வழிபாட்டின் மையமாக - இங்கு அருள்மிகு முத்துமாரியாக - கோவில்கொண்டு அருள்பாலிப்பவள் அன்னை மகமாயி. அன்னையின் அருளாட்சி எமைச் சூழ்ந்த வினைகளிலிருந்தும் தொடர்ந்துவந்த அழிவுகளிலிருந்தும் எம்மை மீட்டெடுத்துவந்ததை வரலாறு அறியும். நாம் வீழவீழ மீண்டும் மீண்டும் எழுந்தமைகண்டு பலரும் வியந்தனர். எமது கிராமம் என்றுமில்லாத பாரிய அழிவினைச் சந்தித்த கடந்தகாலப் போர்ச்சூழல் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது. நாம் எங்கு வாழ்ந்தபோதும் எம்மவரின் குலதெய்வமாகவிருந்து எம்மை வாஞ்சையோடு அரவணைத்து அருள்பாலிக்கும் அன்னை மகமாரியின் மகிமையே இது என்பதை நாமறிவோம்.

எமது ஊரின் வழிபாட்டியலையும் உள்ளடக்கி அருள்மிகு முத்துமாரியின் திருத்தல மகிமையை வெளிக்கொணரும் இவ்வாவணம் காலத்தின் கட்டாயமாக அமைகின்றது. எம்மண்ணையே தன் உயிர்ப்பாக்கி தமிழ்ப்பணி புரியும் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களது மற்றோரு முக்கிய பணியாக அமையும் அவரது 22வது படைப்பான இந்நூல், எமது வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் வெளியீடாக வருவது மிகுந்த மகிழ்ச்சியைத்தருகின்றது. இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கக் கிடைத்தமை என் வாழ்வின் பேறாகவும் அமைகின்றது.

அன்னையின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டுவதாக.

**த.விவேகானந்தம்**
B.A (Hons), PGDM,SLPS Gr.I
ஓய்வுநிலை அதிபர்,வெல்லாவெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

நாடறிந்த எழுத்தாளர் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களின் 22வது படைப்பான "வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்" எனும் இந்நூல் வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் வெளியீடாக வெளிவருவதையிட்டும் அதற்கு எமது இந்துசமய அபிவிருத்திக் கழகம் சார்பில் வாழ்த்துரை வழங்கக் கிடைத்தமையிட்டும் அளவிலா ஆனந்தமடைகின்றோம்.

2300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டதாக சான்றாவணங்களுடன் நிரூபணமாகியுள்ள எமது பழம்பெரும் பதியாம் வெல்லாவெளிக் கிராம மக்களின் குலதெய்வமாகவும் ஏனைய ஆயிரக் கணக்கானோரின் வழிபடு தெய்வமாகவும் விளங்கி அருளாட்சி புரிபவளும் பரந்த மட்டுமண்தொட்டு தலைநிமிர்ந்து நிற்பவளுமான மகமாயியின் அருமை பெருமைகளையும் கிராமத்தின் தலைசிறந்த வழிபாட்டியலையும் வெளிச்சம்போட்டுக் காட்டும் இந்நூல் எமக்குக் கிடைத்த மற்றொரு பெறுமதிமிக்க ஆவணமாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

56 ஆண்டுகாலச் சிறப்புமிக்க தொடர் பணிகளால் தன்னைத் தலைநிமிர்த்தி வரலாறு படைத்துள்ள எமது இந்துசமய அபிவிருத்திக் கழகத்தின் தோற்றுவாய்க்கான மூலவிசையை வழங்கிய பெருமை எமது அருள்மிகு முத்துமாரியையே சாரும். இக்கழகம் உருவான காலம்முதல் இற்றைவரை ஆலயத்துடன் மிக்க நெருக்கம்கொண்டு அதுசார்ந்த தொண்டுகளையும் சமயப் பணிகளையும் கூடவே கலை கலாசாரப் பண்பாட்டு அபிவிருதிக்கான முன்னெடுப்புகளையும் தொடர்ந்து மேற்கொண்டுவருவதை அனைவரும் அறிவர். எமது அளப்பரிய பணிகள் ஆலயத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் இரண்டறக் கலந்தேயுள்ளமை மறுக்கமுடியாததாகும்.

இந்நூலை எமது கரங்களில் தவழவிட்ட படைப்பிலக்கியவாதி - எங்கள் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களையும் இதன் வெளியீட்டுக்காய் உழைத்த ஆலய பரிபாலன சபையினர் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவரையும் பாராட்டி வாழ்த்திநிற்பதோடு பல்லாண்டு வாழ அன்னையின் அருளாசியினை வேண்டுகின்றோம்!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

| **நி.பிரசாந்தன்** | **க.அருட்செல்வன்** | **க.கோபிலதாஸ்** |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

இந்து சமய அபிவிருத்திக்கழகம்,
வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பண்டைய மட்டக்களப்புத் தேசத்தினுடைய வரலாற்றை அறிய முற்படுவோருக்கு ஒரு தகவல் சுரங்கமாக இன்றும் மிளிர்வது நாதனை எனப் புகழ்பெற்ற வெல்லாவெளிக் கிராமம். கி.மு 300ஐ காலக்கணிப்பாகக் கொண்ட அங்குள்ள குடைவரைக் கல்வெட்டு, பல இடங்களிலும் அழிபாடுற்றுக்கிடக்கும் வரலாற்று எச்சங்கள், நாகர்கால வழிபாட்டியலை முன்னிறுத்தும் தடயங்கள், சோழரது ஆட்சிக்கால நாதன் அணை, அங்கு வாழ்ந்த பண்டைய இடையர் குலமான வதனமார் மேற்கொண்ட வழிபாட்டியல்கள், பிரதேசச் சிறப்புவாய்ந்த நாதனை வன்னிமைகளின் வாழிடங்கள், போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட 800 ஆண்டுகளுக்கும் முற்பட்ட கோவில்தீவு சிவன் கோவில் எச்சங்கள் என அவை விரிவுபடும்.

2012ன் முற்பகுதியில் என்னால் எழுதப்பட்டு வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்ற வெளியீடாக வெளிவந்த "வெல்லாவெளி வரலாறும் பண்பாடும்" வெல்லாவெளிக் கிராமத்தின் பல்வேறு சிறப்பியல்புகள் குறித்து அறியும் வாய்ப்பினை வெளிக் கொணர்ந்திருந்தாலும் அதன் புகழ்வாய்ந்த வழிபாட்டியலை ஒரு அறிமுக நிலையிலேயே கொண்டிருந்தது. அதேபோல கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மட்டத்தில் இடம்பெற்ற ஆய்வுகளிலும் சில ஆய்வாளர்களால் வெளிக்கொணரப்பட்ட ஆய்வுத் தகவல்களிலும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் விபரணங்களிலும் இதன் வழிபாட்டியல் குறித்து சொல்லப்பட்டாலும் அவை முழுமைப்படுத்தப்பட்ட ஆவணமாக அமையாமை ஒரு பெரும் குறையாகவே கருதப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் எமது ஆலய பரிபாலன சபையினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மிகுந்த நம்பிக்கையுடனும் பாரிய எதிர்பார்ப்புடனும் என்னிடம் இப்பணியினை ஒப்படைத்தனர். எமது வரலாறு தொடர்பில் நிறையவே தகவல்களைத் தாங்கிக்கொண்டு எங்கள்முன் நடமாடும் பல்கலைக்கழகங்களாக பெருமைசேர்த்த எங்களது மூத்த குடிமக்கள் அனைவரையும் கடந்த போர்க்காலச் சூழலிலும் இடப்பெயர்வுகளிலும் இழந்துவிட்ட நிலையில் இதற்கான பாரிய முயற்சியை முன்னெடுக்கவேண்டிய நிலையே எம்முன் விரிவுபட்டுநின்றது. கால ஓட்டத்தில் சின்னாபின்னப்பட்டு சீரழிந்து தனது முக்கால்வாசிக்கும் மேற்பட்ட பண்பாட்டுச் சொந்தங்களை இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இடங்களுக்கு நகர்த்திவிட்டு கூனிக் குறுகிக் கிடக்கும் எனது உயிரினும் மேலான தாய்மண்ணுக்கு வாழ்நாளெல்லாம் கடமைப்பட்டவன் என்பதால் என்னால் முடிந்தவரை இப்பணியினைச் செய்துமுடித்துள்ளேன்.

இதில் நமது ஆலய பரிபாலன சபையினருடன் என்னுறவுகள் சிலரும் தங்கள் பங்களிப்பினை நல்கினர். இதற்கான ஆசியுரையினை ஆலயத்தின் பிரதம குருவிடமும் வாழ்த்துரைகளை தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு மனோ கணேசன் அவர்களிடமும், ஆலய பரிபாலசபை, மற்றும் இந்துசமய அபிவிருத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகம் என்பவற்றோடு என் கிராமத்தின் சொத்துக்களான கல்வியாளர் - ஓய்வுநிலை அதிபர் திரு.தவசிப்பிள்ளை விவேகானந்தம் அவர்களிடமும் அத்தோடு நாடறிந்த கல்விமான் - உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் சட்டத்தரணி முத்துலிங்கம் கணேசராசா அவர்களிடமும் பெற்றுக்கொண்டமை இந்நூலுக்கும் கூடவே எனக்கும் பெருமைசேர்க்கும் எனத் திடமாக நம்புகின்றேன். அத்தோடு பல்வேறு தகவல்களையும் புகைப்படங்களையும் தந்துதவிய ஆலய பரிபாலன சபைச் செயலாளர் - நிருவாக அலுவலர் திரு.முத்துலிங்கம் பேரின்பராசா அவர்களுக்கும் கூடவே சமுர்த்தி விரிவாக்க அலுவலரும் ஊடகவியலாளருமான திரு.செல்லையா நவரெத்தினம் அவர்களுக்கும் மிக்க ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினை நல்கிய வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய அதிபர் திரு.ச.கணேசமூர்த்தி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு என் கிராமத்து அன்பு நிறைந்த நெஞ்சங்களுடன் மீண்டும் இணையக் கிடைத்தமையைப் பெருமையாகக்கொண்டு,

ஆடிவந்தாள் ஆடிவந்தாள் ஆனிமுதற் கூறில்
தேடிவந்தாள் தேடிவந்தாள் வெல்லாவெளி ஊரில்
தாயிருக்கும் கோவிலுக்கு நாலுபக்க வாசல்
வேணாமென்று தடுப்பதற்கு யாருமில்லை காவல் - நாம்
வேப்பமர நீளலில வாழுகின்ற சாதி - எங்கள்
மாரியிவள் சன்னிதியில் மாறாது நீதி
ஊரறியும் உலகறியும் கேட்டுப்பாரு நீயே! - என்றும்
மாறிவிட மாட்டாள் எங்கள் முத்துமாரித் தாயே!

என அனைவரும் சிறப்புற அன்னையை வேண்டிநிற்கின்றேன்.

நன்றி.

**கவிக்கோ வெல்லவூர்க் கோபால்**

(தேசியக் கலைஞர் சீ.கோபாலசிங்கம்)

143/23, எல்லை வீதி, மட்டக்களப்பு (இலங்கை)

e-mail: manuvetha@gmail.com

Ph: 065 2222993 - Mob: 0718938367,0764644460, 0750584427



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆலையடி வழிபாடு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாதியம்மன் (சுய ஆதி அம்மன்) குன்று

பண்டைய அம்மன் வழிபாட்டுத் தலம்



## வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன்

(முன்னைய ஆலயங்கள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மனின் வடிவங்கள்







# வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன்

(இன்றைய ஆலயம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் ஆலயம்



# கல்லடிப்பிள்ளையார்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லடிப்பிள்ளையார்



## நாதனை அரசையடிப் பிள்ளையார்





(நாதனை அணை கட்டப்பட்ட சோழர்கால - கி.பி 11ஆம் நூற்றாண்டில் உருவான வழிபாட்டுத் தலம் போர்த்துக்கேயர் காலத்திலும் பின்னர் அண்மைய போர்க்காலச் சூழலிலும் முற்றாக அழிக்கப்பட்டபின்னர் அவ்விடத்தில் மீளமைக்கப்பட்ட தற்காலிக வழிபாட்டுத்தலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரையடிப் பிள்ளையார்



## விஷ்ணு ஆலயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் ஆலயம்



# பீலியாற்று நாகதம்பிரான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக கோவில்



# சங்காபிஷேகம் 2018







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடங்கு நிகழ்வுகள்



சடங்கு நிகழ்வுக்காக அம்மனிடம் அனுமதி கோரல் (பழிபடுத்தல்)

## முதல்நாள் கும்பஸ்தாபன நிகழ்வுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## 6ஆம் நாளில் இடம்பெறும் அம்மனின் பூசை







## 7ஆம் நாள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7ஆம் நாளில் நாதனைப் பிள்ளையாரடிக்கும் நாச்சிமார் கல்லடிக்கும் செல்லல்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ஆம் நாள் - இறுதிநாள் சடங்கு

தீ மூட்டுதல்





காத்தவராயனை கழுமரம் ஏற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நிருவாகம் 1986 - 1997



01. திரு. சா. பெரியதம்பி J.P (காலிங்காகுடி),
02. திரு. மு. நவீந்திரராசா (பொதுச் செயலாளர்),
03. திரு. சா. முத்துலிங்கம் (பெரிய படையாண்டகுடி),
04. திரு. மா. அன்னகேசரி (பொருளாளர்),
05. திரு. சீ. கணபதிப்பிள்ளை (தலைவர்),
06. திரு. பெ.சின்னத்தம்பி (பெத்தான்குடி),
07. திரு. ச. எதிர்மன்னசிங்கம் (பூசகர்),
08. திரு. த. ஜெயநாதன் J.P (வேடவேளாளர் குடி),
09. திரு. ஆ. இராசதுரை (உலகிப்போடிகுடி),
10. திரு. கு. விநாயகமூர்த்தி (பணிக்கனார்குடி)

படத்தில் இடம்பெறாதவர்: திரு.சா.விநாயகமூர்த்தி (வீரப்படையாண்டகுடி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நிருவாகம் - 12.08.2018வரை



**முதல் வரிசை:**

திரு.இ.தனுராஜ் (பொருளாளர்), திரு.செ.நவரெத்தினம் (உப செயலாளர்), திரு.க.சிவாகரன் (செயலாளர்), திரு.மா.அருள்நாயகம் (உதவிக்குரு), திரு.சி.சாம்பசிவம் (பிரதமகுரு), திரு.போ.சிவனேசராசா (உப தலைவர்), திரு.வ.மேகநாதன் (தலைவர்)

**இரண்டாம் வரிசை:**

திரு.க.சிவலிங்கம் (கணக்காய்வாளர்), திரு.ஆ.நாகலிங்கம் (ஆலோசகர்), திரு.மா.அன்னகேசரி (ஆலோசகர்), சட்டத்தரணி மு.கணேசராசா (ஆலோசகர்)

**மூன்றாம் வரிசை:**

திரு.ப.டிசோக்காந்தன் (குடிவண்ணக்கர்), திரு.வி.நித்தியானந்தம் (குடிவண்ணக்கர்), திரு.வே.மகாமாயவன் (குடிவண்ணக்கர்), திரு.கு.லோகநாதன் (குடிவண்ணக்கர்), திரு.க.சுந்தரம்பிள்ளை (குடிவண்ணக்கர்), திரு.அ.யோகேஸ்வரன் (குடிவண்ணக்கர்), திரு.சி.சிவகுமார் (குடிவண்ணக்கர்), திரு.சோ.பத்மராசா (கணக்காய்வாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நிருவாகம் - 12.08.2018 தொடக்கம்



**முன்வரிசை:**

திரு.சி.கருணேஸ்வரன்(தலைவர்), திரு.மு.பேரின்பராசா (செயலாளர்), திரு.சி.தயானந்தன் (பொருளாளர்) திரு.மா.அருள்நாயகம் (குருக்கள்), திரு.சி.சாம்பசிவம் (பிரதமகுரு), திரு.மா.அன்னகேசரி (ஆலோசகர்), சட்டத்தரணி மு.கணேசராசா(ஆலோசகர்), திரு.த.ஜெயநாதன் JP (ஆலோசகர்)

**பின்வரிசை:**

திரு.பெ.பிரதீப்குமார்(உபதலைவர்), திரு.க.அருட்செல்வன்(உபசெயலாளர்), திரு.ப.றொஜானந்தன் (பாகைமுகாமையாளர்), திரு.க.சிவலிங்கம்(கணக்காய்வாளர்), திரு.சா.ஜெய்சங்கர்(பாகைமுகாமையாளர்), திரு.க.சுந்தரம்பிள்ளை(பாகைமுகாமையாளர்), திரு.அ.யோகேஸ்வரன் (பாகைமுகாமையாளர்) திரு.ந.நவசீலன் (பாகைமுகாமையாளர்), திரு.வி.நித்தியானந்தன் (பாகைமுகாமையாளர்)

**சமுகமளியாதோர்:**

திரு.ஆ.நாகலிங்கம் (ஆலோசகர்), திரு.வ.மேகநாதன் (ஆலோசகர்), திரு.கு.லோகநாதன் (பாகைமுகாமையாளர்), திரு.சோ.பத்மராசா (கணக்காய்வாளர்), திரு.வே.மகாமாயவன் (பாகைமுகாமையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி இந்து சமய அபிவிருத்திக் கழகம்

ஆரம்பம் 1962



**திரு.வீ.சிவகுரு** (விதானையார்)
தலைவர்




**திரு.சீ.சதாசிவம்**(PHI)
செயலாளர்



**திரு.த.ஜெயநாதன்** J.P
பொருளாளர்

# வெல்லாவெளி இந்துசமய அபிவிருத்திக்கழகம் 1985





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி இந்துசமய அபிவிருத்திக் கழகம் 2018



**இடமிருந்து வலம்**

தலைவர் - திரு. நி.பிரசாந்தன்,
உப தலைவர் - திரு. கு.அமலகீதன்
செயலாளர் - திரு. க.அருட்செல்வன்,
பொருளாளர் - திரு. க.கோபிலதாஸ்
நிருவாக உறுப்பினர் - திரு. பெ.பிரதீப்குமார்,
கணக்கு பரிசோதகர் - திரு. நா.பிரபாகரன்
கணக்கு பரிசோதகர் - திரு. கு.துரைராசா,
உப செயலாளர் - திரு. க.பிரகாஸ்ராஜ்
நிருவாக உறுப்பினர் - திரு. நா.கோகிலன்

**படத்தில் இடம் பெறாதவர்கள்**

திரு. செ. பாலகிருஷ்ணன் - உறுப்பினர்
திரு. சோ. பத்மராசா - உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி வழிபாட்டியலும்
# அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம் :**

மேதிதோய் குளங்களெல்லாம் வீரப்போர் வரால்மீன் பாயும்
ஓதிதோய் மலர்களெல்லாம் ஒலிப்பன மாதர் கண்கள்
நீதிதோய் வன்னிமைக்கு நிகரில்நா தனைநா டென்பர்
வீதிதோய் வெல்லவூராம் விழுமிய சரிதம் கேளிர்

மட்டக்களப்புத் தேசத்தில் பல்வேறு சிறப்பியல்புகளை தன்னகத்தேகொண்டு மிளிர்வது வெல்லாவெளி எனும் பழந்தமிழ்க் கிராமம். சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட தனது குடைவரைக் கல்வெட்டுமூலம் தமிழினத்தின் அடையாளத்தை சர்வதேச அரங்கில் முன்னெடுத்துச்சென்ற பெருமையும் இதற்கே உரியது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வரலாற்றில் தொடக்ககாலம் முதற்கொண்டு கி.பி 1030 வரையான காலத்தே என்ன பெயரால் அழைக்கப்பட்டது என்பதனைக் கண்டறியமுடியவில்லை. அக்காலத்தே முக்கிய வழிபாட்டிடமாகக் கருதப்பட்ட சுவாதியம்மன் குன்றினை அண்டிய மக்கள் வாழ்ந்த பகுதி அம்மன்குளம் என அழைக்கப்பட்ட தன்மையில் அப்பெயர் குறித்தும் கவனம்கொள்ளவேண்டியுள்ளது. சோழராட்சிக் காலமான 1030ஐ தொடர்ந்த காலம் நாதனை என்றே அழைக்கப்பட்டுள்ளமையும் நாதனை அணைமூலம் பாசனம்பெற்ற சுமார் ஆயிரம் அவணம் நெல் விதைக்கத்தக்க வயல்நிலங்கள் வேலர்வெளி என்ற பெயரினைக் கொண்டிருந்தமையும் ஆய்வுகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. மாகோன் ஆட்சிக் காலத்திலும் (கி.பி 13ஆம் நூற்றாண்டு) அவனால் உருவாக்கப்பட்ட நாடுகாட்டுப் பற்று வடக்கு எல்லையாக நாதனையடிப்பா – வேடர் குடியிருந்த தோட்டம் எனக் குறிப்பிடும் தன்மையில் நாதனை என்ற பெயரே வழக்கிலிருந்ததை உறுதிசெய்யமுடிகின்றது. 'நீதிதோய் வன்னிமைக்கு நிகரில் நாதனை நாடு' என்ற பாடலடியையும் இதில் முக்கியப்படுத்தமுடியும். கி.பி 1800க்கு பிற்பட்ட காலமே இது வெல்லாவெளி என்ற பெயரினைப் பெறுகின்றது. போர்த்துக்கேயருடைய காணித் தோம்பில் (காணிப் பதிவு) வேலர்வெளி வயல் நிலங்கள் வேலா வெளிக் கண்டம் (Vella Vely Kandam) என எழுதப்பட்டதன்மையில் அதனை அடியொற்றியே இப்பெயரும் இடம்பெறலாயிற்று. எனினும் இன்றும்கூட வெல்லாவெளிச் சந்தி நாதனைச் சந்தி என்ற பெயரிலும் அதனை அண்டிய பகுதி நாதனை என்ற பெயரிலும் அழைக்கப்படுவது கவனத்திற்குரியதே.

மேலும், ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் ஜனசந்தடிமிக்க சிறிய அழகிய நகரமாக நாதனை விளங்கியதாக 1807ல் ஆங்கிலேய அறிஞரான கோடினர் என்பவரால் (Cordiner –Volume) எழுதப்பட்ட அறிக்கை குறிப்பிடுவதைக்காணலாம். எஸ்.ஓ. கனகரெத்தினம் 1921ல் எழுதிய Monograph of Batiicaloa District எனும் நூல் வதனமார் குறித்து விபரிக்கும்போது நாதனை என்னும் பழமைமிக்க சிறிய நகரத்தில் வதனமாருக்குக் கோவிலிருந்ததாக (பக்: 80) குறிப்பிடுகின்றது. விக்கிப்பீடியா இணையத்தளமும் வெல்லாவெளி பற்றிக் குறிப்பிடும்போது அதனை ஒரு சிறிய நகரமாகவே (Vellaveli is a small Town in Batticaloa District) குறிப்பிடுகின்றது. சைமன் காசிச்செட்டி வன்னியர் தொடர்பான ஆய்வுகளில் (Ceylon Gazetter – 1834) வன்னியர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் நாதனையில் வாழ்வதாக குறிப்பிடுவதையும் கவனத்தில்கொள்ளலாம். வெல்லாவெளிக் கிராமத்தை அண்டிய அம்மன்குளம், விவேகானந்தபுரம், புன்னைக்குளம், பிலாலிவெம்பு, பீலியாறு, வேத்துச்சேனை, தாமரைக்கேணி போன்ற குடியிருப்புகளும் மிக நீண்டகாலமாக இக்கிராமத்தோடு ஒன்றியிருந்தவையாகும்.

இக்கிராமத்தின் வழிபாட்டியலில் நாக வழிபாடு, சூல (வைரவர்) வழிபாடு, சுவாதியம்மன் வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, வதனமார் வழிபாடு, சிவ வழிபாடு, மாரியம்மன் வழிபாடு, விஷ்ணு வழிபாடு என ஒரு தொடர்புபட்ட பரவலான வழிபாட்டியலை நம்மால் அவதானிக்கமுடியும். இதில் சோழராட்சிக் காலம்முதல் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்ட சிவவழிபாடு -போர்த்துக்கேயரின் படையெடுப்பைத் தொடர்ந்து 1622ல் குறித்த சிவாலயம் அழிக்கப்பட்ட பின்னர் அதன் சிறப்பியல்பை இழந்துபோனது. அதன்பின்னர் தோற்றம்பெற்ற வழிபாடே மாரியம்மன் வழிபாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக வழிபாடும் சூலவழிபாடும்:


வெல்லாவெளியின் வரலாறு அறியப்பட்ட கி.மு 300 தொடக்கமான காலம்முதலே இங்கு வாழ்ந்த நாகரின மக்களின் தொடர்புபட்ட வரலாறாக நாகவழிபாடும் சூலவழிபாடான வைரவர் வழிபாடும் நிலைபெற்றிருந்தமையை இதுவரை அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நிலைநிறுத்தியுள்ளன. குடைவரைக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள குன்றின் முன்னால் பரந்து விரிந்து கிளைபரப்பிநிற்கும் பழனியர்வட்டை ஆயிரம்கால் (விழுது) ஆலமர நிழலில் கோவில்கொண்டுள்ள – நீண்டகால மரபுவழிப்பட்ட – நாகதம்பிரான் மற்றும் வைரவர் வழிபாட்டிடம் இதற்கு முக்கிய சான்றாக அமைகின்றது.

வெல்லாவெளியைப் பொறுத்தவரையில் இவ்விரு வழிபாடுகளும் இன்றும்கூட மிக்க வலுவாகவேயுள்ளன. எல்லா மக்களும் ஆண்டுக்கொரு தடவையேனும் நாகதம்பிரானுக்கு பொங்கல்வைத்து பாம்புப் புற்றினுள் பால்பழம் ஊற்றி வழிபடவேசெய்கின்றனர். அனைத்து விவசாயிகளும் தங்கள்தங்கள் வயல் நிலத்தே இவ்வழிபாட்டினை மேற்கொள்வதை அவதானிக்கமுடியும். சூலவழிபாடானது காவல்தெய்வமான வைரவர் வழிபாடாக மாற்றமுற்ற தன்மையில் இல்லங்கள்தோறும் முன்பக்கஓரமாக வைரவருக்கு நிரந்தர பந்தலமைத்து வருடத்திற்கு ஒருதடவை உரொட்டி மற்றும் பழவகையால் மடைவைத்து வழிபாடியற்றவே செய்கின்றனர். இதனோடுகூடவே இதன் 1800க்கு பிற்பட்ட தொடர்ச்சியான வழிபாடு வெல்லாவெளி மாரியம்மன் திருத்தலத்தோடு இணைக்கப்பட்ட நிலையில் இங்கு நாகதம்பிரான் மற்றும் வைரவருக்கு நாளாந்த மற்றும் விசேட பூசைகள் சிறப்பாக இடம்பெறுவதைக்காணமுடியும்.



ஆயிரம்விழுது ஆலமரத்தடியில் பண்டைய நாகவழிபாடும் சூலவழிபாடும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் ஆலயத்தை அண்டிய நாகவழிபாடு

கோவிலின் வெளிப்பால் தென்புறமாக பெரிய அளவில் தென்பட்டதும் நீண்டகாலமாக நாகம் குடிகொண்டிருந்ததுமான புற்றிலே முன்னர் நாகவழிபாடு இடம்பெற்றுவந்தது. போர்க்காலச் சூழலில் அப்புற்று அழிக்கப்பட்ட நிலையில் அவ்விடம் ஆலய சுற்றுமதிலுக்குள்ளாக்கப்பட்டு இவ்வாலயத்தில் மிக நீண்டகாலமாக வீரமகா காளியம்மனுக்கு உருக்கொண்டாடிய அமரர் வேலாப்போடி அவர்களின் நினைவாக அவரது புதல்வியார் திருமதி பூமணி சிவபாலன் அவர்கள் ஒரு அழகிய நாக தம்பிரான் ஆலயத்தை அமைத்துக்கொடுத்ததன்மூலம் அதில் இன்று நாகவழிபாடு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.





**பீலியாறு நாகதம்பிரான்:**





வெல்லாவெளி பீலியாற்றை வதிவிடமாகக் கொண்டிருந்த அமரர் சத்திருக்கப்போடி இளையதம்பி அவர்கள் 1944 – 1982 வரை அம்மனுக்கு பெரும்தொண்டாற்றிய பக்தராவார். சடங்கு காலத்தே 5ஆம் நாளில் அம்மன் தனது வீதியுலாவின்போது பீலியாற்றுக்கும் எழுந்தருளி அங்கு வாழ் மக்களை ஆசீர்வதிப்பதும் அதன்போது அங்குள்ள நாகதம்பிரான் புற்றில் பால்பழம் வார்த்துப் பூசைசெய்வதும் நடைமுறையிலிருந்து வந்தது. இளையதம்பி அவர்களின் மரணத்தின் பின்னர் அவரது நினைவாக பேரர்களான திரு.இராசதுரை குடும்பத்தினரும் திரு.கருணேஸ்வரன் குடும்பத்தினரும் நாகதம்பிரானுக்கு ஒரு சிறிய ஆலயம் அமைத்து வழிபாடியற்றிவருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாதியம்மன் வழிபாடு:



சுவாதியம்மன் குன்று



சுவாதியம்மன் குன்றின் முகப்பு

இங்குள்ள சுவாதியம்மன் குன்று ஒரு பழமையான மலையடி வழிபாடாகும். இங்கு சுய ஆதி அம்மனே சுவாதியம்மனாக மருவியதென்ற கருத்தும் நிலவுவதைப் பார்க்கமுடிகின்றது. இதனை அண்டிய ஆதிக் குடியிருப்பானது அம்மன்குளம் என்றே அழைக்கப்பட்டது. மலையடி வழிபாடும் குளமென்ற ஈற்றடியினைக் கொண்ட இடப்பெயரும் பழைமையின் அடையாளமே. சுவாதியம்மன் குன்றுக் கோவிலில் தொடராக இடம்பெற்றுவந்த நாளாந்தப் பூசைகள் இல்லாதுபோக இவ்வூர் மக்களால் சொல்லப்படுகின்ற கர்ணபரம்பரைக் கதையானது வலுவான நம்பிக்கை கொண்டதாகவேயுள்ளது.

ஒருநாள் இக்கோவிலின் பூசகர் பூசையை முடித்துவிட்டு கதவைச் சாத்தாமல் வெளியே போயிருக்கின்றார். அந்த நேரத்தில் பூசகரின் இரு பெண் குழந்தைகள் கோவிலுக்கு வந்திருக்கிறார்கள். திடீரென மழை கொட்டத்தொடங்கவே இருவரும் கோவிலுக்குள் ஒதுங்கியிருக்கின்றனர். சற்றுநேரம் கழித்துவந்த பூசகர் குழந்தைகள் உள்ளேயிருப்பது தெரியாமல் கதவைச் சாத்தியிருக்கின்றார். கல்லாலான அக்கதவு சாத்தப்படவே பிள்ளைகள் சத்தமிட்டிருக்கின்றனர். பூசகர் கதவைத் திறக்க முற்பட்டு அது முடியாதுபோக ஊரவரை உடனே அழைத்துவந்திருக்கின்றார். எந்த முயற்சியும் பலனற்ற நிலையில் குழந்தைகள் நிரந்தரமாகவே அடைபட்டுப்போனார்கள். இதனைச் சான்றுபடுத்தும் தன்மையில் குன்றின் முன் பகுதியில் கதவுபோன்ற அமைப்பு தென்படுவதை அவதானிக்கமுடியும். இது தொடர்பில் மேலும் ஒரு வாய்மொழிக் கதை இப்பகுதியில் உலாவுவதையும் அவதானிக்கமுடிகின்றது. அக் குன்றுக் கோவிலுக்குள் அடைபட்டுப்போன இரு குழந்தைகளும் இரண்டாவது நாதனை வன்னியனின் பிள்ளைகள் என்றும் இதனாலேயே வன்னியனுக்கு வாரிசுகள் இல்லாது போனதெனவும் கூறுவர். இதனைச் சான்றுபடுத்தும் தன்மையில் வெல்லாவெளி வாழைச்சேனை படையாட்சி குலத்தினரும் கோவில்தீவு படையாட்சி குலத்தினரும் தாங்கள் வருடந்தோறும் செய்யும் மரணித்தவர்களுக்கான பிதுர்கடன் வழிபாட்டில் தனியாக வன்னிச்சி மடைவைத்து வழிபாடியற்றுதல் குறிப்பிடத்தக்கதாகும்.


பூரணை நள்ளிரவில் அக்குன்றினுள்ளே குழந்தைகளின் பேச்சொலி கேட்பதாக நம்பப்பட்டாலும் அச்சம் காரணமாக யாரும் நள்ளிரவு வேளையில் அக்குன்றின் முன்னால் அமர்ந்து அதனைச் செவிமடுக்க முன்வருவதில்லையென்றே கூறப்படுகின்றது. எனினும் ஊர்மக்கள் தொடர்ந்தும் அடிக்கடி இக்குன்றின் முன்னால் பொங்கலிட்டு வழிபாடு செய்வதும் மாரியம்மன் சடங்கின் ஏழாம் நாளில் இக்குன்றின்மேல் ஏறி படையல் வைத்து வழிபாடு செய்தலும் மிக நீண்டகாலமாகத் தொடரவே செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வழிபாடு

**கல்லடிப் பிள்ளையார்**





கல்லடிப் பிள்ளையார் குன்றுக் கோவில்

நீதிதோய் வன்னிமையின் நிகரில்நா தனைநாட்டின்
ஆதியாம் சுவாதியம்மன் அருளீயும் மகமாயி!
நாதத்தின் திருவடியை நாம்பாடக் கல்லடியின்
வேதத்தின் மெய்ப்பொருளாம் விநாயகனும் காப்பாமே!

கல்லடிப் பிள்ளையார் என அழைக்கப்படும் பண்டைய புகழ்பெற்ற வழிபாட்டிடமே வெல்லாவெளிக் கிராமத்தின் முதல் பிள்ளையார் வழிபாட்டுத்தலமாக ஆய்வுகளில் முன்னிறுத்தப் படுகின்றது. குன்றின் அடிவாரத்தில் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ள பிள்ளையார் சிற்பமே அங்கு மூலவராகவுள்ளார். இலங்கையில் பல்லவர் செல்வாக்கு பரவிய காலத்தில் இச்சிற்பம் பொறிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டாலும் பிள்ளையார் வழிபாடு தோற்றம்பெற்ற சோழராட்சிக் காலத்தினை இதன் தொடக்ககாலமாகக்கொள்ளமுடியும் என்றே நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதனை அரசையடிப் பிள்ளையார்





பின்னர் கி.பி 1030 வாக்கில் நாதன் அணை கட்டப்பட்டபோது அதனை அண்டியதாக பிள்ளையாருக்குக் கோவிலமைத்து நாதனைப்பிள்ளையார் (அரசயடிப்பிள்ளையார்) வழிபாடு உருவானதாக அதன் வரலாறு கூறப்படுகின்றது.

**வீரையடிப் பிள்ளையார்:**


அதனைத்தொடர்ந்து ஊரின் வடகிழக்கு முனையில் வெல்லாவெளி குளக்கட்டையண்டியதாக உருவானதே வீரையடிப் பிள்ளையார் வழிபாடு. இவ்வழிபாடானது அப்பகுதியில் மக்கள் குடியேற்றம் ஏற்பட்ட காலத்தை மையப்படுத்தியதாக அமையும்.

தொடர்ந்தாற்போல் 1800க்கு பிற்பட்ட காலத்தே மாரியம்மன் கோவிலோடிணைந்த தற்போதைய பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டது. ஊர்ப் பெண்களின் பிடியரிசிச் சேமிப்பில் கிடைத்த வருமானத்தை முன்னீடாக்கி 1622 வாக்கில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட வெல்லாவெளி – கோவில்தீவு சிவன் கோவிலிலிருந்த –கல்லில் வடித்த மூன்று கதவுநிலைகளையும் கொண்டு பிள்ளையார் ஆலயத்தை அமைத்து அதன் மூலமூர்த்தியாக விநாயகரைப் பிரதிஷ்டை செய்ததோடு சிவனையும் முருகனையும் அதனுள் வைத்து இக்கிராம மக்கள் வழிபாடியற்றலாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரையடிப் பிள்ளையார்:






மாரியம்மன் கோவிலோடிணைந்த பிள்ளையார் கோவில்

2017ன் பிற்பகுதியில் இவ்வாலய முன்மண்டபம் முற்றாக இடிக்கப்பட்டு இன்று அது மிக்க அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அதனை அண்டியதாக வசந்தமண்டபமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதனமார் வழிபாடு





இங்கு மிக நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த வதனமார் வழிபாடும் அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற வில்லைகட்டிச் சடங்கும் மிகப் புகழ்வாய்ந்த வரலாற்றுப் பதிவாகவேயுள்ளன. பண்டைத் தமிழகத்தின் நீலகிரிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்த மலைஜாதியினரான இடையர் குலத்தினரே வதனமார் என அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவர்களை தோடரினத்தினர் எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்களது முன்னீட்டில் அறியப்பட்டதே இவ்விரு வழிபாடுகளுமாகும். வெல்லாவெளி மாரியம்மனின் ஏழாம் நாள் சடங்கில் வதனமார் வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான நிகழ்வுகள் சுவாதியம்மன் குன்றின் முன்னாலும் கல்லடிப் பிள்ளையாரடியிலும் சிறப்பாக இடம்பெறுவதை அவதானிக்கமுடியும். சுமார் நாற்பது நாட்களை உள்ளடக்கிய நாதனை வில்லைகட்டிச்சடங்கு 1790க்குப் பின்னர் இடம்பெற்றமைக்கான தகவல்கள் பெறப்படவில்லை. மட்டக்களப்புத் தேசத்தின் ஏழுவன்னிமைகளின் முன்னீட்டில் முதலிகள் மற்றும் போடிகளின் பங்குபற்றுதலில் இது ஒரு தேசிய விழாவாக இடம்பெற்றுவந்துள்ளமையை பலர் தங்கள் குறிப்புகளில் வெளிப்படுத்தியுள்ளனர். நாடுகாடுப் பரவணிக் கல்வெட்டும் இதனைத் தகவல்படுத்தியுள்ளது. எஸ்.ஓ.கனகரெத்தினம் எழுதிய Monograph of the Batticaloa District -1921 நூல் நாதனை வதனமார் கோவில்குறித்த தகவல்களைப் பதிவாக்கியுள்ளமையை (பக்:80) இங்கு முக்கியப்படுத்தலாம்.

இன்றும் மாரியம்மனின் ஏழாம்நாள் சடங்காக இடம்பெறும் நாதனை வதனமார் சடங்கு ஏனைய பகுதிகளில் இடம்பெறும் வதனமார் சடங்கிலிருந்து வேறுபட்டும் விரிவுபட்டும் நிகழ்த்தப்படும் தன்மையில் அதனது தனித்தன்மை மற்றும் சிறப்பியல்புகள் குறித்து பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மட்டத்திலும் கலாநிதிப் பட்ட ஆய்வு மற்றும் விசேட கற்கைநெறிகளுக்கான ஆய்வுகளிலும் இவ்வழிபாடுகள் முழுமையாகவே இணைக்கப்பட்டுள்ளன. இவ்வழிபாடுகளில் வெல்லாவெளியின் ஆதிவழிபாடான சுவாதியம்மன் வழிபாடும் பிணைப்புறுவது முக்கிய அம்சமாகவே அமையும்.





முன்னர் ஏழாம்நாள் சடங்கின்போது அன்று காலை சிம்ம வாகனத்தில் அம்பாளும் ஏடகம் எனப்படுகின்ற அலங்கரிக்கப்பட்ட தோளில் சுமந்து செல்லத்தக்க சிறுதேரில் பார்வதி சமேதராய் சிவனும் மயில் வாகனத்தில் பிள்ளையாரும் எழுந்தருள பறைமேளம் முழங்க தேவாதிகள் ஆடிவர பக்தர்குழாம் புடைசூழ கரகம், காவடி என்பவற்றோடு பாற்குடப் பவனி அழகுசெய்ய அம்மனின் மடைப்பெட்டி, பாலாவதனனின் ஆயுதப்பெட்டி, பாற்குடங்கள் என்பவற்றை ஆலயத் தொண்டர்கள் ஏந்திச்செல்ல ஆலயத்திலிருந்து பவனியாகப் புறப்பட்டு ஊரின் கிழக்குப்புறமாக ஊர்வலமாகச்சென்று மைய வீதியூடாக நாதனைச் சந்தியை அடைந்து பின்னர் நாதனைப் பிள்ளையாரடிக்குச் செல்வர். தற்போது இடப வாகனத்தில் பார்வதி சிவனும் மூஷிக வாகனத்தில் பிள்ளையாரும் சிம்ம வாகனத்தில் அம்பாளும் பவனி செல்வர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கு பாற்பொங்கலுடன் வழிபாடியற்றி மகாவிஷ்ணு மாரியம்மனாக உருக்கொள்ளுவதைச் சித்தரிக்கும் தன்மையில் விஷ்ணுவுக்கு பால்பள்ளயம் கொடுக்கும் சடங்கு இடம்பெறும். அந்நிகழ்வு முடிவுற்றபின்னர் தொடர்ந்து கல்லடிப் பிள்ளையாரடி நோக்கிச் செல்வர். அங்கு சுவாதியம்மன் வழிபாடும் வதனமார் வழிபாடும் இடம்பெறும்.

முதலில் சுவாதியம்மன் குன்றுக்கு வருவர். குன்றின் அடியில் சூடம்கொழுத்தி தேங்காய் உடைத்தபின் தாய்த்தெய்வமான அம்மாள் எனப்படும் மாரியம்மனின் உருக்கொண்ட தேவாதியும் அர்ச்சகர் குழுவினரும் குன்றின்மேல் ஏறுவர்.





அங்கு மடைவைத்து வழிபாடுசெய்தபின்னர் குன்றினடியில் வைக்கப்பட்டிருக்கும் சுவாதியம்மன் மடை மற்றும் பாலவதனன் மடை என்பவற்றிற்கு பூசைசெய்து வழிபாடியற்றுவர். அதன்பின்னர் குன்றின் கிழக்காக முன்புறத்திலுள்ள பண்டைய நாதனை வில்லைகட்டிச் சடங்கில் முக்கியத்துவம்பெற்ற வதனமார் பாறையில் வழிபாடு செய்தபின் கல்லடிப் பிள்ளையார் குன்றினைநோக்கிச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வதனமார் சடங்கு இடம்பெறும் பிள்ளையார் குன்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் குன்றில் அம்மாள், பாலவதனன், பூசகர் உட்பட சில ஆலய நிர்வாகிகளும் அக்குன்றிலேறுவர். அங்கு மடைவைத்து குன்றின் பிளவுள் அமைந்துள்ள ஒளிவடிவிலான தெய்வீகச் சிலைக்கு பாலபிஷேகம் செய்வர். அதன்பின்னர் பாலவதனன் உருக்கொண்டு ஆடத்தொடங்குவார். அதன்போது அம்மன் கயிறு, தண்டு என்பவற்றை பாலவதனனின் கையில்கொடுத்து மாடுகளை மேய்த்து வரச்சொல்லி அனுப்புவார். அதன்போது பாலவதனன் மாடுகளை மேய்ப்பதுபோல் அபினயித்து பின்னர் களைப்பில் தான் உறங்குவதைப்போல் வெளிப்படுத்துவார். அந்நிலையில் ஒரு வெள்ளைநிறக் கடாவானது அவரை கொம்புகளால் வெட்ட அவர் இறந்துவிட்டவர்போல் பேச்சு மூச்சற்றுக் கிடப்பார். பின்னர் அம்மன் அங்குவந்து பாலவதனனை உயிர்ப்பித்து பூசை இடம்பெறும் இடத்துக்கு அழைத்துச் செல்வார். அதன்பின்னர் பாலவதனனின் கையில் ஒரு சிறு கோடரியைக் கொடுத்து தேனெடுத்துவருமாறு அம்மன் பணிப்பார். அவரோ குன்றின் மேலுள்ள மரங்களில் தேன்கூட்டினை தேடுவதுபோல் சுற்றிச் சுற்றிப் பாவனைசெய்து பின்னர் ஒருமரத்தில் தேன்கூட்டினைக் காண்பவர்போல் மகிழ்ச்சியில் பாவனைசெய்து அதனை வெட்டுவார். அதன்போது தேன் பூச்சிகள் அவரைக் கொட்டுவதை சித்தரிக்கும் தன்மையில் கைகால்களை உதறியும் வாயால் ஊதியும் ஆ.. ஊ.. எனச் சத்தமிட்டும் அவதியுற்று அங்குமிங்குமாக ஓடி அந்நிகழ்வை வெகு கச்சிதமாகச் சித்தரிப்பார். அந்நிகழ்வு முடிவுற்ற பின்னர் அம்மன் அவர் கையில் வில்லம்பினைக் கொடுத்து வேட்டையாடிவருமாறு பணிப்பார்.

வேட்டையாடும் நிகழ்வு முடிவுற்றதும் பின்னர் அவரது கையில் அம்மன் கயிற்றினைக் கொடுத்து குழுமாடு பிடித்துவருமாறு பணிப்பார். அதன்போது பாலவதனன் குழுமாட்டைத் தேடுவதும் அதனைக் கண்டபின்னர் அங்குமிங்குமாகப் பதுங்கியும் மறைந்திருந்தும் பின்னர் குழுமாட்டைக் கயிறுவீசிப் பிடிப்பதாகப் பாவனைசெய்வார். அதன்போது கமுகம் பாளையில் வாழைப்பழத்தைச் சேர்த்துக்கட்டி மாட்டினைக் கட்டுவதாகப் பாவனைசெய்து சந்தோச மிகுதியால் அங்கு பெருந்திரளாகக் குவிந்திருக்கும் மக்களைநோக்கி கைகளை உயர்த்தியவாறு ஒலியெழுப்பி ஆடியோடி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். இதன்பின்னர்அம்மனும் பூசகரும் பால்குடத்தால் அவரை அபிஷேகம் செய்வர். அதன்பின்னர் சடங்கின் இறுதி நிகழ்வாக எல்லா முதன்மை வதனமாரையும் நினைவுகூரும் தன்மையில் அவர்களது பெயர்கூறி அங்கு அவர்களுக்கு பால்பள்ளயம் கொடுக்கப்படும். நாதனையில் இடம்பெறும் வதனமார் சடங்கே பரந்த அளவில் மிகுந்த முக்கியத்துவம்பெறும் தன்மையில் மட்டக்களப்புப் பகுதிகளில் இடம்பெறும் வதனமார் சடங்குகளில் பாடப்படும் வதனமார் காவியத்தின் இறுதிப் பாடல் இதனை மெய்ப்பிப்பதைக் காணலாம்.


திருந்துமங் கலவீர வதனமார் வாழி
சிவசமய மைந்தெழுத் தெப்போதும் வாழி
பொருந்துபூ சனைசெய்கட் டாடிமார் வாழி
பூலோக நற்பதிகள் நீடூழி வாழி
அருந்தவம் செய்கின்ற முனிவர்கள் வாழி
அழகுசெறி மட்டக் களப்புநகர் வாழி
வருந்துய ரகற்றியருள் பாலிக்கும் நாதனை
மகமாரி பொற்பதம் வாழிவா ழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவவழிபாடு

பண்டைய மட்டக்களப்புத் தேசத்தில் சிவவழிபாடு முதன்மைபெற்றிருந்த காலத்தே வெல்லாவெளிக் கிராமமும் அந்தவழிபாட்டினை உள்வாங்கியிருந்தமை பெறப்படும் பல்வேறு தகவல்களால் உறுதிசெய்யப்படுகின்றன. இவ்வழிபாட்டின் தோற்றுவாய் குறித்து சரியாகக் கண்டறியமுடியாதுபோனாலும் போர்த்துக்கேயரால் இவ்வாலயம் அழிக்கப்பட்டபின்னர் அழிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்டு 1850 காலகட்டத்தில் கட்டப்பட்ட பிள்ளையார் ஆலயத்தில் பொருத்தப்பட்டுள்ள கல்லினாலான மூன்று கதவுநிலைகளையும் கொண்டு கி.பி 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இவ்வாலயம் கட்டப்பட்டிருக்கலாம் என முடிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தன்மையில் இப்பிரதேசத்தே சோழராட்சியின் செல்வாக்கு நிலைபெற்றிருந்த தன்மையில் இது சோழராட்சிக்காலக் கோவிலாகவும் ஆய்வுகளில் நிலைநிறுத்தப்படுகின்றது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறு பராயத்தே அவதானிப்புக்குள்ளான கோவில் வளவில் கிடந்த பரந்த ஆசனக் கல்லும் சுமார் இரண்டடி சதுர வடிவிலான பல கற்துண்டங்களும் கோவில் வளவின் தென்கிழக்கு மூலையில் அழிபாடுற்றுக்கிடந்த பெரிய மரக்கொட்டுப்பதித்து சுற்றவர சதுரவடிவில் கட்டப்பட்டிருந்த தீர்த்தக்கிணறும் 1958ல் அவ்விடத்தில் வெல்லாவெளி கிராம முன்னேற்றச் சங்கம் புதிய குடிநீர்க் கிணறொன்றினை அமைத்தபோது அங்கு கண்டெடுக்கப்பட்ட சில கோவிலுக்குரிய வெண்கலப் பொருட்கள் மற்றும் பண்டைய நாணயங்கள் போன்றவையும் இவ்வாலய இருப்புத்தொடர்பில் வலுவான சான்றுகளாய் அமைகின்றன. அண்மையில் இங்கு தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்தபோது சிதைந்த பல கற்துண்டங்கள் பெறப்பட்டன. அத்தோடு இவ்வாலயம் அமைந்த வளவிலிருந்து கிழக்குப்புறமாக சுமார் நூறு மீற்றர் தூரத்தில் நாதனை ஆற்றங் கரையில் அமைந்திருந்த சோமசுந்தரர் இறக்கத்தடியே (சோமுந்தர இறக்கத்தடி) இவ்வாலயத்திற்கான தீர்த்தக்கரையெனவும் இவ்வாலய மூலவர் சோமசுந்தரர் என அழைக்கப்பட்ட தன்மையில் அப்பெயரினை அவ்விடம் பெற்றதெனவும் எமது கள ஆய்வுகள் வெளிப்படுத்தின.






சோமசுந்தரர் (சோமுந்தர) இறக்கத்தடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறிந்த வரையில் இறங்கு படிபோல் அமைந்திருந்த ஆற்றின் கரையானது கடந்த போர்க்காலச் சூழலில் மக்கள் நடமாட்டமற்று தூர்ந்துபோய் புல்புதர் மற்றும் நீர்த்தாவரங்களால் மூடுண்டு கிடக்கின்றது.





கிடாரம்போட்ட பள்ளம்

அதேபோல் அவ்விடத்தையண்டியதான அன்று மிகுந்த ஆழமாக இருந்த 'கிடாரம் போட்ட பள்ளம்' மற்றுமொரு சான்றாக அமைகின்றது. போர்த்துக்கேயர் ஒவ்வொரு ஆலயமாக அழித்து வெல்லாவெளியை நோக்கி வந்தபோது ஆலயத்திலிருந்த தெய்வச் சிலைகளையும் முக்கிய புனிதப் பொருட்களையும் கிடாரங்களில் போட்டுக்கட்டி நாதனை ஆற்றின் ஆழமான அவ்விடத்தில் கொண்டு வைத்ததாகவும் அதனாலேயே அவ்விடம் கிடாரம் போட்ட பள்ளம் என அழைக்கப்படுவதாகவும் அவ்விடத்திற்கான வாய்மொழி வரலாறு கூறுகின்றது. அவ்விடத்தை பூதமானது பாதுகாத்துவருவதான நம்பிக்கையின்பால் நாளாந்தம் நாதனையில் நீராடும் மக்கள் அவ்விடத்தை தவிர்த்தேவந்துள்ளனர்.

இவ்வாலயம் தொடர்பில் நமது ஆய்வுகள் ஒருபுறமிருக்க ஈழத்தின் பண்டைய ஆலயங்கள் தொடர்பில் பரவலாக ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்கள் இவ்வாலயம் தொடர்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு அது தொடர்பான கட்டுரையினை 29.04.2012, 05.05.2012 ஆகிய திகதிகளில் தினபதி பத்திரிகையிலும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதனை வில்லைகட்டிச் சடங்கு



வதனமார் பாறை

நாதனை வில்லை கட்டிச் சடங்கானது மட்டக்களப்புத் தேசத்தின் மந்திர தந்திர சாகசங்களை வெளிப்படுத்தும் தேசியத்தன்மைகொண்ட தனித்துவம்மிக்க ஒரு சிறப்புவாய்ந்த வழிபாடாகும். நாதனைப் (வெல்லாவெளி) பிரதேசத்தில் வதனமார் எனப்படும் இடையர் சமூகத்தின் ஆதிக்கமும் சிறப்பியல்புகளும் மங்கிப்போன கி.பி 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வில்லைகட்டிச் சடங்கானது தோற்றம்பெற்றிருக்கலாமென கிடைக்கின்ற தகவல்களைக்கொண்டு அனுமானிக்க முடிகின்றது.

நாதனை வில்லைகட்டிச் சடங்கின் பெயர்க்காரணம் குறித்து இருவேறு தகவல்கள் வெளிவருகின்றன. நாதனையிலுள்ள சுவாதியம்மன் குன்றுக்கு முன்னால் இருந்த வில்லை மரத்தில் குழுமாடு கட்டுவதைக் காரணப்படுத்தி இப்பெயர் வந்திருக்கலாம் என ஒரு கருத்தும் நாதனை வில் என்பது நாதனைக் குளத்தை குறிப்பதாகும் என்பதோடு நாதனைக் குளத்தில் (நாதனை வில்லையில்) குழுமாடு கட்டும் சடங்காக இது அமைவதால் இப்பெயர் ஏற்படக் காரணமாயிற்று என மறு கருத்தும் நிலவவே செய்கின்றது. எது எப்படி அமையினும் இவ்வில்லை கட்டிச் சடங்கானது நாதனைக்கு மட்டுமன்றி மட்டக்களப்புத் தேசத்திற்கே பெருமைசேர்த்த ஒரு தேசிய விழா என்பதனை மறுப்பதற்கில்லை.

கண்டியரசன் கீர்த்திசிறி ராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தில் (1747- 1782) எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் நாடுகாடுப்பற்று பரவணிக் கல்வெட்டில் நாதனை வில்லைகட்டிச் சடங்கினைக் குறிப்பிடும் அம்சங்கள் வரலாற்றுப் பதிவுக்குள் உள்வாங்கத்தக்கவையாகும். அக்கல்வெட்டில் முக்கியப்படுத்தப்படுகின்ற இராசபக்ஷ முதலியாரை பேராதனை அப்பு என்பான் பேய்களை ஏவிக் கொன்றதாகவும் இதனையறிந்த மட்டக்களப்பின் ஏழு வன்னியமாரும் ஒன்பது முதலிமாரும் கூடிப்பேசி பேராதனை அப்புவைக் கொல்லத் திட்டமிட்டதாகவும் இதனை அறிந்த பேய்கள் இத்தகவலை பேராதனை அப்புவிடம் தெரிவிக்க அவன் அவர்கள் அனைவரையும் உடனடியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லுமாறு பேய்களைப் பணித்ததாகவும் இதனை நாதனை வில்லைகட்டிச் சடங்கில் நின்ற இராசகுலதெய்வமானது அறிந்துகொண்டதாகவும் நாதனை வில்லைகட்டிச் சடங்கு முடிவுற்றதும் இராசகுலதெய்வம் யானையுருவாகச் சென்று பேராதனை அப்புவை அடித்துக்கொன்றதாகவும் அதில் குறிப்பிடப்படும் தன்மையில் நாதனை வில்லைகட்டிச் சடங்கினை அறிந்துகொள்ளும் முதல் தகவலாக இது அமைகின்றது.

இது தொடர்பில் 1972ல் கவிஞர் எருவில்மூர்த்தி அவர்களுடன் சிலதடவைகள் மட்டக்களப்பு – சிங்களவாடியில் நாம் சந்தித்துப் பேசிய பெரியார் முருகுப்பிள்ளை (கல்வியாளர் திரு.மு.பவளகாந்தன் அவர்களது தந்தையார்) அவர்கள்மூலம் பெறப்பட்ட தகவல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவையாகவும் நம்பகத்தன்மை மிக்கவையாகவும் உள்ளன. அவர் தனது சிறுவயதில் தனது பாட்டனாருடன் குதிரைவண்டியில் மண்டூரிலுள்ள தங்களது உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லும்போது நாதனைப் பிள்ளையாரடியில் சாமி கும்பிட்டபின்னர் அங்கிருந்த தேனீர்க் கடையில் சுவையான பாலப்பமும் பசுப்பாலும் உண்டதாகவும் அவ்வேளையில் அவரது பாட்டனார் நாதனை வில்லைகட்டிச் சடங்கு இடம்பெறும் பரந்த நிலப்பரப்பைச் சுட்டிக்காட்டி இத்தகவல்களைக் கூறியதாகவும் குறிப்பிட்டார். (இத்தகவல்கள் வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய அமுதவிழா மலரிலும் வெல்லாவெளி வரலாறும் பண்பாடும் நூலிலும் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன)

வில்லைகட்டிச் சடங்கானது ஆண்டுதோறும் முன்மாரி அறுவடை முடிவுற்றபின்னர் இடம்பெறும். கோடைகாலமான மழைகுறைந்த இந்நாட்களில் கல்லடிப் பிள்ளையாரடி தொடக்கம் நாதனைப் பிள்ளையாரடி வரையான விரிவுபட்ட நாதனை ஆறு பெரிய குளம்போல் காட்சிதரும். இத்தன்மையில் நாதனைக்குளம் என்ற பெயரில் இது இன்றும் அழைக்கப்படுவதுமுண்டு. இன்று வயல்நிலங்களாலும் பல ஆண்டுகாலம் செங்கல் உற்பத்தி செய்யப்பட்டதால் குன்றும் குளியுமாக மாறிப்போன இப்பகுதி அன்றைய காலத்தே நாவல் மரங்களால் சூழப்பட்ட நிழல்நிறைந்த அழகிய பரந்த நிலப்பகுதியாகவே காணப்பட்டது. இக்காலப் பகுதியில் நீர் பருகுவதற்காக குழுமாடுகள் எனப்படும் காட்டெருமைகள் கூட்டம்கூட்டமாக நாதனைக் குளத்தை நாடி வரும். இதில் நன்கு கொழுத்த கடாவைப் பிடித்துக்கட்டுதலே வில்லைகட்டிச் சடங்கின் முக்கிய அம்சமாகும். இதனோடு கூடியதாக மட்டக்களப்புப் பிரதேசத்திற்குரிய மந்திர வித்தாண்மையை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமையும்.



குழுமாடுகள் அன்று நீரருந்தவரும் நாதனைக் குளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வில்லைகட்டிச் சடங்கு இடம்பெற்ற பரந்த வெளி

சில வேளைகளில் நாற்பது நாட்கள்வரை நீடிக்கும் இந்நிகழ்வின் செயல்திட்டங்கள் பற்றி நாடுகாடுப் பற்று, கரவாகுப் பற்று, மண்முனைப் பற்று, ஏறாவூர்ப் பற்று ஆகிய நான்கு தேசத்து வன்னிமைகளால் நாதனையில் கூடி தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட நாளில் நான்கு வன்னிமைப் பிரிவுகளிலிருந்தும் மாடுபிடிப்பதில் வல்லமைபெற்ற இருபது பேர்கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டு நாதனைக்கு அழைத்துவரப்படும். குழுக்களின் தலைவராக வருபவர் அப்பிரதேசத்தின் தலைசிறந்த மந்திர வித்தாண்மையாளராக இருப்பார். அதனைவிட நான்கு வன்னிமைகளாலும் தெரிவுசெய்யப்பட்ட மட்டக்களப்புத்தேசத்தின் தலைசிறந்த மந்திரவாதியொருவரும் அந்நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்படுவார். ஐந்து மந்திரவாதிகளுக்கும் தனித்தனியாக ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாதவாறு அவர்கள் தங்குவதற்கு ஓலைக்கொட்டில்கள் அமைத்துக்கொடுக்கப்படும். அவர்கள் அக்கொட்டில்களில் தங்கிவிடுவர். இதன்பின்னர் 19 பேரைக்கொண்ட நான்கு குழுக்கழும் சுவாதியம்மனுக்கு கமுகம்பூ மடைவைத்து வழிபாடுசெய்த பின்னர் அவர்கள் கொண்டுவந்த உறுதியான நறுபுளிய நாரால் திரிக்கப்பட்ட கயிறுகளுடன் குழுமாடுபிடிக்கப் புறப்படுவர்.

இக்குழுக்கள் தனித்தனியாக குழுமாட்டினை பிடித்துக்கட்ட முனையும்போது அக்குழுத் தலைவரான மந்திரவாதி மறைவிலிருந்தவாறே தனது வித்தாண்மையினால் அவரது குழுவினருக்கு வேண்டிய வல்லமையைக் கொடுத்துக்கொண்டிருக்க ஏனைய மூன்று மந்திரவாதிகளும் தங்களது மந்திர சக்தியால் அதனைத் தடுத்துக்கொண்டிருப்பர். ஒவ்வொரு நாளும் காலைதொடக்கம் மாலைவரை நடைபெறும் இவ் வீரவிழாக்காண பிரதேசம் சார்ந்த பெருமளவு மக்கள் குழுமுவர். இவர்கள் சற்றுத் தொலைவில் நாவல்மர நிழலில் கூட்டம்கூட்டமாகத் தரித்திருப்பர். இறுதியாக ஏதேனும் ஒரு குழு பலநாட்கள் மேற்கொண்ட தொடர் முயற்சியில் நன்கு கொழுத்த எருமைக்கடாவை அடக்கி சுவாதியம்மன் குன்றின்முன்னால் காணப்படும் வதனமார் பாறையில் உயர்ந்து வளர்ந்திருந்த வில்லைமரத்தில் கட்டிவிடும். இதன்பின்னர் வன்னியர்களால் அக்குழு வெற்றிபெற்றதாக அறிவித்து அவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்னர் மறுநாட்காலையில் கல்லடிப் பிள்ளையாருக்கு வழிபாடியற்றுவதற்கான பொங்கல்விழா விநாயகப் பானை வைத்தல் எனும் சடங்கு நிகழ்வாக இடம்பெறும். இதற்கான பெரிய பானை பச்சைக் களிமண்ணில் வனையப்பட்டிருக்கும். பானையை அடுப்பில்வைத்து பாலூற்றி பொங்க முற்படும்போது குழுத்தலைவர்களாக வந்த நான்கு மந்திரவாதிகளும் தங்கள் வித்தாண்மையினால் பானையைப் பொங்கவிடாது தடுப்பர். இதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் தலைமை மந்திரவாதி தனது வித்தாண்மையை நிலைநிறுத்தும்பொருட்டு தனது மந்திர சக்தியால் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து பானையைப் பொங்கவைப்பார். அதனுடன் கூடியதாக பொதுமக்களும் பெருமளவு மோதகங்கள்செய்து பொங்கலிடுவர். கல்லடிப் பிள்ளையாருக்கு பொங்கல்படைத்து வழிபாடுசெய்தபின்னர் அங்கு வந்த அனைவருக்கும் மோதகம் பொங்கலுடன் அமுதுச் சோறும் (அன்னதானம்) வழங்கப்படும். அதில் தலைமை மந்திரவாதியும் வன்னியர்களால் கௌரவிக்கப்படுவார். இதன் தொடர்ச்சியாக இன்றும்கூட நாதனை கல்லடிப்பிள்ளையாரடியில் நாளாந்தம் மோதகப் பொங்கல் இப்பிரதேசமக்களால் வைக்கப்படுவதை நம்மால் அவதானிக்கமுடியும். மட்டக்களப்புத்தேச மந்திரவித்தாண்மையானது இன்றும்கூடப் பெருமையாகப் பேசப்படுவது அறியப்பட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு வழிபாடு




வெல்லாவெளி விஷ்ணு வழிபாடு சுமார் நூறு ஆண்டுகளை அதன் தோற்றுவாயாகக் கொண்டுள்ளது. பெரியநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி அருமைப்பெருமாள் அவர்கள் 1908ல் இங்கு திருமணம்புரிந்தவராக அறியப்படுகின்றார். பெரியநீலாவணையில் சுமார் 500 ஆண்டுகளுக்குமேல் வழிபாடாக மிளிர்ந்த விஷ்ணு வழிபாட்டினை இங்கு அறிமுகம்செய்த பெருமை அவரையே சாரும். அன்றைய ஆலய எல்லையின் தென்மேற்கில் பரந்து விரிந்த அரசமர நீழலில் இவ்வழிபாடு ஆரம்பமானது. ஆலயத்தின் தென்கிழக்காக ஒரு சிறு குடிலில் வாழ்ந்தவரான சாமியம்மா என ஊரவரால் அன்போடு அழைக்கப்பட்ட கடவுள் பக்தையான மூதாட்டியார் பழனித்தம்பி தெய்வானை அவர்கள் ஊராரின் உதவியுடன் இவ்வாலயத்தை மடாலயமாக 1917ல் அமைத்துக்கொடுக்க அதன் பூசைபுனற்காரங்கள் முறையாக இடம்பெறலாயின. 2010ல் ஆலய நிருவாகத்தின் முழுமுயற்சியில்ஆலய எல்லைக்குள் மகாவிஷ்ணு ஆலயம் மிக அழகாக வடிவமைக்கப்பட்டு வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன. வருடம்தோறும் கிருஷ்ன ஜெயந்தியை ஒட்டியதாக ஏழு நாட்களை உள்ளடக்கிய திருவிழாவும் இங்கு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைசார் வழிபாட்டு முறைகள்

வெல்லாவெளிக் கிராமத்தைப் பொறுத்தவரை அனைத்து முன்னீடுகளும் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. ஊரார் எவருக்கும் நோய்நொடியென்று வந்துவிட்டால் முதலில் செல்வது அம்மனின் ஆலயமாகவேயிருக்கும். அங்கு முதல் மருந்தாக வேப்பிலையும் விபூதியும் தீர்த்தமுமே கொடுக்கப்படும். அதேபோல் வயலில் பூச்சி புழுக்கள் மற்றும் பாரிய தொற்றுக்கள் ஏற்பட்டால் இளநீரைக்கொண்டு கோவிலில் வைத்து அதனுள் ஆலய அர்ச்சகர்மூலம் தீக்குழிச் சாம்பலைக் கலந்து மந்திரம் செபித்தபின் தலவிருட்சமான வேம்பின் குழையால் அதனை தொட்டு வயலில் விசிறுவர். வருடாந்தச் சடங்கின்போது அம்மன் ஊர்காவல் - மனைகாவல் வரும்போது அனைவரும் அம்மனால் ஊட்டப்படும் வேப்பிலையையும் விபூதியையும் கூடவே தீர்த்தத்தையும் தவறாது உட்கொள்ளவேண்டுமெனும் எழுதாவிதி ஊராரால் கட்டாயமாகப் பின்பற்றப்பட்டதாகவே இருந்துவந்துள்ளது. அத்தோடு வாழுகின்ற மனையில் துன்ப துயரங்கள் ஏற்படாவண்ணமும் நோய்நொடிகள் அண்டாதிருக்கவும் பில்லி சூனியம் மற்றும் துட்ட தேவதைகளிடமிருந்து பாதுகாப்புத் தேடவும் ஆலயத் தலவிருட்சமான வேப்பிலையை வளவின் கடப்பிலோ அன்றேல் வீட்டின் முகப்பிலோ செருகிவைப்பர்.



அதேபோல் ஆலயத்தின் தலவிருட்சமான வேம்புவில் அம்மனுக்கு நேர்த்தி கட்டுதல் மிகுந்த முக்கியத்துவம் பெறும். கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், வெளிநாட்டுப் பயணம், நோய் நொடி மற்றும் துன்ப துயர் போக்குதல், எதிரிகளை அடக்குதல், களவு கொடுத்தவை அல்லது தொலைந்து போனவற்றை மீளப் பெறல் என அவை அமையும். இதன்போது தூய்மையான வெள்ளைத் துணியை மஞ்சள் நீரில் நனைத்து அதில் நாணயக் குற்றியை முடிந்து ஆலயத்தை மும்முறை வலம்வந்தபின்னர் அம்மனைத் துதித்து தங்களது வேண்டுதல் நிறைவேறினால் சடங்கின்போது அம்மனுக்கு காணிக்கையாக “இன்னதின்னது” கொடுப்பதாக உறுதிகூறி தலவிருட்சத்தின் அதற்கான கிளையில் கட்டிவிடுவர். நேர்திக்கான காணிக்கை உயிர் சம்பந்தமானதெனில் அது ஆடு, மாடு, கோழியாகவோ ஏனையவையெனில் ஆடை, அணிகள், பணம் மற்றும் பொருட்களாகவோ அமையலாம். சிலர் கட்டிட வேலைகளையும் நேர்த்தின்கான காணிக்கையாகவைத்து நிறைவேற்றியுள்ளனர். இங்கு நேர்த்தி வைத்தல் பெரும் நன்மை பயப்பதாகவே அனுபவரீதியாக உணரப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துமாரியம்மன்

## திருத்தல வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






முன்னைய ஆலயம்



இன்றைய ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை போர்த்திய வயல்நடுவே – அன்னை
இச்சா சக்தியாய் வீற்றிருந்தாள்
வெல்லா வெளிமுத்து மாரியென்றே – அவள்
செல்லப் பெயரும் ஏற்றிருந்தாள்

இங்கு கோவில்கொண்டுள்ள அன்னை மகமாரியின் பெருமை விபரிக்கமுடியாததாகும். பச்சை போர்த்திய வயல்நடுவே இச்சா சக்தியாய் வீற்றிருந்து அருள்பாலிப்பவள் அவள். வெல்லாவெளி மாரியம்மன் வழிபாடு என்பது அதன் பண்டைய சுவாதியம்மன் வழிபாட்டோடு தொடர்புபட்டதொன்றாகவே ஆய்வுகளில் பதிவாகியுள்ளது. எமது முன்னோரின் சுவாதியம்மன் வழிபாடு ஒரு நீண்டகால மரபுவழிப்பட்ட வழிபாடாகவே கொள்ளப்படுகின்றது. புராணக் கதைகளின் வெளிப்பாட்டில் சுவாதியம்மன் அல்லது மாரியம்மன் வழிபாடு என்பது மகாவிஷ்ணுவின் மறுஉருவ வழிபாடாகவே அடையாளப்படுத்தப்படுவதைப் பார்க்கின்றோம். 'கண்ணனார் உருவம் மாரித் தாயருள் காக்கவேண்டும்' எனும் பாடலடி இதனைத் தெளிவுறுத்தும். வெல்லாவெளி மாரியம்மன் சடங்கின் ஏழாம் நாள் நிகழ்வில் இது சித்தரிக்கப்படுவதையும் நம்மால் அவதானிக்கமுடியும்.

வெல்லாவெளி முத்துமாரியம்மன் வழிபாட்டின் தோற்றுவாய்குறித்து மட்டக்களப்பு சைவக் கோவில்கள், வெல்லாவெளி வரலாறும் பண்பாடும் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள தகவல்களையும் வழிவழியாக ஊர்ப்பெரியார்கள் மூலம் வழங்கப்பட்டுவந்த வாய்மொழித் தகவல்களையும் ஒப்புநோக்கிப் பதிவுசெய்வதே பொருத்தமானதாகும்.

பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு நாதனை கல்லடியில் அடுத்தடுத்த இரு மலைக் குன்றுகளில் ஒன்றில் விநாயகரது கற்சிலையைச் செதுக்கியும் மற்றையதில் மாரியம்மனின் மறுவுருவான சுவாதியம்மனை உருவகப்படுத்தியும் வழிபாடுசெய்து வந்தனர். அங்கு நாதனை ஆறு வளம்செய்ய - பாலும் தேனும் கனிவகைகளும் மலிந்து காணப்பட- தொடராக மக்கள் குடியேறலாயினர். காலப்போக்கில் அங்கு ஏற்பட்ட கொள்ளை நோயினால் அடுக்கடுக்காய் பலர் மாண்டுபோயினர். இதனால் கவலையுற்ற ஊரவர்கள் வேள்விகள் செய்தும் பொங்கலிட்டும் மாறிமாறி தெய்வங்களை வழிபாடுசெய்தும் பலனேதும் கிட்டாமையால் நாதனையில் ஒருபக்கம் குழுவாக வாழ்ந்த வதனமாரிடம் இதுபற்றிக் கூறலாயினர். பண்டைய வழிபாட்டிலிருந்த சுவாதியம்மனின் மறுவடிவாக முத்துமாரியம்மனை நம்பிக்கையுடன் தொடர்ந்து வழிபாடு செய்யுமாறு அவர்களால் கூறப்பட்ட ஆலோசனைப்பிரகாரம் ஊரின் ஒருபுறத்தில் (அது பெரிய வளவு என்று இன்றைய ஆய்வுகளில் அடையாளப்படுத்தப்படுகின்றது) கொத்துப் பந்தலமைத்து முத்துமாரியைக் குலதெய்வமாக வரித்து வழிபாடியற்றலாயினர்.

இவ்வழிபாடு மிகுந்த நன்மையளித்தமையினால் 1750க்குப் பிற்பட்ட காலகட்டத்தில் தற்போது ஆலயமமைந்துள்ள இடத்தில் சிறிய அளவில் ஒரு கோவிலமைத்து சிறப்பாக வழிபாடிற்றினர். அதன் பின்னர் 1850 வாக்கில் முறைப்படி அம்மனுக்கு கோவிலமைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 1967ல் மாரியம்மன் ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டு தென்புறமாக அமைந்திருந்த மூலஸ்தானம் சற்று பின்னோக்கி நகர்த்தப்பட்டு புதிய ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது. இரு ஆண்டுகளில் கட்டிட வேலைகள் நிறைவடைந்த நிலையில் 1969ல் குடமுழுக்கும் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

1983 பங்குனித் திங்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்துசமயத் திணைக்கள வெளியீடாக வெளிவந்த – வித்துவான் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்களால் எழுதப்பட்ட 'மட்டக்களப்பு சைவக்கோவில்கள்' (பக்:164 -167) நூல் இவ்வாலயம் குறித்து பின்வருமாறு தகவல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியுள்ளது. அதிலுள்ள பதிவுகளை அப்படியே இங்கு மீள்பதிவுசெய்வது பொருத்தமானதாகும். இந்நூலாசிரியர் வெல்லாவெளிக்கிராமத்தின் அயல் கிராமமான மண்டூரைப் பிறப்பிடமாகக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

“1820 ஆம் ஆண்டளவில் சிறிய அளவிலான ஆலயத்தை நிருமாணித்து ஸ்ரீ முத்துமாரியம்மனை வழிபடத்தொடங்கினர். பின்னர் சுமார் 25 ஆண்டுகள் சென்றதும் சூழவர வயல் நிலங்களையும் முற்பக்கத்தில் அழகிய தாமரைத் தடாகத்தையும் கொண்டிருந்த அதே இடத்தில் அம்மனுக்கு சிறப்பான முறையில் ஆலயத்தை நிருமாணிக்கத் திட்டமிட்டார்கள். அன்பர்களின் மன எண்ணப்படி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் எழுந்தது. அவ்வாலயத்தையண்டி சிவன், பிள்ளையார், முருகன், விஷ்ணு, நாகதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கும் ஆலயங்கள் தனி அன்பர்களின் உதவியினாலும் கோவில் பணத்தினாலும் எழுப்பப்பட்டன. 1850இல் திட்டமாக இடம் தீர்மானிக்கப்பட்டு ஆலயம் எழுப்பப்பட்டபின்னர் 1917ஆம் ஆண்டளவில் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. அதன் பின்னர் 1967ஆம் ஆண்டில் இவ்வாலயம் முற்றாக இடிக்கப்பட்டு மூலஸ்தானம் முன்பிருந்த இடத்திலிருந்து சிறிது பின்னகர்த்தி கோயிலைவிட்டு விசாலித்து நிருமாணித்தார்கள். 1968ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றதோடு கோயில் திருப்பணி நிறைவேறிற்று எனலாம்.

ஆரம்பகாலத்தில் ஆண்டுக்கு ஒருமுறையே கதவு திறக்கப்பட்டு உற்சவம் நடைபெற்றுவந்தது. அதன் பின்னர் உச்சிக்காலப் பூசையும் கடந்த 20 ஆண்டுகளாக (1962) வெல்லாவெளி இந்துசமய அபிவித்திக் கழகத்தின் சார்பில் வெள்ளிக்கிழமைதோறும் கூட்டுப்பிரார்த்தனையுடன்கூடிய மாலைநேரப் பூசையும் இடம்பெற்றுவருகின்றது. பூசைமுறைகள் மற்றைய மாரியம்மன் ஆலயங்களில் நடைபெறுவதைப்போன்றே நடைபெறுகின்றன.

வருடம்தோறும் ஆனித்திங்கள் பூரணை தினத்திற்கு பத்து நாட்களுக்கு முந்தியதாகவரும் மகம், பூரம், உத்தரம் எனும் ஏதாவதொரு நட்சத்திரத்தில் கும்ப ஸ்தாபனத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்களுக்கு உற்சவம் நடைபெற்று மூலம் அல்லது கேட்டை நட்சத்திரத்தில் கும்பம் சொரிதலுடன் திருவிழா முடிவடையும். அதில் சிறப்பம்சமாக மூன்றாம் நாள் தொடக்கம் ஆறாம் நாள் வரையும் மாரியம்மன் வீதியுலா வருவதும் ஏழாம் நாள் நாதனைப் பிள்ளையாரடிக்கும் நாச்சிமார் கல்லடிக்கும் செல்லுதலும் அங்கு வதனமார் மற்றும் சுவாதியம்மன் பால்பள்ளயம் ஏற்றலும் 8ஆம் நாள் கம்பம், தவநிலை, தீக்குளிப்பு என்பனவும் 9ஆம் நாள் பள்ளயம் எனப்படும் மடைச்சடங்கும் 10ஆம் நாள் தீர்த்தமும் இடம்பெறும்.

ஆண்டு உற்சவ காலத்தில் மாரியம்மனுக்கு சடங்குவைப்பதுவும் சடங்கின்போது பங்குபெறும் பலர் தெய்வம்ஏறி உருக்கொண்டு ஆடுதலும் கட்டுச்சொல்லுதலும் இடம்பெறும். இதில் தலைமைக் கட்டாடியாரிடம் (தாயம்மன்) கட்டுக்கேட்டல் அல்லது குறிகேட்டல் எனப்படும் நிகழ்ச்சிகள் கோயில் பூசகர்களால் மிகவும் முக்கியமானதாக கருதப்படும். கோயில் பூசகர்கள் அவ்வூரைச்சேர்ந்த சைவர்களே என்பது நியதியாகும். இப்போது குருக்களைக்கொண்டு பூசனைசெய்யும் ஒழுங்குமுண்டு.

காலப்போக்கில் ஆலய நிருவாகத்தினரும் வசதிபடைத்த அன்பர்களும் இணைந்து ஆலயங்களைப் புதுப்பித்தும் அழகுபடுத்தியும் வந்தனர். அதன்பின்னர் நாகதம்பிரானுக்கான ஆலயத்தினை திருமதி பூமணி சிவபாலன் அவர்களும் நவக்கிரக கோவிலை திரு.கந்தசாமி சுதாகரன் அவர்களும் மணிக்கோபுரத்தினை திரு.மாணிக்கப்போடி குருபரன் அவர்களும் உபயமாக அமைத்துக் கொடுத்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த போர்க்காலச் சூழலில் வெல்லாவெளிக் கிராம மக்கள் அடிக்கடி நிகழ்ந்த குண்டுவீச்சுக்கும் செல்லடிக்கும் துப்பாக்கிச் சமருக்கும் இடர்ப்பட்டு நூற்றுக்கும் மேலான உயிர்களைக் காவுகொடுத்தும் சொத்துச்சுகம் அனைத்தையும் இழந்த நிலையில் அதன் உச்சக்கட்டமாக 1990 முதல் 1994 வரை நிரந்தர இடப்பெயர்வைச் சந்தித்தபோது ஆலயத்தில் நித்திய பூசைகளோ வருடாந்தச் சடங்கோ இடம்பெறாது போயிற்று. அதன்பின் 1994ல் ஆலயத்தில் திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் நிகழ்ந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நித்திய பூசைகளும் வருடாந்தச் சடங்கும் இடம்பெறலாயிற்று. இக்காலத்தில் இடம்பெயர்ந்தவர்களில் சுமார் முக்கால் பங்கினர் வெவ்வேறு இடங்களில் நிரந்தரமாகவே தங்கிவிட்ட நிலையிலும் ஆலய நடைமுறைகள் தங்குதடையின்றி இடம்பெறுவது அன்னை மகமாரியின் அருட்கடாட்சம் என்றே கூறவேண்டும். இம்மக்கள் வெவ்வேறிடங்களை தங்களது வாழ்விடமாக்கிக்கொண்டபோதிலும் அன்னை முத்துமாரியைத் தங்கள் நெஞ்சில் தாங்கியவர்களாகவேயுள்ளனர்.

ஊர்விட்டுப் போனாலும் சிவமுத்துமாரி – உன்
உறவுவிட்டுப் போகாதம்மா சிவமுத்துமாரி - இப்
பாரினில் உன்னைவிட்டால் சிவமுத்துமாரி – வேறு
யாரெமக்கு காவலம்மா சிவமுத்தமாரி

என்பதற்கேற்ப ஆலய முக்கிய நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றவேசெய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடங்கு முறைகளும்
# விசேட பூசைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடங்கு முறைகள்





அன்னை முத்துமாரியின் வருடாந்தச் சடங்கானது பத்ததி முறைகளைச் சார்ந்து ஆனிப்பூரணையை மையப்படுத்தி 10ஆம்நாளை தீர்த்தோற்ஷவ நிகழ்வாகக் கொண்டு அதன் ஒன்பது நாட்கள் முன்னதாக கும்பஸ்தாபனத்துடன் ஆரம்பமாகும். சடங்கு தொடங்குவதற்கு இருவாரங்களுக்கு முன்னதாக ஊர்மக்களைக் கொண்ட பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் இடம்பெறும். அதன்பின் எட்டுநாட்களுக்கு முன்னதாக ஊர்க் கட்டாடியார்மூலம் மாலைவேளையில் தெருவுக்குத்தெரு சந்திக்கு சந்தி ஊருக்கு தகவல் தெரிவிக்கப்படும். தகவல்கிடைத்ததும் ஊர்மக்கள் வீடு, வளவு, வீதி யாவையும் துப்பரவு செய்வதோடு சில ஊர் நடைமுறைகளையும் பின்பற்றத் தங்களை ஆயத்தம் செய்துகொள்வார்கள். 1990 வரை பின்பற்றப்பட்ட 'வண்ணான் கூவுதல்' எனும் இந்நடைமுறை அற்றுப்போன நிலையில் தற்போது எழுத்துமூலமான அறிவித்தல் வழங்கப்படுவதைக் காணமுடிகின்றது.

கும்ப ஸ்தாபனம் (கதவு திறத்தல்) முதல்நாள் சடங்காகவும் அமையும். அர்த்த மண்டபத்தில் ஓமகுண்டம் அமைத்து இதற்கான யாகம் இடம்பெறும். இதன்போது 21 கும்பங்கள் வைக்கப்படும். இவை மும்மூர்த்திகள், அட்டதிக்குப் பாலகர்கள், பிள்ளையார், விஷ்ணு, மாரி, பேச்சி, காளி, வைரவர், வீரபத்திரர், கம்பம், பலிபீடம் என அடையாளப்படுத்துவதாக அமையும். பின்னர் வைக்கோலால் கட்டப்பட்ட பொம்மையை எரியூட்டி கால்பக்கத்தால் முதலில் கோவில் மூலஸ்தானத்திற்கும் பின்னர் ஆலய உள்வீதியைச் சுற்றியும் பின்னர் வெளி வீதிக்கும் இழுத்துச்சென்று போடுவர். அதனைத் தொடர்ந்து கும்பங்களை ஒவ்வொன்றாக ஆலய அர்ச்சகர் அங்குள்ள அடியார்களிடம் கையளிப்பார். அவர்கள் கும்பங்களுடன் ஆலயத்ததைச் சுற்றிநிற்க பின்னர் ஆலய அர்ச்சகர் ஒவ்வொரு கும்பமாக அதிலுள்ள நீரை கோவிலைச்சுற்றி ஊற்றிவருவார். இவ்வாறு உள்வீதிக் காவல் முடிவுற்றபின்னர் வெளிவீதியில் அட்டதிக்குப் பாலகர்களுக்குரிய எட்டு இடங்களில் இளநீர், நீற்றுப் பூசணிக்காய், தேங்காய் என்பன மடைவைத்து காவல் மந்திரங்களை உச்சாடனம் செய்து அங்கே தேங்காய் வெட்டப்படும். அதனைத்தொடர்ந்து ஆலய அர்ச்சகர் கோவில்முகப்பில் கால்களைக் கழுவியபின் கோவிலுக்குள்சென்று மூலஸ்தானக் கதவை அடைத்துவிடுவார். அதன்முன்னால் வேப்பிலை மடைவைத்து அதில் அம்மனின் சிலம்பு, அம்மானைக்காய், வெள்ளிப்பிரம்பு என்பனவைத்து வழிபட்டு அட்டதிக்குப் பாலகர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைபெற்று அதன்பின்னர் அர்ச்சகர் மூலஸ்தானத்துள் செல்வார். அங்கு மாரியம்மன், பேச்சியம்மன், காளியம்மன் ஆகிய சக்திகளுக்கு கும்பஸ்தாபனம் செய்வதோடு கூடவே பக்கத்தில் பூரண கும்பமொன்றும் வைக்கப்படும். இக் கும்பமானது சடங்கு நிறைவுற்று 10ஆம் நாள் தீர்த்த உற்சுஷவத்தின்போது ஆற்றில் சொரியப்படும். மூலஸ்தானத்து கும்ப ஸ்தாபனம் முடிவுற்றதும் கோவிலுக்கு வெளியே காத்தவராயன், வைரவர், வீரபத்திரர்,பேச்சியம்மன், காளியம்மன் மற்றும் தலவிருட்சம் ஆகியவற்றிற்கும் கும்பங்கள் ஸ்தாபனம் செய்யப்படும். அதனைத் தொடர்ந்து சடங்கு தொடங்கும். அன்றைய நாளே ஊரைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வும் இடம்பெறும். இதன்போது புனித தீர்த்தத்தால் கலசம் நிரப்பப்பட்டு மந்திர உச்சாடனம் செய்யப்படும். இப்புனித தீர்த்தமானது மாமாங்கத் தீர்த்தம், தான்தோன்றீச்சரத் தீர்த்தம், மண்டூர்த்தீர்த்தம், பிள்ளையார் கோவில் தீர்த்தம், கடல்நீர் என்பவற்றைக்கொண்டிருக்கும். இக்கலசத்தை கோவில் பூசகர் ஒருவர் பக்தர்கள் வெள்ளைபிடிக்கத் தாங்கியவண்ணம் முன்னே காவல் தெய்வங்கள் ஆடிச்செல்ல ஊரைச் சுற்றி வேப்பிலைக்கொத்தால் தெளித்துவருவார். இது கிராமத்தை தூய்மைப்படுத்துவதாக அமையும். முதல்நாள் சடங்கு இவ்வாறு முடிவுறும். இதனை தீர்த்தச் சட்டி வளைத்தல் எனவும் கூறுவர்.

இரண்டாம் நாள்சடங்கானது காவல் தெய்வமான வைரவர் பூசையுடன் ஆரம்பமாகும். வைரவர் தெய்வமாடி முன்னேசெல்ல பூசகர் அங்குள்ள வெளிப் பரிவாரத் தெய்வங்களுக்கு சுற்றாலப் பூசைசெய்து திரும்புவார். அதன்பின்னர் தாய்த்தெய்வமான அம்மனுக்குரிய பூசை இடம்பெறும். இதன்போது தெய்வங்களுக்கு ஏற்றவாறு ஆடையணிகள் அணிவிக்கப்பட்டு மாரியம்மன், காளியம்மன், காத்தவராயன், வைரவர் எனப்பல தெய்வமாடுபவர்கள் உருக்கொண்டாடுவர். இதில் முக்கிய சிறப்பம்சம் யாதெனில் வேப்பிலை, கமுகம்பூ, தாமரைப்பூ வைத்து அம்மனது முகக்களையும் வெள்ளிப்பிரம்பும் பதிக்கப்பட்ட கும்பகுடத்தை உச்சாடனம் பண்ணி மூலஸ்தான அறைக்குள்ளிருந்து பிரதம அர்ச்சகர் அம்மன் தெய்வம் ஆடிவர அதனை வெளி மண்டபத்துக்கு எடுத்துவருவார். பின்னர் அம்மன் தெய்வம் கும்பத்தைப் பார்த்தவாறு பின்னோக்கி ஆடிச்சென்று பின் கையை நீட்டியவாறு முன்னோக்கி குனிந்தவண்ணம் ஓடிவந்து பக்தர்களின் அரோகரா சத்தம் வானைப்பிழக்க அக்கும்பத்தைப் பற்றிக்கொள்வார். பூசை முடிவுற்றதும் ஊர்காவலுக்கான அம்மனின்புறப்பாடு இடம்பெறும். இதன்போது வேப்பிலை, தென்னங்குருத்து, கமுகம்பூ என்பனகொண்டு அலங்கரித்த வெள்ளைத் தட்டியில் முன்னே பறையொலிக்க உடுக்கோசை சிலம்போசையுடன் முன்னே காவல்தெய்வம் மற்றும் காத்வராயனும் பின்னே காளி மற்றும் தெய்வங்களுடன் கும்பத்தை ஏந்தியவாறு அம்மனை அழைத்துச் செல்வர். இதன்போது காத்தவராயன் கும்மி, மாரியம்மன் தாலாட்டு, ஊர் சுற்றுக் காவியம் என்பன பாடப்படும். ஆலயத்தின் முன்புறமாகச் சென்று பின்னர் கிழக்கு நோக்கிச் (வலம்) செல்வர். அங்கு ஊரின் தென்கிழக்கு மூலையில் உள்ள வீரையடிப் பிள்ளையார் கோவிலுக்குச்சென்று வழிபாடியற்றியபின் ஊரின் ஏனைய ஆறு மூலைகளுக்கும்சென்று தேங்காய்வெட்டி காவல்பண்ணுவர். ஊரைச் சுற்றி ஊர்க்காவல் முடிவுற்றதும் ஆலயத்தை நோக்கி திரும்பிவருவர். இதனை அம்மன் ஊர்காவல் பண்ணல் எனக் குறிப்பிடுவர்.

3ஆம் நாள் தொடக்கம் 6ஆம் நாள் வரையான சடங்குகள் ஊர்காவல், மனைகாவல், மக்கள் நோய்நொடியின்றி வளம்பலபெற்று வாழ ஆசி வழங்கல் என்பவற்றை மையப்படுத்தியதாக அமையும். அந்நாட்களில் அம்மனது வரவுக்காக ஊர் மனை வாசலெல்லாம் தூய்மைப்படுத்தி அலங்கரிக்கப்பட்டு வாசல்கள் தோறும் நிறைகுடம் வைத்து மக்கள் குழுமியிருப்பர். பறையோசையுடன் உடுக்கோசை முழங்க அடியார்கள் ஊர்சுற்றுக்காவியம், அம்மன் தாலாட்டு, காத்தவராயன் கும்மி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பாடல்களைப் பாடிவர கூடவே தேவாதிகள் புடைசூழ அம்மன் ஊர்வலம் வருவார். வாசல்தோறும் பக்தர்களுக்கு வேப்பிலையும் விபூதியும் தீர்த்தமும் மருந்தாகக் கொடுக்கப்படும். இதில் இரு நாட்கள் அம்மன் புறவூர் பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு அருள்வழங்குவார். அதன்போது கைகாட்டிச் சந்தி அம்மன் கோவில், பீலியாறு, வாழைச்சேனை போன்ற இடங்களுக்குச்சென்று அங்குள்ள மக்களுக்கு அம்மன் வேப்பிலை (பத்திரம்), விபூதி, தீர்த்தம் ஊட்டி ஆசீர்வதிப்பார்.

6ஆம் நாள் சடங்கு ஒரு பரபரப்பான தன்மையைக் கொண்டதாக அமையும். அன்று காலை காத்தவராயனுடன் ஒரு சில உப பூசகர்களும் அடியார்களும் 'ஊர் தெண்டல்' எனும் நெல் மற்றும் பணம் சேகரிப்பின்பொருட்டு ஊரின் ஒவ்வொரு இல்லமாகச்செல்வர். அன்று இரவுமுதல் திருவிழாவும் சுவாமி உள்வீதி வலம்வருதலும் இடறும். 6ஆம் நாளில் உள்வீதி மட்டுமே சுவாமி வலம் வருவார். அதன்பின்னர் சடங்கு இடம்பெறும். அச்சடங்குமுறை ஏனைய முறைகளிலிருந்து மாறுபடும். இதன்போது பூசகர் பூசைசெய்யாமல் அம்பாளுக்கு தெய்வமாடுபவரே சன்னத நிலையில் பூசைசெய்வார். அர்த்த மண்டபத்தில் வெள்ளை விரித்து அதில் அச்சரம் அமைத்து அதில் அம்மன் முழங்காலில் அமர்ந்தவண்ணம் செய்யும் பூசைக்கு பூசகர் மந்திரமோதி தீபங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொடுப்பார். இது மிக்க பக்திப்பரவசத்தை வெளிப்படுத்துவதாக அமையும்.

7ஆம் 8ஆம் 9ஆம் நாட்களில் உள்வீதி மற்றும் வெளிவீதியில் சுவாமி திருவிழா வலம் வருவதைக்காணலாம். முன்னே சிறிய தேரின் அமைப்பைக்கொண்ட ஏடகம், சிங்க வாகனம், மயில்வாகனம் என்பவையே திருவிழாவின்போது சுவாமி வீதியுலாவில் இடம்பெற்றிருந்தது. 2017ல் வசந்தமண்டபத்துடன் ஆலயம் மீளமைப்பு செய்யப்பட்டு குடமுழுக்கும் இடம்பெற்றதைத் தொடர்ந்து இடப வாகனத்தில் பார்வதி சமேதராய் சிவனும் சிம்ம வாகனத்தில் அம்பாளும் மூக்ஷிக வாகனத்தில் பிள்ளையாரும் எழுந்தருளுவர்.

7ஆம் நாள் பகல் சடங்கு மிகப் பிரசித்திபெற்றதாகும். வெல்லாவெளிக் கிராமத்தின் மிகப் பழமையான வதனமார் வழிபாட்டினை மையப்படுத்தியதாக அமையும் இச்சடங்குகள் முன்னருள்ள வதனமார் வழிபாட்டில் விரிவாகவே பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவைமுடிவுற்றதும் அங்கிருந்து ஆலயம் நோக்கித் திரும்பி வரும்போது அடுத்தநாள் இடம்பெறவிருக்கும் தீமிதிப்பிற்கான பெருமளவிலான வீரமர விறகுக் கட்டைகள் மாட்டு வண்டிகளிலும் உழவு இயந்திரங்களிலும் கொண்டுவரப்படும். அன்றைய இரவுச் சடங்கும் திருவிழாவும் வெகு சிறப்பாக இடம்பெறும். அதன்போது சுவாமி உள்வீதி மற்றும் வெளிவீதிகளில் வலம்வருவார்.

8ஆம் நாள் சடங்கு அதி உச்சக்கட்ட சடங்காக அமையும். இதனை மூன்று நிலையில் அவதானிக்கலாம்.

(01). மதியப் பூசையுடன் நள்ளிரவு வரையான தீமிதிப்பு,

(02). காத்தவராயனை கழுமரமேற்றல்,

(03). சிவனைநோக்கி அம்மன் தவமிருக்கும் தவநிலை என்பவையே அவை.

மதிய பூசையைத் தொடர்ந்து ஆலயத்திலிருந்து அம்மனும் பூசகர்களும் வெளிவாசலின் முன்பக்கமாக வெட்டப்பட்டிருக்கும் தீக்குழியை நோக்கி வருவர். அங்கு தீக்குழியின் நான்கு மூலைகளிலும் நான்கு மடை வைக்கப்படும். அதன்பின்னர் தீக்குழிக்குள் பழம்,பூ, மஞ்சள் என்பவற்றை மூன்று தடவை அம்மன் எறிந்த பின்னர் பூசகர் அதனுள் இறங்கி பாதம்படாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழங்காலை மடித்தவாறு குழிக்குள் நேராக மூன்று இடங்களில் அட்சரம் வரைந்து அதன்மேல் மடைவைப்பார். இதன்போது பூசகர் மற்றும் முதியோர் மாத்திரமே பிரசன்னமாயிருப்பர். மடைகளுக்கு தீப ஆராதனை காட்டப்பட்டபின்னர் கோவிலுக்குத் திரும்பி 7ஆம் நாள் கல்லடிப் பிள்ளையாரடியிலிருந்து எடுத்துவரப்பட்டு வெள்ளை சுற்றப்பட்டு அம்மனின் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்ட தீக்கட்டையை ஆலய பரிபாலன சபைத் தலைவர் எடுக்க அவருடன் அம்மனையும் பூசகரையும் வெள்ளையால் மறைத்து திக்குழியைநோக்கிவருவர். அங்கு அக்கட்டையை தீக்குழிக்குள் வைத்தபின்னர் ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருந்த மூன்று மடைகளிலும் சிறிய விறகுகளை அடுக்கி கற்பூரம்கொண்டு தீமூட்டுவர். அதன்பின்னர் கோவிலைநோக்கிச் செல்வர்.

இரவுத் திருவிழா மற்றும் சடங்கு ஆரம்மாகி நிறைவடைந்ததும் அம்மன் உள்வீதி வலம்வந்து தீக்குழியை நோக்கி வருவார். நான்கு பக்கமும்சென்று வேப்பிலையால் தீக்குழியினைத் தொட்டு அக்கினி பகவானை வணங்கிவிட்டு பின்னர் கோவிலுக்குள் சென்றுவிடுவார். பின்னர் தீமிப்பு நிகழ்வு இடம்பெறும். அதன்போது கோவிலுக்குள்ளிருந்து அம்மன் புறப்பட தொடர்ந்து பூசகர்கள், தேவாதிகள், தீமிதிக்கும் பக்தர்களெனப் பின்தொடர்ந்து வருவர். அம்மன் தீக்குழியை வலம்வந்தபின் கோவிலைப் பார்த்தவாறு மூன்று தடவை மஞ்சள் பொடியை தீக்குழிக்குள் வீசுவார். பின்னர் வெற்றிலை, தாமரைப்பூ மற்றும் வாழைப்பழத்தினை தீக்குழிக்குள் போட்டபின்னர் மூன்று தடவைகள் அம்மனால் பூப்போடப்படும். அப்பூக்கள் தீயில் கருகாமல் அப்படியே இருக்கும். பின்னர் அம்மன் தீயில் இறங்குவார். அம்மன் மறுமுனையில் வந்து தீக்குழியைப் பார்த்தவாறு நிற்க தொடர்ந்து அனைவரும் வரிசையாக தீமிதிப்பதை மேற்கொள்வர். அவர்கள் அம்மனின் பாதங்களைத் தொட்டு வணங்கிக்கொண்டு செல்வர். அதன்பின்னர் அம்மன் கோவிலுக்குள் சென்றுவிடுவார்.

அதனைத் தொடர்ந்து காத்தவராயனை கழுவேற்றும் நிகழ்வு இடம்பெறும். அதன்போது அம்மன் கை,கால், முகமென வெள்ளைச் சாந்து பூசி, வெள்ளாடை அணிந்து தலையை முக்காடிட்டு ஒரு கையில் வேப்பிலையும் வெள்ளிப்பிரம்புமெடுத்து மறுகையால் காத்தவராயனின் கையைப் பிடித்தவண்ணம் அம்மன் கோவிலிலிருந்து வெளியே வருவார். பின்னர் கோவிலை வலம்வந்தபின்னர் முன்னால் வெளிவீதியிலமைந்துள்ள கழுமரத்தில் காத்தவராயனை ஏற்றும் நிகழ்வு இடம்பெறும். காத்தவராயனை அழைத்துவரும்போது உடுக்கோசையில் அதற்கான காத்தவராயன் சிந்து பாடப்படும். அதன்பின்னர் அம்மன் தவநிலைக் கம்பத்தை நோக்கி வருவார். அங்கு பூசகரால் தவநிலைக்கம்பத்துக்கு தீபாராதனை காட்டப்பட்டு பூசைசெய்யும் நிலையில் அம்மன் அகவல் பாடப்படும். அதன்பின் அம்மன் கம்பத்தில் ஏறுவார். அங்கு அவர் சிவனைவேண்டி தவமிருக்கும் நிலையில் 'தத்துவ போதஞானம்' எனத்தொடரும் தவநிலைப்பாடல் பாடப்படும். அம்மன் தவநிலையிலேறி தவமிருந்து இறங்கும்வரை பெரும்பாலும் நடுநிசி தொடக்கம் வைகறைப் பொழுதுவரை பக்தர்கள் அனைவரும் பயபக்தியோடு நிசப்தநிலையிலேயே இருப்பர். சிலர் தியான நியிலுமிருப்பர். அதன்பின்னர் அம்மன் தவநிலையிலிருந்து இறங்கிவருவார். அதனைத்தொடர்ந்து காத்தவராயனைக் கழுவிலிருந்து இறக்கியபின் கோவிலுக்குள் செல்வார்.

9ஆம் நாள் சடங்கு பள்ளயச்சடங்கு எனும் பெயரில் இடம்பெறும். இதன்போது மூலஸ்தானத்திலிருந்து விநாயகப்பானை எடுத்துவரப்பட்டு பொங்கலிடப்படும். இப்பொங்கலைக்கொண்டு தேவாதிகளுக்கு பள்ளயம் கொடுக்கப்படும். ஆனிப் பூரணை தினமான அடுத்தநாள் (10ஆம் நாள்) காலை தீர்த்தோற்ஷவத்துடன் சடங்கு நிறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கு காலத்தே பிற ஊர்களைச் சேர்ந்தவர்கள் மாட்டுவண்டிகளில் வந்து உறவினர்களது இல்லங்களில் தங்கியிருந்து நாதனை ஆற்றில் நீராடி உண்டு குலாவி அம்மனின் சடங்கு மற்றும் கூத்துப்போன்ற கலைநிகழ்வுகளைக் கண்டுமகிழ்ந்து ஊர் திரும்புவது அன்றைய காலங்களின் நிகழ்வாகவும் தங்கள் உறவினைப் புதுப்பிக்கும் மரபாகவும் இருந்துவந்துள்ளமையை இதில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

## விசேட பூசைகளும் விரதங்களும்:

இவ்வாலயத்தைப் பொறுத்தவரை விசேட பூசைகளும் அனைத்து விரதங்களும் மிகச் சிறப்பாகவே இடம்பெற்றுவருகின்றன. விசேட பூசைகள் நீண்டகாலம் முதலாக குடிவழிப் பூசைகளாகவே அமைகின்றன. அதன்படி:

**01. தை மாதம்:**

தைப்பொங்கல் : பணிக்கனார் குடியினர்

தைப்பூசம், புதிதெடுத்தல், புதிதுவைத்தல், புதிதுண்ணல்: ஆலய பரிபாலன சபை

**02. மாசி மாதம் :**

மகா சிவராத்திரி திருவிழா : உலகிப்போடி(உலகநாச்சி) குடியினர்

மாசிமகம்: பெத்தான் குடியினர்

**03. பங்குனி மாதம்:**

பங்குனி உத்தரம்: ஆலய பரிபாலன சபை

**04. சித்திரை மாதம்:**

சித்திரை வருடப் பிறப்பு மற்றும் சித்திரைப் பௌர்ணமி மற்றும் சித்திரகுப்தர் விரதபூசை: பெரிய படையாண்ட குடியினர்

**05. வைகாசி மாதம்:**

வைகாசி விசாகம்: ஆலய பரிபாலன சபை

**06. ஆனி மாதம்:**

வருடாந்த திருச்சடங்கு: ஊர்மக்கள் கூட்டாக இணைந்து

**07. ஆடி மாதம்:**

ஆடிவெள்ளி,ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம்,கதிர்காமம் தீர்த்தம் ஆலயத்தில் இடம்பெறும்.

ஆடி அமாவாசை: ஆலய பரிபாலனசபையின் முன்னீட்டில் கல்லடிப் பிள்ளையாரடியில் இடம்பெறும்

**08. ஆவணி மாதம்:**

ஆவணி ஞாயிறு, கிருஷ்ண ஜெயந்தி (கஞ்சன் கதை படிப்பு) :

ஆலய நிருவாகமும் பொதுமக்களும்

**09. புரட்டாதி மாதம்:**

நவராத்திரி - 09 நாட்களும்: வெல்லாவெளி இந்துசமய அபிவிருத்திக்கழகம்

புரட்டாதிச் சனி, 21 நாள் கௌரி விரதம்: விரதகாரர்கள்

தீபாவளி: ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. ஐப்பசி மாதம்:**

கந்தஷஷ்டி விரதம் : விரதகாரர்களும் ஆலய பரிபாலன சபையும்

**11. கார்த்திகை மாதம்:**

கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா: காலிங்கா குடியினர்

கார்த்திகை 30 நாட்கள் சிவனுக்கான விரதபூசை :

பொதுமக்களும் ஆலய பரிபாலன சபையும்

பிள்ளையார் விரதம்: விரதகாரர்களும் ஆலய பரிபாலன சபையும்

**12. மார்கழி மாதம்:**

திருவெம்பாவைப் பூசை : வேடவேழாளர் குடியினர்

திருவாதிரை – திருவிழா, தீர்த்தம், பொன்னூஞ்சல்: வீரப்படையாண்ட குடியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை விரதத்தின் 30ஆம் நாள் சிவனுக்கான விசேட பூசை



**குறிப்பு :**

வெல்லாவெளி அருள்மிகு முத்துமாரியம்மன் வழிபாட்டியலில் 1930 – 1969 காலப்பகுதியில் தலைமை அர்ச்சகராகப் பெரும்பணியாற்றி வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டவர் அமரர் மூத்தாப்போடி மாணிக்கப்போடி பூசகர் அவர்கள். மட்டக்களப்புத் தேசத்தில் எங்குமேயில்லாத கார்த்திகை விரதத்துடன் கூடிய 30ஆம் நாள் விசேட பூசையானது அவரது தெய்வீகச் செயல்பாட்டில் உருவானமை இன்று பலரும் அறியாத ஒன்று. இதுபற்றிய தகவல்கள் அவரது புதல்வியார் திருமதி அன்னபூரணம் முத்துலிங்கம் (76வயது) அவர்கள்மூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1941 ஐப்பசி மாதம். வெல்லாவெளி முத்துமாரியம்மன் ஆலய தலைமை அர்ச்சகராகப் பணியாற்றிக்கொண்டிருந்த மூ.மாணிக்கப்போடி அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு எழுந்து நடக்கமுடியாத நிலையிலிருந்தார். கூடவே அவரது மைத்துனர் கண்ணப்போடி சின்னத்தம்பி மற்றும் மருமகன் ஆகியோரும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர். இந்தநிலையில் பிச்சைக்காரரைப்போன்று ஒரு சிவனடியார் அங்கு வந்தார். அப்போது அங்கிருந்தவர்கள் பஞ்சாங்கத்தில் தொடுகுறி சாத்திரம் பார்த்துக்கொண்டிருந்ததை அவதானித்த அவர் என்னிடம் பாலேடு உள்ளது. அதனை நீங்கள் போட்டுப்பார்க்கலாம் எனக்கூற பின்னர் பாலேட்டினைப் போடத்தொடங்கினர். பாலேட்டினைப் பார்த்த சிவனடியார் பூசகரைப் பார்த்து உங்களுக்கு சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் போதாத நிலையில் அவரது ஒருவயதுக் குழந்தைக்கும் விரைவில் ஒரு தத்து வரவிருப்பதையும் குறிப்பிட்டார். இதனைக் கவலையுடன் கேட்டுக்கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகர் நானோ நோய்வாய்ப்பட்ட நிலையிலுள்ளேன். கூடவே எனது மைத்துனரும் மருமகனும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் எனது குழந்தையைக் காப்பாற்ற என்னசெய்யலாம் எனக் கவலையுடன் கேட்டார். இவற்றைச் செவிமடுத்த சிவனடியார் அங்கு காட்சியளித்த சிவனும் உமாதேவியாரும் உள்ள படத்தை உற்றுநோக்கி நீங்கள் வருகின்ற கார்த்திகை மாதம் முப்பது நாட்களும் இங்குள்ள சிவனையும் உமாதேவியையும் நோக்கி விரதமிருங்கள். அனைத்தும் நல்லபடியாக அமையும் எனக் கூறினார். அதைக்கேட்ட பூசகர் 'சுவாமி அதனை எவ்வாறு அனுஷ்டிப்பது' என வினவ சிவனடியார் மூன்று வேளைப் பூசைசெய்து ஒருதடவை உணவருந்தி விரதமிருங்கள் எனப்பதிலளித்தார்.

பூசகரின் மனைவியார் தயாரித்த உணவினை சிவனடியாருடன் அனைவரும் அருந்தியபின்னர் சிவனடியாரின் எச்சில் இலையை எடுத்தபின் பூசகரின் மனைவியார் அவருக்கு தண்ணீர் செம்பினை எடுத்துக்கொண்டு வந்ததும் அங்கு சிவனடியாரைக் காணாது திகைப்புற்று பின்னர் அவரைத் தேடிப்பார்த்தனர். அவர் யாருடைய கண்ணுக்கும் அகப்படாமை கண்டு வந்தவர் சிவனடியார் அல்ல அது சிவனே என்று அங்கிருந்த சுவாமிபடத்தை தொட்டு வணங்கலாயினர். இத்தகவல் ஊரெல்லம் பரவ ஊரார் அனைவரும் அங்கு திரளத்தொடங்கினர்.

கார்த்திகை தொடங்கியதும் ஊரவர்கள் ஒன்றுகூடி பூசகரின் வீட்டிலேயே விரதத்தை ஆரம்பித்தனர். என்ன ஆச்சரியம் நோய்வாய்ப்பட்ட பூசகர் அவரது மைத்துனர் மற்றும் மருமகன் அனைவரும் நோயிலிருந்து உடனடி மீட்சிபெற்றதோடு குழந்தையும் நேரவிருந்த ஆபத்திலிருந்து முற்றாக விடுபட்டது. இவ்விரதம் இரண்டு ஆண்டுகள் ஊர் மக்களால் பூசகரின் வீட்டிலேயே அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்பின்னர் பூசகரின் மைத்துனரான சின்னத்தம்பி பூசகரை அணுகி நீங்கள் பொதுவாக ஊரவர்கள் அனைவரும் அனுஷ்டிக்கும் இவ்விரதத்தை ஒரு பொது இடத்தில் ஏற்பாடுசெய்தால் நன்றாகவிருக்குமென ஆலோசனைகூற அதனை ஏற்றுக்கொண்ட பூசகர் மூன்றாமாண்டு விரதத்தினை பிள்ளையார் ஆலய மண்டபத்துள் ஒரு தாம்பாளத்தட்டில் விபூதி பரவி அதில் சிவனுக்குரிய ஐந்தெழுத்து அச்சரம் வரைந்து அதன் பின்னால் முப்பது மாவிலையைக்கொண்ட நிறைகுடம் வைத்து விரதத்தை தொடங்க ஊர்மக்களும் மிகுந்த பயபக்தியுடன் அதனை அனுஷ்டிக்கலாயினர். ஒருதடவை இதில் ஐந்தாம்நாள் விரத பூசையின்போது ஒரு அதிசய நிகழ்வு நடந்தேறியது. நிறைகுடத்தில் இடப்பாகத்தில் பார்வதி சமேதராய் சிவன் காட்சிகொடுத்ததை முன்னால் பயபக்தியாக வணங்கிக்கொண்டிருந்த சின்னத்தம்பி கண்ணுற்றார். அதுமுதலாக அவர் மெய்மறந்து நின்றார். பூசைமுடிவுற்று தீர்த்தம் திருநீறுடன் வந்த பூசகர் சின்னத்தம்பியார் மெய்மறந்து நிற்பதைப்பார்த்து உரத்த சத்தத்தில் அவரை அழைத்து என்ன நடந்தது என விசாரித்தார். தான்கண்ட அதிசய நிகழ்வை அனைவரும் கேட்கும் வகையில் அவர் கூறியதும் அனைவருமே மெய்மறந்து சிவசிவாவெனச் சத்தமிட்டு தங்கள் தலையில் குட்டிக்கொண்டனர்.

அதன்பின்னர் பார்வதி சமேதராய் சிவனிருக்கும் சிலையொன்றினை அமைக்கவேண்டுமென்ற சின்னத்தம்பியாரின் வேண்டுகோளின்பிரகாரம் அம்பாளின் ஆசியுடன் கோவில் வளவில் விளைந்த காய்கறிகளை விற்றுவந்த பணத்துடன் உண்டியல்மூலம் கிடைத்த பணத்தினையும் சேர்த்து மாணிக்கப்போடி பூசகரும் மைத்துனர் சின்னத்தம்பியுமாக பெரியபோரதீவு நாகலிங்கம் ஆசாரியாரை அணுகி வெண்கலத்தினாலான சிலையொன்றினை அமைத்துத்தருமாறு கேட்டனர். அவரும் பெருவிருப்புடன் விரைவாகவே அதனை உருவாக்கிக் கையளித்தநிலையில் அதனை வெல்லாவெளிக்கு எடுத்துச்செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டபோது அதனை முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிப்பதற்கான வசதிகள் செய்யப்படாத நிலையில் ஊர்மக்கள்சிலர் அதுகுறித்து வெவ்வேறு கருத்துகளை முன்வைக்கலாயினர். இதனால் சற்று மனக்குழப்பமுற்ற பூசகரும் மைத்துனர் சின்னத்தம்பியும் பெரியபோரதீவிலுள்ள சின்னத்தம்பியாரின் இல்லத்தில் சிலையினைவைத்தனர். இந்த நிலையில் ஒருநாள் இரவு வீட்டில் சின்னத்தம்பியர் உறங்கிக்கொண்டிருந்தபோது ஒரு உருவம் அவரைப் பிடித்துச் சரசரவென இழுத்துவெளியில் வீசியதால் அவர் அச்சமுற்ற நிலையில் மறுநாள் அவரது புதல்வனும் அதேநிலைக்கு உள்ளாக்கப்பட்டார். இதனால் மனக்குழப்பமுற்ற அவர் பூசகரை அணுகி நடந்ததைக்கூற பின்னர் வீட்டின் முன்புறமாக மேடையமைத்து பந்தலிட்டு அச்சிலையை அங்கு எழுந்தருளவைத்தனர்.

இதனை அறிந்துகொண்ட வெல்லாவெளி ஊர்மக்கள் மேளதாள வாத்தியங்களுடன் ஊருக்கு அச்சிலையை எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாயினர். இதன்போது பெரியபோரதீவில் வைக்கப்பட்டிருந்த அச்சிலையை வெல்லாவெளிக்கு எடுத்துச்செல்வதற்கான பூசைபுனற்காரங்கள் மேற்கொள்ளப்பட்டு முகம் மூடிய சிலைக்கு கண்திறக்கும் நிகழ்வு இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது யாருமே எதிர்பாராத நிகழ்வாக அங்கு ஒரு சிவனடியார் வந்திருந்தார். அவரை வினவியபோது தான் இந்தியாவிலிருந்து வந்ததாகவும் தான் ஒரு சிவப்பு இரத்தினக் கல் கொண்டுவந்திருப்பதாகவும் அதனை சிவனின் சிலையில் நெற்றியில் பதிக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதன்பின்னர் நாகலிங்கம் ஆசாரியரைக்கொண்டு ஆசாரி அபிஷேகம் செய்வித்து நெற்றிக்கண்வைத்து கண்திறந்தபின்னர் ஊர்வலமாக வெல்லாவெளிக்கு சிலையினை கொண்டுசென்று பிள்ளையார் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வழிபாடியற்றத்தொடங்கினர். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் 1941ல் வெல்லாவெளிக்கு சிவனடியாராக வந்த சிவனே 1944லிலும் பெரியபோரதீவுக்கு சிவனடியாராக காட்சிகொடுத்துள்ளார் என ஊரவர்கள் மத்தியில் தொடர்ந்து நம்பப்பட்டுவருவதாகும்.

இதில் அனேகமானவர்கள் கார்த்திகை முப்பது நாளும் விரதமிருந்து 30ஆம் நாள் பெரிய அளவில் அபிஷேக ஆராதனைகளுடன் பொங்கல் பூசை இடம்பெற்று குங்குமம் விபூதி மற்றும் பூக்களால் சிவனுக்கு அர்ச்சனைசெய்து பண்ணிசை பாடி பூசை நிறைவுற்றதும் சிலையினை பூசகர் இருகரத்தாலும் எடுத்து மடியில் வைத்தவாறு முன்படியில் அமர்ந்து பக்தர்களை ஒவ்வொருவராக ஆசீர்வதிப்பார். அதன்போது அர்ச்சனைசெய்த விபூதியை பக்தர்களின் நெற்றியில் தடவி தீர்த்தம் கொடுத்து விபூதிப் பிரசாதமும் வழங்குவார். கூடவே பொங்கல், அவல், கடலை, கொழுக்கட்டை, பலகாரம், பழம் என்பனவும் பிரசாதமாக விரதகாரர்களால் வழங்கப்படும்.


விரதகாலங்களில் முதல் 29 நாட்களும் திருவிளையாடற் புராணம் படிக்கப்பட்டு பயன் சொல்வதும் ஒரு முக்கிய நிகழ்வாக அமையும். இதன் தொடக்ககாலமான 1941 முதல் 1969ல் மரணமடையும்வரை மாணிக்கப்போடி பூசகர் அவர்களே இவ்விரத பூசைகளை முறையாக மேற்கொண்டுவந்தார். அதன்பின்னர் அவர்வழிவந்தவர்கள் தொடர்ந்தும் முறையாக இதனை மேற்கொள்வதைக் காணமுடிகின்றது. இதில் ஆலய பரிபாலன சபையினரின் தொடரான பங்களிப்பு போற்றுதலுக்குரியதாகும். இப்பூசை வழிபாடானது இக்கிராமத்திற்குரிய தனிச்சிறப்பாகவே இன்றும் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்தீர்க்கும் தல விருட்சம்





இவ்வாலயத்துக்கு நாளாந்தம் பலபாகங்களிலிருந்தும் மனக்குறை நிறைந்த அடியார்களும் நோயாளர்களும் பெருமளவில் வருகின்றனர். இந்து சமயத்தினர் மாத்திரமன்றி பௌத்தர்கள் மற்றும் கிறிஸ்தவர்களும் நேர்த்திவைத்து வழிபட்டு தங்கள் குறைகளை போக்கிக்கொள்கின்றனர். பெரும்பெரும் வைத்தியர்களெல்லாம் கைவிட்ட நோயாளர்கள் பலர் தங்கள் துயர்போக்கிப் புதுவாழ்வுபெற்ற சம்பவங்கள் இங்கு நிறையவேயுண்டு. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தையொட்டி பரந்து வளர்ந்திருக்கும் வேப்பமரத்தின் அடியில்வைத்து உச்சாடனம் செய்யப்பட்ட விபூதியும் வேப்பிலையுமே இங்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது. இங்கு நடைபெறும் நிகழ்வுகளைப்பார்த்தால் இந்த விஞ்ஞான யுகத்தில் இப்படியும் ஒரு புதுமையா? என எண்ணத்தோணும். இது தொடர்பில் அண்மையில் இணையத்தளங்களில் வெளிவந்த ஓய்வுநிலை அதிபர் திரு.த.விவேகானந்தம் அவர்களது கட்டுரையினை இங்கு பதிவுசெய்வது பொருத்தமானதாக அமையும்.

"அன்னை முத்துமாரிக்கு கோயில் அமைக்க அருகில் உள்ள காட்டை வெட்டி அவற்றை எரித்து சுத்தப்படுத்திய வேளையில் அங்கு நின்ற வேம்பு மரம் தீயினால் தீண்டப்படாது எவ்வித பாதிப்பும் இன்றி பசுமையுடன் இருந்தமை கண்டு ஊரவர்கள் வியந்தனர். அந்த இடமே அன்னைக்கு உரிய இடம் என முடிவு செய்தனர். அந்த வேம்பு விருட்சமே அன்னையின் தலவிருட்சம் ஆயிற்று. தனக்கு உகந்த இடத்தை தலவிருட்சம் ஊடாக அற்புதம் நிகழ்த்திக்காட்டி கோயில் கொண்டவள் அன்னை மகமாயி. அவ்விடத்தில் 1800 காலப்பகுதியில் சிறிய கோயிலையும் 1850இல் திடமான கோயிலையும் அமைத்து அன்னையை வழிபட வெல்லாவெளியின் சீரும் சிறப்பும் ஓங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலவிருட்சம் - சிறப்பும் மகிமையும் :**

காலவோட்டத்தில் 1907, 1967, 1994, 2018ஆம் ஆண்டுகளில் கோயில் புதுப்பிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் இன்றைய பொலிவை பெற்றிருக்கும் இந்நிலையில் கோயில் மூலஸ்தானத்தை அண்டியதாக கோயிலின் இடது பக்கத்தில் தல விருட்சமாக அமைந்து விளங்கும் வேம்பு மரம் சுமார் 200 வருடங்களுக்கு மேல் முதிர்ச்சியினை கொண்டிருந்தும் அதன் பருமனில் பெரிதும் மாற்றம் இல்லாதிருப்பது தல விருட்சத்தின் சிறப்பாகவே பார்க்கப்படுகின்றது.

தலவிருட்சமான வேம்பு மரத்தின் கிளைகள் அம்மனின் மூலஸ்தானத்தில் நிழல் தரும் குடையாக குவிந்து ஐந்துதலை நாகம் படமெடுப்பது போன்ற தோற்றப்பாட்டை கொண்டிருப்பதுவும் கிளைகள் கும்பாபிசேகக் கலசத்தினை தொட்டவாறு அமைந்திருப்பதுவும் இவ்வாலயத்திற்குரிய தனிச் சிறப்பாகவே உள்ளது. அத்தோடு கும்பாபிசேகக் கலசத்தை தொட்டவாறு தலவிருட்சமான வேம்பு மரத்தின் கிளைகள் காணப்படுவதே தல விருட்சத்தின் மகிமைக்கும் காரணம். மூலஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் அம்மனின் அருட்சக்தி கும்பாபிசேக கலசம் ஊடாக தல விருட்சத்தில் படிவதாக ஆலயத் தலைமை அர்ச்சகர் திடமாக கூறுவது நம்மையெல்லாம் ஈர்க்கிறது. இதனை மெய்ப்பிக்கும் சம்பவங்கள் கோயில் ஆரம்பமான காலம் முதல் இன்றுவரை நடந்தேறியுள்மை இதற்கு தக்க சான்றுகள் ஆகின்றது. வைத்தியர்களினால் கைவிடப்பட்ட தீராத பிணியால் பாதிக்கப்பட்டவர்கள்இ குழந்தை கிடைக்காது என கைவிடப்பட்டவர்கள், வாழ்வில் இனி திருமணமே நடக்காது என வாழ்க்கையில் விரக்தியுற்றவர்கள்இ செய்வினை சூனியம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள்இ இன்னோரன்ன பல நோய்களுக்கு ஆளானோர் அம்மன் ஆலயத்துக்கு வந்து தங்கள் துன்பத்தை அம்மனிடம் முறையிட்டு தல விருட்சத்தின் அடியில் தலை வைத்து வழிபடுகின்றார்கள். வெள்ளிக்கிழமைகளிலும் விசேட உற்சவ காலங்களிலும் தல விருட்சத்தின் அடியில் பலர் பழிகிடப்பதை நாம் இன்றும் காணலாம். இவர்களுக்கு தல விருட்சத்தின் வேம்பு இலையும் விபூதியும் மருந்தாக அம்மன் உருவேறி ஆடுபவரால் வழங்கப்படுகின்றது. அம்மனின் தல விருட்ச மருந்து மூலம் குழந்தைப் பேறு பெற்றோர்இ தீராத பிணி நீங்கியோர் இ செய்வினை சூனியத்திலிருந்து விடுபட்டோர் என ஆயிரக்கணக்கானோர் இன்றும் சாட்சிகளாக உள்ளனர். திருமணம் கைகூடாதவர்கள் தல விருட்சத்தின் அடியில் பழி கிடந்து தல விருட்சத்தின் அடியில் உள்ள சூலாயுதத்தில் எலுமிச்சப் பழமாலை சாத்தி வழிபடுகின்றனர். இதன் மூலம் திருமணம் கைகூடியவர்கள் அம்மன் கனவில் வந்து தம்மிடம் கூறியபடியே தாம் இவற்றைச் செய்துகொள்வதாகக் கண்ணீர் மல்க கூறுகின்றனர். இவ்வாறான அற்புத நிகழ்வுகளுக்கு அம்மன் அருள் படிந்த தல விருட்சத்தின் மகிமையை காரணமாகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், அன்னை மாரியின் தலவிருட்சமான வேம்பு மரத்தில் இருந்து பல கிளைகள் வளைந்தும் நெளிந்தும் பிரிந்து செல்லும் அதன் அமைப்பினை உற்று நோக்கும்போது தில்லைச் சிதம்பரத்தில் நடனம் ஆடும் எம்பெருமான் நடராஜர் தோற்றத்தில் காணப்படுவது நம்மைப் பிரமிக்கவைக்கின்றது. தவிரவும் தல விருட்சத்தின் அடியில் இருந்து பிரியும் பெரிய வேப்பமரக் கிளைகள் அம்மன் கையில் இருக்கும் சூலாயுதத்தை பிரதிபலித்து நம்மை மெய் சிலிர்க்க வைக்கும் அற்புதக் காட்சிகள். இதனை அம்மனின் தல விருட்சத்தின் இன்னுமொரு சிறப்பு எனலாம்.


மேலும் தல விருட்சத்தின் அடியில் நின்று அதன் முதிர்ந்த பட்டைகளை தடவுகின்ற போது அந்த உரசலில் எழுகின்ற ஓங்கார நாதத்தினை ஆலய தலைமை அர்ச்சகர் மெய்ப்பிக்கின்றார். தல விருட்ச பட்டைகளை தடவுகின்ற அதே வேளை விருட்சத்தில் காதினை பொருத்தி அந்த அரிய நாதத்தினை நாம் கேட்க முடியும். இதுவும் அன்னை மகமாயியின் தலவிருட்ச சிறப்பே ஆகும். அத்தோடு அன்னை மகமாயியின் தல விருட்சத்தின் இன்னுமோர் சிறப்பினையும் எமக்கு மெய்ப்பித்துக்காட்டினர் தலைமை அர்ச்சகர். தலவிருட்சத்தின் பட்டைகளை ஒடித்து அதற்கு அடுத்து வரும் பட்டையில் இருந்துவரும் துகள்களை உள்ளங் கையில் வைத்து விரல்களால் பொடி செய்து எடுக்க கபில நிறத்தில் வரும் மிருதுவான பொடி சந்தன வாசத்துடன் காணப்படுவதுடன் நெற்றியில் தரிக்கவும் உடம்பில் பூசிக்கொள்ளவும் ஏற்ற சாந்தாக காணப்படுவது தலவிருட்சத்தின் மகிமையே.

வேம்பு மரம் என்றாலே கைப்பு சுவையே எம் எண்ணத்தில் உதிக்கும். அவ்வகையிலே வேம்பு மரத்தின் அனைத்தும் கைப்பு சுவை கொண்டவையே. எனினும் வெல்லாவெளி அன்னை மாரியின் தல விருட்சமான வேம்பு மரத்தின் கிழக்கு நோக்கி செல்லும் கிளை ஒன்றில் மட்டும் காணப்படும் இலைகள் கைப்பு சுவை அற்றதாக காணப்பட மரத்தின் ஏனைய கிளைகளில் உள்ள இலைகள் அனைத்தும் கைப்பு சுவையை கொண்டிருக்கின்றன. நம்பமுடியுமா இதனை? நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் நாம் அவ் இலைகளை மென்று உண்டவர்கள். உணர்வு பூர்வமாக அதன் உண்மையைக் கண்டறிந்தவர்கள். முழுக்க அதற்கு நாமே சாட்சியாவோம். 27 மே 2018 ல் லண்டனை தலைமைத் தளமாக கொண்டு இயங்கும் 'லைக்கா' நிறுவனத்தின் ஒரு பகுதியாக செயற்படும் ஆதவன் தொலைக்காட்சிக் குழுவினர் வெல்லாவெளி சிறி முத்துமாரியம்மன் தொடர்பான ஆவணப்படம் ஒன்றினைத் தயாரித்த வேளை இந்த உண்மைகள் வெளிப்படையாக நிருபணமானதும் இவ் அரிய காட்சிகள் விபரணப்படமாக உருவானதும் அற்புத நிகழ்வேயாகும்." இவ்வாறு அக்கட்டுரையில் ஓய்வுநிலை அதிபர் திரு.தவிவேகானந்தம் அவர்கள் விபரித்துச்செல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய தீர்த்தக்கரை





ஊரின் கிழக்குப்புறமாக உச்சந்தீவு எனும் வயல்பரப்பைத் தொட்டதாக அமைந்த வாவித் தொடுகையே முன்னர் உச்சந்தீவு தீர்த்தக்கரை எனும் பெயரில் கோவில் சடங்கு மற்றும் விசேட நிகழ்வுகளில் சுவாமி தீர்த்தமாடும் தீர்த்தக்கரையாக விளங்கியது. அன்றைய பாவனையிலிருந்த ஏடகம் எனும் சிறுதேர், சிம்மவாகனம், மயில்வாகனம் போன்றவற்றை இறக்கிவைப்பதற்காக மூன்று பெரிய அளவிலான அழகிய பீடங்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் வாவித் தொடுகையானது சேறு மற்றும் வண்டல் படிவுகளால் நிரம்பப்பெற்று தீர்த்தமாட உகந்த இடமாக இல்லாது போனதால் நாதனைப் பிள்ளையாரடிக்கு (நாதனை ஆறு) தீர்த்தக்கரையை மாற்றவேண்டியதாயிற்று. பாவனையற்ற சூழலில் அங்கிருந்த மூன்று அழகிய பீடங்களும் அடியழிந்துபோயிற்று. எனினும் குறிப்பிட்ட இடமானது தீர்த்தக்கரையென்றே இன்றுவரை அழைக்கப்பட்டுவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருவாகக் கட்டமைப்பு



இவ்வாலயம் பண்டுதொட்டு ஊர்மக்களால் நெறிப்படுத்தப்பட்டுவருகின்றது. அதன் நிருவாகக் கட்டமைப்பில் அங்கு வாழும் ஏழு குடிசார்ந்த ஏழு பிரதிநிதிகளும் முகவர்களாகவும் பரம்பரைபரம்பரையாக ஒருவர் வண்ணக்கராகவும் நீண்ட காலமாக இயங்கிவந்தனர். காலம்சென்ற எஸ்.வி.சுப்பிரமணியம் அவர்களும் அதன்பின் அவரின் புதல்வாரன காலம்சென்ற எஸ்.வி.இரத்தினசிங்கம் அவர்களும் அதன்பின் சிறிதுகாலம் எஸ்.வி.சத்துருக்கப்போடி அவர்களும் வண்ணக்கர்களாவிருந்து பெரும்பணியாற்றியுள்ளனர். இவர்களின் காலத்தில் இவ்வாலயம் பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சியுற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த 1976ஆம் ஆண்டுமுதல் இளைஞர்களின் தூண்டுதலின்பேரில் வண்ணக்கர் எனும் முறை ஒழிக்கப்பட்டு ஏழு குடிகள் சார்பிலும் ஏழுபேரைக்கொண்ட பரிபாலன சபை உருவாக்கப்பட்டதோடு அதில் சுழற்சிமுறையில் ஓராண்டுக்கு ஒருவர் தலைவராக திருவுளச்சீட்டுமூலம் தெரிவுசெய்யப்பட்டு செயல்பட்டு வந்தது. ஒரு தடவை தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவரது குடியினைச் சார்ந்தவர் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு போட்டியிலிருந்து தவிர்க்கப்படுவார். போர்க்காலச் சூழலின் பின்னர் இதன் நிருவாகக் கட்டமைப்பு மேலும் அதிகாரம்மிக்க ஆலய பரிபாலன சபையாக மாற்றத்துக்கு உள்ளானது. பொதுச்சபையின் தீர்மனத்திற்கமைவாக இதில் தலைவர், செயலாளர், பொருளாளருடன் ஊரிலுள்ள ஏழு குடியின் சார்பிலும் ஏழு குடிவண்ணக்குமார் நியமிக்கப்படுவர். கூடவே ஆலோசகர் மற்றும் கணக்காய்வாளரும் இதில் தெரிவுசெய்யப்படுவர்.

2018 ஆனிமாதம் வரையான கடந்தகால ஆலய நிருவாகம் ஆலோசகர்களாக சட்டத்தரணி மு.கணேசராசா அவர்கள், திரு.ஆ.நாகலிங்கம் அவர்கள் மற்றும் திரு.மா.அன்னகேசரி அவர்களையும் சபையின் தலைவராக வ.மேகநாதன் அவர்களையும் செயலாளராக க.சிவாகரன் அவர்களையும் பொருளாளராக இ.தனுராஜ் அவர்களையும் உப தலைவராக போ.சிவநேசராஜா அவர்களையும் உபசெயலாளராக செ.நவரெத்தினம் அவர்களையும் குடிவண்ணக்கர்களாக திருவாளர்கள் சி.சிவகுமார், அ.யோகேஸ்வரன், க.சுந்தரம்பிள்ளை, கு.லோகநாதன், வே.மகாமாயவன், வி.நித்தியானந்தம், ப.டொசாணனன் ஆகியோரையும் கணக்காய்வாளர்களாக திரு.சோ.பத்மராசா மற்றும் திரு.க.சிவலிங்கம் ஆகியோரும் ஆலய நித்திய மற்றும் விசேட பூசைகளை சிறப்பாக முன்னெடுக்கும் பிரதமகுரு சிவசிறி சி.கு.சாம்பசிவக் குருக்கள் மற்றும் உதவிக்குரு சிவசிறி மா.அருள்நாயகம் ஆகியோரை உள்ளடக்கிய நடைமுறைச் செயல்பாட்டைக் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பிள்ளையார் ஆலய முன்மண்டபம் முழுமையாக வடிவமைக்கப்பட்டும் அம்மன் ஆலய முகப்பு அழகுடன் நிர்மாணிக்கப்பட்டும் கூடவே நவக்கிரக கோவில் புனரமைக்கப்பட்டும் புதியவடிவில் வசந்த மண்டபம் கட்டப்பட்டு 02.05.2018ல் மிகச் சிறப்பாக குடமுழுக்கும் செய்யப்பட்டமை அனைவரதும் தலைசிறந்த பணியாகவே கொள்ளப்படும்.

மேலும் அதன் தொடர்ச்சியாக 2018 ஆடிமாதம் தொடக்கம் ஆலோசகர்களாக சட்டத்தரணி திரு.மு.கணேசராசா, திரு.ஆ.நாகலிங்கம், திரு.த.ஜெயநாதன் JP, திரு.வ.மேகநாதன், திரு.மா. அன்னகேசரி ஆகியோரையும் சபைத் தலைவராக திரு.சி.கருணேஸ்வரன், செயலாளராக திரு.மு.பேரின்பராசா, பொருளாளராக திரு.சி.தயானந்தன், உப தலைவராக திரு.பெ.பிரதீப்குமார் மற்றும் உப செயலாளராக திரு.க.அருட்செல்வன் ஆகியோரும் கணக்காய்வாளர்களாக திரு.சோ. பத்மராசா மற்றும் திரு.க.சிவலிங்கம் ஆகியோரும் குடிவண்ணக்கர்களாக திரு.ப.றொஜானந்தன், திரு.சா.ஜெய்சங்கர், திரு.க.சுந்தரம்பிள்ளை, திரு.அ.யோகேஸ்வரன், திரு.ந.நவசீலன், திரு.வி. நித்தியானந்தன், திரு.கு.லோகநாதன், திரு.வே.மகாமாயவன் ஆகியோரும் புதிய நிருவாகக் கட்டமைப்பில் இடம்பெற்றதோடு பிரதம குருவாக திரு.சி.சாம்பசிவம் அவர்களும் உப குருவாக திரு.மா.அருள்நாயகம் அவர்களும் கவடா பொறுப்பாளராக திரு.வெ.கந்தசாமியும் தொடர்ந்து பணியாற்றிவருகின்றனர்.

கூடவே, 1962 முதலாக செயல்பட்டுவரும் வெல்லாவெளி இந்து சமய அபிவிருத்திக் கழகமும் தனது சிறந்த பணியினை தொடர்ந்தும் ஆர்வத்துடன் செயலாற்றிவருவது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு, என்றும் நம்முடன் உணர்வுபூர்வமாக ஒன்றிவிட்ட நமது அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தலம் உயர்வுற இற்றைவரை தங்களது அளப்பெரிய பணிகளை நல்கிய நம் முன்னோர்களையும் இன்று வாழ்ந்துகொண்டிருப்பவர்களையும் நன்றியோடு நினைவுகூர்வது நமது தலையாய கடமையாகும். தேடலில் முடிந்தவரை அவர்களது பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## 1850ஐ தொடர்ந்த காலப் பகுதி

**வண்ணக்குமார்:**

1. மூத்தாப்போடி மாநாகப்போடி அவர்கள். (வண்ணக்கர், ஊர்த் தலைமை)
2. மாநாகப்போடி மூத்தாப்போடி அவர்கள் (வண்ணக்கர், பொலிஸ் தலைமை, ஆலய பூசகர்,வட்டவிதானையார், விச வைத்தியர்)
3. கண்ணாப்போடி சீனித்தம்பி அவர்கள் (வண்ணக்கர், கிராமசபை உறுப்பினர்)
4. கண்ணாப்போடி சின்னத்தம்பி அவர்கள் (வண்ணக்கர்,கூத்துக்கலைஞர்)
5. சத்துருக்கப்போடி சுப்பிரமணியம் அவர்கள் (1930-1971 வரை வண்ணக்கர், ஊர்த் தலைமை, பஞ்சாயக்குழுத் தலைவர்,பல பொது அமைப்புகளின் தலைவர்)
6. சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள் (வண்ணக்கர் 1971-1973)



வண்ணக்கர் சத்திருக்கப்போடி சுப்பிரமணியம் அவர்களது மரணத்தின் பின்னர் அவரது கனிஷ்ட புதல்வன் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் (லிங்கம்) அவர்கள் அவரது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். வண்ணக்கர் மற்றும் ஊர்த்தலைமைப் பொறுப்புகளை 1971 முதல் 1973வரை வகித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியம் சத்திருக்கப்போடி அவர்கள் (வண்ணக்கர் 1974-1975)

சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்களது மரணத்தின்பின்னர் அவரது சகோதரன் சுப்பிரமணியம் சத்திருக்கப்போடி அவர்கள் அப்பொறுப்பினை ஏற்று 1974 – 1975 வரை வண்ணக்கராகச் செயல்பட்டார்.

**1976 முதல் தலைவர்கள்:** (சுழற்சிமுறை)

1. சத்துருக்கப்போடி அழகிப்போடி அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
2. பொன்னம்பலம் பாலகப்போடி அவர்கள் (வீரப் படையாண்டகுடி)
3. சீனித்தம்பி சின்னத்தம்பி அவர்கள் (உலகிப்போடிகுடி)
4. தவசிப்பிள்ளை ஜெயநாதன் அவர்கள் (வேடவேழாளர்குடி)
5. இராசையா சுந்தரலிங்கம் அவர்கள் (பணிக்கனார்குடி)
6. பெரியதம்பி சின்னத்தம்பி அவர்கள் (பெத்தான்குடி)
7. அழகிப்போடி அரசநாயகம் அவர்கள் (பெத்தான்குடி)
8. பெரியதம்பி பொன்னுத்துரை அவர்கள் (வீரப் படையாண்டகுடி)
9. தவசிப்பிள்ளை இராசையா அவர்கள் (வேடவேழாளர்குடி)
10. சாமித்தம்பி மாணிக்கப்போடி அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
11. வைகாளிப்போடி வெடியரசு அவர்கள் (காலிங்காகுடி)
12. சாமித்தம்பி வினாயகமூர்த்தி அவர்கள் (வீரப்படையாண்டகுடி)
13. வயிரமுத்து இளையதம்பி அவர்கள் (வேடவேழாளர்குடி)

(1989 சுழற்சிமுறை அகற்றப்பட்டபின்)

14. சீனித்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
15. ஆழ்வாப்போடி நாகலிங்கம் அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
16. கதிர்காமத்தம்பி மாணிக்கப்பிள்ளை அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
17. கேசவப்போடி சோமசுந்தரம் அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
18. வசந்தராசபிள்ளை மேகநாதன் அவர்கள் (வீரப்படையாண்டகுடி)
19. ஆழ்வாப்போடி நாகலிங்கம் அவர்கள் (பெரிய படையாண்டகுடி)
20. வசந்தராசபிள்ளை மேகநாதன் அவர்கள் (வீரப்படையாண்டகுடி)
21. சிவகுரு கருணேஸ்வரன் அவர்கள் (காலிங்காகுடி)

**அம்மனின் அருளாட்சி மேலோங்கப் பணியாற்றிய பூசகர்கள்**

1. பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் திரு. மாநாகப்போடி மூத்தாப்போடி அவர்களையே முதல் நிரந்தர ஆலய பூசகராக நம்மால் அறியமுடிகின்றது. இதனை 1890ஐ மையப்படுத்தியதாகவும் கொள்ளமுடியும். இவ்வாலயத்தின் தொடக்க காலங்களில் வருடாந்தச் சடங்கினை நிலைப்படுத்தி கதவு திறந்து உற்ஷவ நிகழ்வுகள் மட்டுமே இடம்பெற்றுவந்த நிலையில் அதற்கென ஒரு பூசகரை நியமிக்கும் அவசியம் எழவில்லையென்றே கருதவேண்டியுள்ளது. இவர் 1930 வரை வாழ்ந்த தன்மையில் ஒரு நீண்டகாலம் பூசகராக சிறப்பாகப் பணியாற்றியமை அறியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1908 வாக்கில் வெல்லாவெளியில் திருமணம்புரிந்தவராக கருதப்படும் பெரிய நீலாவணையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு.சின்னத்தம்பி அருமைப்பெருமாள் அவர்கள் ஆலயத்தின் பதில் பூசகராக பணியாற்றிய தன்மையில் மூத்தாப்போடி அவர்களுக்குப்பின்னர் சிறிதுகாலம் பணியாற்றியுள்ளமை தெரிகின்றது.



3. 1928 தொடக்கம் 1969 வரையான ஒரு நீண்டகாலம் திரு. மாநாகப்போடி மூத்தாப்போடி அவர்களின் புதல்வர் திரு.மூத்தாப்போடி மாணிக்கப்போடி அவர்கள் ஆலய பூசகராக மிக்க சிறப்பாகப் பணியாற்றியவராக அறியப்படுகின்றார். தந்தையாரூடாகவும் யாழ்ப்பாணம் சுதுமலை கந்தையா சுவாமியிடமும் பூசை முறைகளை ஒழுங்காகக் கற்றறிந்தவர் இவர். இவ்வாலயத்தைப் பொறுத்தவரை இவரது காலம் ஒரு பொற்காலமாகவே வரலாறு பதிவுசெய்யும்.



4. 1969 தொடக்கம் 1983 வரையான காலப்பகுதியில் பலரும் மெச்சும் தன்மையில் பணியாற்றியவர் திரு.மூத்தாப்போடி போரப்போடி அவர்கள். இவர் கிராமத்தின் பல்வேறு பொதுப் பதவிகளை வகித்த தன்மையில் பெரும் மதிப்புக்குரியவராக விளங்கினார். தனக்கு முன்னர் பணியாற்றிய தனது மூத்த சகோதரர் திரு.மாணிக்கப்போடி அவர்களை அடியொற்றியதாகவே இவர்பணி அமைந்ததெனலாம்.



5. 1983 தொடக்கம் 1995 வரை மிக இக்கட்டான போர்க்காலச் சூழலில் பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் இவ்வாலயத்தின் பூசகராக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் தில்லையப்போடியார் என அழைக்கப்பட்ட திரு.சத்துருக்கப்போடி எதிர்மன்னசிங்கம் அவர்கள். ஊர்மக்களது நிரந்தர இடப்பெயர்வுவரை இவரது பணி சிறப்பாகவே அமைந்திருந்ததெனலாம்.



6. 1995 சித்திரை முதல் 2010 ஆடிவரை ஆலய பிரதம குருவாக நற் பணியாற்றியவர் சோதிடமணி - வைத்தியர் - சிவசிறி சிவகுரு மகாலிங்கசிவக் குருக்கள் அவர்கள். தற்போது இவர் சிவாச்சாரியாராகப் பட்டம் தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



திரு.ச.எதிர்மன்னசிங்கம் - பூசகர்

திரு.மூ.மானாகப்போடி - உப பூசகர்

சிவசிறி சி.மகாலிங்கசிவக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மனம்நிறைந்த தெய்வம் ஆடுபவர்களும் ஆலய வளர்ச்சியில் தங்களை அர்ப்பணித்த பெரியார்களும்

1. செம்பாப்போடி கதிரமலை அவர்கள் (பலவருடங்கள் தலைமாரியம்மனுக்கு கும்பமெடுத்தாடி அருள்வாக்குச் சொல்லிவந்தவர்)

2. செம்பாப்போடி பாலிப்போடி அவர்கள் (மிக நீண்டகாலமாக ஆலயப்பணிகளில் ஈடுபாடு கொண்டவராகவும் ஓதுவாராகவும் திகழ்ந்தவர்)

3. பெரியதம்பி சின்னத்தம்பி அவர்கள் (மிக நீண்டகாலம் தலைமாரியம்மனுக்கு கும்பமெடுத்தாடியவர். அருள்வாக்குச் சொல்வதில் மிகமிக கைதேர்ந்தவர். பலராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்)

4. முண்டாப்போடி சின்னத்தம்பி அவர்கள் (மாரியம்மன் ஆலயக் கணக்குப்பிள்ளையாக மிக நீண்டகாலம் பணியாற்றியவர். ஆலய வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினை நல்கியவர்)

5. மூத்தாப்போடி மயிலிப்போடி அவர்கள் (மிக நீண்டகாலமாக ஆலயத்தோடு தன்னை ஐக்கியப்படுத்தி தெய்வம் ஆடுபவராகவும் அருள்வாக்குச் சொல்பவராகவும் திகழ்ந்தவர்)

6. சின்னத்தம்பிப்போடி மாணிக்கப்போடி அவர்கள் (மிக நீண்டகாலமாக ஆலயத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டவர்)

7. கந்தப்போடி ஆறுமுகம் அவர்கள் (வட்டவிதானையாரான இவர் ஆலய நிருவாகச் செயல்பாடுகளில் பெரும் பங்காற்றியவர்)

8. காளிக்குட்டி வேலாப்போடி அவர்கள் (பல வருடங்கள் தெய்வம் ஆடுபவராகவும் அருள்வாக்குச் சொல்பவராகவும் திகழ்ந்தவர். நாகதம்பிரான் ஆலயத்தை முதலில் மடாலயமாக அமைத்துக்கொடுத்தவர்)

9. நல்லதம்பி பொன்னையா அவர்கள். (பல வருடங்களாக பாலவதனனுக்கு தெய்வம் ஆடுபவராகவும் அருள்வாக்குச் சொல்லுபவராகவும் திகழ்ந்தவர். வதனமார் செயல்பாட்டை மிகத் திறமையாகச் சித்தரிக்கும் ஆற்றல் கைவரப்பெற்றவர். பலராலும் விரும்பப்பட்டவர்.

10. மூத்தாப்போடி மாநாகப்போடி அவர்கள் ( தனது மூத்த தமையனான திரு.மூ.மானாகப்போடி பூசகர் தொடக்கம் தற்போதைய பிரதம குரு சிவசிறி சாம்பசிவக் குருக்கள்வரை அரை நூற்றாண்டு காலமாக ஆலயப் பதில் பூசகராகவும் உடுக்கடி கலைஞராகவும் திகழ்ந்தவர். பத்ததி வழிபாட்டியலிலும் மந்திர வித்தாண்மையிலும் கைவரப்பெற்றவர்)

11. கந்தப்போடி தவசிப்பிள்ளை அவர்கள் (ஆலயத்தொண்டிலும் தேவாரப் பண்ணிசையிலும் முக்கியத்துவம் பெற்றவர். அதிகாலை எழுந்து நீராடி நாதனைப் பிள்ளையாரை வழிபட்டபின் செம்பில் நீரெடுத்து பூக்களுடன் கால்நடையாக கல்லடிப் பிள்ளையாரடிக்குச் சென்று அங்கும் வழிபடுதலை நாளாந்தக் கடமையாகக் கொண்டிருந்தவர்)

12. வீமாப்போடி சிவகுரு விதானையார் அவர்கள் (மாரியம்மன் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனைக் குழுவை 1962ல் ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர். தலைசிறந்த உடுக்கடி இசைக் கலைஞர், ஆலயப்பணிகளில் சிறப்பாகப் பங்காற்றியவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை சாமியார் அவர்கள். (பெரியநீலாவணையைச் சேர்ந்த இவர் திருப்புகழ் சாமியார் எனப் போற்றப்பட்டவர். தனது வாழ்நாளின் பெரும்பகுதியை வெல்லாவெளி மாரியம்மன் ஆலயப் பண்ணிசை பாடுவதிலேயே கழித்தவர்.

14. சீனித்தம்பி நாராயணபிள்ளை அவர்கள். (பூசை பத்ததி முறைகளை நன்கு கற்றறிந்த இவர் அம்மன் ஆலயத்தோடு தன்னை வெகுவாக இணைத்துக்கொண்டவர். சிறந்த உடுக்கடிக் கலைஞராகவும் பாடகராகவும் திகழ்ந்த இவர் 1980 காலப் பகுதியில் பதில் பூசகராகவும் பணியாற்றியவர்)

15. சின்னத்தம்பி தங்கையா அவர்கள். (ஆலயப்பணிகளில் பெரும் ஈடுபாடுகொண்ட இவர் பரிபாலன சபையின் பொருளாளராகச் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.)

16. மாணிக்கப்போடி அன்னகேசரி அவர்கள். ( தனது தந்தை சின்னத்தம்பிப்போடி மாணிக்கப்போடி அவர்களைத் தொடர்ந்து ஆலயப் பணிகளில் இளமைக்காலம்முதல் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக்கொண்ட இவர் ஆலயப் பொருளாளராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியவராவார்)

17. முத்துவேல் பரமானந்தராசா அவர்கள். (தலைமாரியம்மனுக்கு தெய்வமாடிய பெரியதம்பி சின்னத்தம்பி அவர்களின் பேரனான இவர் தனது பாட்டனார் வழியில் இன்று தலைமாரியம்மனுக்கு கும்பமெடுத்துவருகின்றார்.)

18. மண்முனைப்போடி ஆழ்வாப்போடி அவர்கள் (பணிக்கனார்குடி பாகைமுகாமையாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர்)

19. ஆறுமுகம் இராசதுரை அவர்கள் ( உலகிப்போடிகுடி பாகைமுகாமையாளராகப் பல வருடங்கள் பணியாற்றியவர்)

20. அருமைப்பெருமாள் தம்பிராசா அவர்கள் (படையாட்சிகுடி பாகைமுகாமையாளராகப் பணயாற்றியவர்)

21. சாமித்தம்பி பெரியதம்பி JP அவர்கள் (மரணவிசாரணை அதிகாரியான இவர் காலிங்காகுடி பாகை முகாமையாளராகப் பணியாற்றியவர்)

22. மாணிக்கப்போடி அருள்நேசராசா அவர்கள் (செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்)

23. முத்துலிங்கம் நவீந்திரராசாஆசிரியர் அவர்கள் (செயலாளராகப் பணியாற்றியவர்)

24. வேலாப்போடி செல்லத்துரை அவர்கள் (படையாட்சிகுடி பாகைமுகாமையாளராகப் பணியாற்றியவர்)

25. சாமித்தம்பி முத்துலிங்கம் அவர்கள் (படையாட்சிகுடி பாகைமுகாமையாளரகப் பணியாற்றியவர்)

26. முத்துலிங்கம் பேரின்பராசா அவர்கள் (படையாட்சிகுடி பாகைமுகாமையாளராகவும் உப செயலாளராகவும் பணியாற்றி தற்போது செயலாளராகப் பணிபுரிகின்றார்.)

27. போரப்போடி சிவனேசராசா அவர்கள் (பொருளாளராகவும் உப தலைவராகவும் ஆலோசகராகவும் இந்துசமய அபிவிருத்திக்கழகத் தலைவராகவும் பணியாற்றியவர். தொடர்ந்தும் நிருவாகக் கட்டமைப்பில் செயல்பட்டுவருபவர்)

28. இராசதுரை தனுராஜ் ஆசிரியர் அவர்கள் (பொருளாளராகப் பணியாற்றியவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஜெயரெத்தினம் கோபாலசிங்கம் அவர்கள் (பணிக்கனார்குடி பாகை முகாமையாளராகப் பணியாற்றியவர்)

30. குமரப்போடி வினாயகமூர்த்தி அவர்கள் ( பணிக்கனார்குடி பாகைமுகாமையாளராக பணியாற்றியவர்)

31. குமரப்போடி கிருஷ்னபிள்ளை அவர்கள் (பணிக்கனார்குடி பாகைமுகாமையாளராகப் பணியாற்றியவர்)

32. சதானந்தா புவிவண்ணன் அவர்கள் (பணிக்கனார்குடி பாகைமுகாமையாளராகப் பணியாற்றியவர்)

33. கேசகப்போடி சோமசுந்தரம் அவர்கள் (சுழற்சிமுறைத் தலைவராகவும் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும் சேவையாற்றிய இவர் படையாட்சிகுடி பாகைமுகாமையாளர் மற்றும் உப தலைவராகவும் பணியாற்றியுள்ளார்)

34. பாலகப்போடி சோமசுந்தரம் அவர்கள் (காலிங்காகுடி பாகைமுகாமையாளராகப் பணியாற்றியுள்ளார்)

## ஆலயத்துடன் நெருக்கமாகத் தொண்டுபுரிந்த சிலர்

**குருக்கள்மார்:**

01. சின்னத்தம்பி பரதேசிக்குருக்கள் அவர்கள் - பளுகாமம்
02. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை குருக்கள் அவர்கள் - பளுகாமம்
03. துரைசிங்கம் ஆனந்தசங்கரசர்மா அவர்கள் - பளுகாமம்
04. சின்னத்தம்பி சாம்பசிவம் குருக்கள் அவர்கள் - களுவாஞ்சிக்குடி
05. மானாகப்போடி அருள்நாயகம் குருக்கள் அவர்கள் - வெல்லாவெளி

**ஏனையவர்கள்:**

01. திரு. பழனித்தம்பி கறுவல்தம்பி அண்ணாவியார் - பீலியாறு
02. திரு. சத்துருக்கப்போடி இளையதம்பி – பீலியாறு
03. திரு. பாலிப்போடி புண்ணியமூர்த்தி – கோவில்போரதீவு
04. திரு. சின்னவப்போடி செம்பாப்போடி – வெல்லாவெளி
05. திரு. ஏகாம்பரம் முத்துலிங்கம் - வெல்லாவெளி
06. திரு. குஞ்சிளையாப்போடி சிவகுரு – வெல்லாவெளி
07. திரு. ஆறுமுகம் பரசுராமபிள்ளை (உடுக்கிசைக் கலைஞர்) வெல்லாவெளி
08. திரு. ஆறுமுகம் கனகரெத்தினம் (உடுக்கிசைக் கலைஞர்) வெல்லாவெளி
09. திரு. மூத்தாப்போடி கேசகப்போடி (பண்ணிசை) வெல்லாவெளி
10. திரு. குஞ்சித்தம்பி வேதனாயகம் (பண்ணிசை) வெல்லாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திரு. மூத்தாப்போடி வெள்ளையப்போடி (உடுக்கிசைக் கலைஞர்) வெல்லாவெளி

12. திரு. போரப்போடி சிறிஸ்கந்தராசா (உப அர்ச்சகர்) வெல்லாவெளி

13. திரு. எதிர்மன்னசிங்கம் சுந்தரலிங்கம் (உப அர்ச்சகர்) வெல்லாவெளி

14. திருமதி பிள்ளையம்மா ஆறுமுகம் - அம்பிளாந்துறை

15. திரு.வல்லிபுரம் (வல்லி மூப்பன்) ஆலயத் தொண்டில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக்கொண்டவர்.

16. திரு.மாணிக்கப்போடி திருச்செல்வம் (தலைவர், இந்துசமய அபிவிருத்திக்கழகம்)

17. திரு.சோமசுந்தரம் சண்முகராசா ( தலைவர், இந்துசமய அபிவிருத்திக்கழகம்)

18. கவிஞர் இராசலிங்கம் சிவராசசிங்கம்

19. திரு. ம. வயிரமுத்து - மடப்பள்ளியாளர்

20. திரு. சோமசுந்தரம் தம்பிராசா ( இராசதுரை) ஆலயத் தொண்டர்

21. திரு. வெடியரசு கந்தசாமி - மடப்பள்ளியாளர்

22. அமரர். பொன்னியம்மா - ஆலயத்தில் நெடுங்காலம் திருப்பணி செய்தவர்

23. திரு. அழகிப்போடி நடராசா - தொண்டர்

24. திரு. கேசகப்போடி சிவலிங்கம் - மடப்பள்ளியாளர்

25. திரு. கந்தவாமி - தீக்குளி வேலை செய்பவர்

26. திரு. சபாபதி ஓடாவியார் (கல்லாறு) - தீக்குளி வேலை செய்பவர்

27. திரு. பொ. சின்னத்துரை - தீக்குளி வேலை செய்பவர்

**ஆவணப் பதிவுகள்:**

பொதுவாக மாரியம்மன் உடுக்குக் காவியம், மாரியம்மன் உற்பத்தி, தவநிலைப் பாடல்கள், மாரியம்மன் அகவல், மாரியம்மன் அந்தாதி, மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் திருக்குளித்தி, மாரியம்மன் வீதி உலா, மாரியம்மன் ஊஞ்சல் பாட்டு மற்றும் காத்தவராயன் பாடல்கள் போன்றவை இவ்வாலயத்தில் பாடப்படுகின்றன. அட்டைப்பள்ளத்தைச் சேர்ந்த திரு.சீ.கணபதிப்பிள்ளை ஆசிரியர் தனது 'மகமாரித்தேவி திவ்விய கரணி' எனும் தொகுப்பு நூலில் ஓலைச் சுவடியிலிருந்த இது தொடர்பான வதனமார் காவியத்தை இணைத்துள்ளார். கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களால் எழுதப்பட்டு வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவ மன்றத்தின் வெளியீடாக 2012ல் வெளிவந்த 'வெல்லாவெளி வரலாறும் பண்பாடும்' நூலும் வெல்லாவெளியின் வழிபாட்டியல் தொடர்பிலும் கோவில்கள் தொடர்பிலும் நிறையவே காத்திரமான தகவல்களைப் பதிவாக்கியுள்ளன. வெல்லவூர் சிவகுரு தவலிங்கசிவம் அவர்களின் 'சிறி முத்துமாரியம்மன் ஊர்வரலாறும் பக்திப்பாடலும்' எனும் பெயரிலான இறுவட்டு ஒன்றும் 2018ல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெல்லாவெளி இந்து சமய அபிவிருத்திக் கழகம்:**

ஆலய நிருவாகத்திற்கு உறுதுணையாகவும் அதன் வளர்ச்சியில் முக்கிய பங்குதாரர்களாகவும் 1962 முதல் செயல்பட்டுவருவது வெல்லாவெளி இந்து சமய அபிவிருத்திக் கழகமாகும். இதனை திருப்புகழ் சாமியார் என அழைக்கப்பட்டவரும் வெல்லாவெளி மாரியம்மன் ஆலயத்துடன் மிக நெருங்கிய அடியாராக தன்னை நிலைநிறுத்திக்கொண்டவருமான பெரியநீலாவணையைச் சேர்ந்த சி.கணபதிப்பிள்ளைச் சாமியார் கூட்டுப்பிரார்த்தனைக் குழு என்ற பெயரில் ஆரம்பித்தார். அதன் பின்னர் இச்சபை இந்துசமய அபிவிருத்திக் கழகமாக மாற்றப்பட்டது. இதன் தலைவராக அப்போதைய கிராம விதானையார் திரு.வீ.சிவகுரு, செயலாளராக திரு.சீ.சதாசிவம், பொருளாளராக திரு.த.ஜெயநாதன் மற்றும் உப தலைவராக திரு.பெ.ஏரம்பமூர்த்தி ஆகியோரும் செயல்பட்டனர். வெள்ளிக்கிழமைகளில் மாலைநேரக் கூட்டுப்பிரார்த்தனையுடன் இரவுப் பூசையினையும் இவர்கள் தொடராக முன்னெடுத்து வந்தனர். அதுமுதல் இக்கழகம் தொடர்ந்து தனது பணியினை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. காலப்போக்கில் இக்கழகமானது ஆலய விழாக்கள் மற்றும் வழிபாடு சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளிலும் ஆலய நிருவாகத்துடன் இணைந்து தங்கள் பங்களிப்பினைச் செய்துவருகின்றது. கலை நிகழ்வுகளிலும் இவர்களது செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றதாகவே அமைகின்றது.

**ஆரம்பகாலச் செயல்பாட்டாளர்கள்:**



**திரு.வீ.சிவகுரு** (விதானையார்)
தலைவர்



**திரு.சீ.சதாசிவம்**(PHI)
செயலாளர்



**திரு.த.ஜெயநாதன்** J.P
பொருளாளர்



1985 –1990 வரையில் பணியாற்றிய வெல்லாவெளி இந்து சமய அபிவிருத்திக் கழகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று பணியிலுள்ள இந்துசமய அபிவிருத்திக்கழகம்



## வாழ்நாள் முழுவதும் ஆலயத்தோடு தங்களை ஐக்கியப்படுத்தியவர்கள்



01.பெ.சின்னத்தம்பி அவர்கள், 02.சி.மாணிக்கப்போடி அவர்கள், 03.மு.சின்னத்தம்பி அவர்கள்





ஆலயத்தில் இடம்பெறும் அம்மனுக்கான சர்க்கரை அமுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துமாரியம்மன்
## பக்திமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துமாரியம்மன்
## இசைப் பாடல்கள்

-கவிக்கோ வெல்லவூர்க்கோபால்-
(தேசியக் கலைஞர் எஸ்.கோபாலசிங்கம்)

### பாடல் – 01

**காப்பு:**

நீதிதோய் வன்னிமையின் நிகரில்நா தனைநாட்டின்
ஆதியாம் சுவாதியம்மன் அருளீயும் மகமாயி!
நாதத்தின் திருவடியை நாம்பாடக் கல்லடியின்
வேதத்தின் மெய்ப்பொருளாம் விநாயகனும் காப்பாமே!

**வேறு:**

நாதனை ஆற்றோரம் வேழமுகமா யமர்ந்த
அரசையடி ஐங்கரனே சரணம் ஐயா! – எழில்
கொஞ்சுகின்ற குளக்கரையில் அஞ்சேலென அருள்புரியும்
வீரையடிப் பிள்ளையாரே சரணம் ஐயா!

**வேறு:**

சக்தியின் நாமம் புத்துயிர் பெற்றது
வெல்லா வெளியினிலே
சாந்த சொரூபி மகமாரி தேவியின்
அழகிய கோலத்திலே
எத்தனை ஆயிரம் பக்தர் குவிகின்றார்
அன்னையின் வாசலிலே
அத்தனை பேருக்கும் சித்தி யளிக்கின்றாள்
வடிவுடை நாயகியே – எங்கள்
வடிவுடைநாயகியே! (சக்தியின் நாமம்)

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவள்
வெல்லா வெளியாத்தா – வந்து
வேப்பிலைக் கொத்தாலே வேதனை தீர்ப்பவள்
பக்தர் முகம் பார்த்தா! – சிவ
சக்தி வடிவான திரிசூல காரியெம்
தீவினைகள் அறுப்பாள் - என்றும்
நித்திய சொரூபியாய் நீக்கமற நின்று
காத்திடும் செல்லாத்தா! – எம்மைக்
காத்திடும் செல்லாத்தா!
(சக்தியின் நாமம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரோடும் சிறப்போடும் நீவாழும் திருத்தலம்
பேர்பெற வேண்டுமம்மா – என்றும்
பேர்பெற வேண்டுமம்மா
திக்கெட்டும் வாழுமெம் இக்கட்டை போக்கிநிதம்
தேவியே காத்தருளுவாய் - எங்கள்
தேவியே காத்தருளுவாய்! (சக்தியின் நாமம்)

## பாடல் – 02

வல்வினை அகற்றிடுவாள் மகமாயி – வெல்லா
வெளிநகர் வாழுகின்ற விசாலாட்சி – அம்மா
வல்வினை அகற்றிடுவாள் மகமாயி!

புல்லுநல் அருவிகள் இசைபாடும் - அன்னை
பூங்கழல் இல்லமெல்லாம் நடமாடும் - அம்மா (வல்வினை)

மருத நிலப்பதி கோவில்கொண்டாள் - எங்கள்
வளமான வாழ்வுக்கு காவல்தந்தாள்
கருணை மழைபொழியும் திருக்காட்சி – தேவி
கருமாரி புரிவதெல்லாம் அருளாட்சி - அம்மா (வல்வினை)

ஆனித் திங்களவள் ஊர்க்கோலம் - காண
அழகுப் பதிசூடும் எழில்கோலம்
வாழும் மனைகள் எல்லாம் மாக்கோலம் - அன்னை
வருகின்ற பாதையெல்லாம் பூக்கோலம் - அம்மா (வல்வினை)

ஊர்காவல் மனைகாவல் தாய்வருவாள் - எங்கள்
உடலெல்லாம் வேப்பிலையால் தடவிடுவாள்
தீராத வினைகளெல்லாம் தீர்த்துவைப்பாள் - எந்தத்
தீங்குமெமை அண்டாமல் காத்துநிற்பாள் - அம்மா (வல்வினை)

சிவசக்தி வடிவான தேவியிவள் - அடியார்
சேவிக்க அருளுகின்ற மாரியிவள்
அமுதத் தமிழ்க் கலைக்கு தாயுமிவள் - எங்கள்
அழகுப்பதி தவளும் சேயுமிவள் - அம்மா (வல்வினை)

## பாடல்: 03

பார்புகழ் நாதனைப் பதியினிலே - வந்து
கோவில் கொண்டாய் உமையவளே!
முத்து மாரியின் வடிவாகி - எமக்கு
சித்திகள் யாவும் தருபவளே! - (பார்புகழ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம்வாழ அருள்வாயே தேவி – மனக்
குறையாவும் தீர்ப்பாயே தேவி!

அண்ணல் சிவனார் துணையிருக்க – உனக்கு
அழகிய நாகம் குடைபிடிக்க
கண்ணன் கோவில் கொண்டிருக்க – அருகில்
கணபதி முருகன் கொலுவிருக்க - (பார்புகழ்)

குலம்வாழ அருள்வாயே தேவி – மனக்
குறையாவும் தீர்ப்பாயே தேவி!

உயிரைக் காக்க ஒளிந்திருந்தோம் - நாம்
ஒவ்வொரு ஊராய் அலைந்திருந்தோம்
பசுமை மீண்டும் வரவேண்டும் - எங்கள்
பழம்பதி உயிர்த்து எழவேண்டும் (பார்புகழ்)

குலம்வாழ அருள்வாயே தேவி – மனக்
குறையாவும் தீர்ப்பாயே தேவி!

நித்தமும் உன்னடி தொழவேண்டும் -- உன்
நிழலினில் வாழ்ந்திட வரம்வேண்டும்
கற்றவர் நிறைந்த சபைநடுவே – நாம்
கவிமலர் சூடநீ வரவேண்டும்! - (பார்புகழ்)

குலம்வாழ அருள்வாயே தேவி – மனக்
குறையாவும் தீர்ப்பாயே தேவி!

## பாடல்: 04

வெல்லாவெளி கோவில்கொண்ட வேப்பிலைக்காரி – எங்கள்
உள்ளமெல்லாம் கொலுவிருக்கும் ஓங்காரி மாரி
கள்ளமில்லா அடியவரைக் காக்குமெம் தேவி – உன்
காலடியே தஞ்சமம்மா சிவமுத்துமாரி
அம்மா சிவமுத்தமாரி! அம்மா சிவமுத்துமாரி! - (வெல்லாவெளி)

மஞ்சள் ஆடை கட்டிக்கொண்டோம் மடிப்பிச்சை ஏந்தி
மாதாவுன் சன்னதிக்கு வருகிறோம் அம்மா
கொஞ்சுமெழில் முகத்தழகி குங்குமக்காரி – நீ
கொலுவிருக்கும் கோலம்காண வருகிறோம் அம்மா! - (வெல்லாவெளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனிமாதம் பி றந்ததம்மா சிவமுத்துமாரி – உன்
அழுகுப்பதி மலர்ந்ததம்மா சிவமுத்துமாரி
சிலம்பு உடுக்கோசை சிவமுத்துமாரி – எட்டுத்
திசையெல்லாம் கேட்குதம்மா சிவமுத்துமாரி - (வெல்லாவெளி)

வேப்பிலைக் கரகமம்மா சிவமுத்துமாரி – நின்று
வீசிவிளை யாடுதம்மா சிவமுத்துமாரி
பாற்குடப் பவனியம்மா சிவமுத்துமாரி – காண
படியிறங்கி வாருமம்மா சிவமுத்துமாரி - (வெல்லாவெளி)

ஊர்விட்டுப் போனாலும் சிவமுத்துமாரி – உன்
உறவுவிட்டுப் போகாதம்மா சிவமுத்துமாரி - இப்
பாரினில் உன்னைவிட்டால் சிவமுத்துமாரி – வேறு
யாரெமக்கு காவலம்மா சிவமுத்தமாரி - (வெல்லாவெளி)

## பாடல்-05

ஓம்... சக்தி ஓம் ஓம்... சக்தி ஓம்
ஓம்... சக்தி ஓம் ஓம்... சக்தி ஓம்

ஆங்கார ரூபியாய் அகிலத்தில் அவதரித்த
ஓங்கார மெய்ப்பொருளே! உலகாளும் நாயகியே!
கண்ணனின் உருவாகி கருணைமழை பொழிகின்ற
கற்பக வல்லித்தாயே! அம்மா கற்பகவல்லித்தாயே!
விண்ணுயரப் புகழ்கொண்டு மண்ணுலகை ஆளுகின்ற
வெல்லாவெளி மாரியே! அம்மா வெல்லாவெளி மாரியே!

ஓம்.... சக்தி ஓம் ஓம்... சக்தி ஓம்
ஓம்... சக்தி ஓம் ஓம்... சக்தி ஓம்

அன்னை பூரணியும் நீ! சிம்மவாகினியும் நீ!
அங்கயற் கண்ணிநீயே!
ஆலகாலமுண்ட அரனார் இடப்பாகம்
அமர்ந்திட்ட தேவிநீயே!
காலசங்கரியும் நீ! கார்த்தி யாயினியும் நீ!
கமல பூரணியும் நீயே!
காலரூபினியும் நீ! வேதநாயகியும் நீ!
கண்ணனூர் அபிராமியே!
விண்ணுயரப் புகழ்கொண்டு மண்ணுலகை ஆளுமெம்
வெல்லாவெளி மாரியே! அம்மா வெல்லாவெளி மாரியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்... சக்தி ஓம்      ஓம்... சக்தி ஓம்
ஓம்... சக்தி ஓம்      ஓம்... சக்தி ஓம்

காஞ்சி காமாட்சி நீ! மதுரை மீனாட்சி நீ!
வெக் காளிகாம்பாளும் நீயே!
காசி விசாலாட்சி நீ! கஞ்சனூர் மாரிநீ!
செங் காளத்தி அம்மன் நீயே!
மாங்காடு வேற்காடு மருவத்தூர் திருவொற்றூர்
மாசயனி அம்மன் நீயே!
தஞ்சை திரிசூலிநீ! சமயபுரத் தேவிநீ!
தண்டு மகமாரித் தாயே!
விண்ணுயரப் புகழ்கொண்டு மண்ணுலகை ஆளுமெம்
வெல்லாவெளி மாரியே! அம்மா வெல்லாவெளி மாரியே!

ஓம்... சக்தி ஓம்      ஓம்... சக்தி ஓம்
ஓம்... சக்தி ஓம்      ஓம்... சக்தி ஓம்

## பாடல்–06

தந்தனத் தந்தனத் தந்தானா தன
தந்தனத் தந்தனத் தானானா
தந்தனத் தந்தனத் தந்தானா தன
தந்தனத் தந்தனத் தானானா

செல்லாத்தா செல்ல மாரியாத்தா – நாளும்
அள்ளிக் கொடுக்கும் வெல்லா வெளியாத்தா – அம்மா
செல்லாத்தா செல்ல மாரியாத்தா – நாளும்
அள்ளிக் கொடுக்கும் வெல்லா வெளியாத்தா

வாயாரப் பாடிவந்தோம் அம்மா
கண்ணாரக் காணவந்தோம்
நீவாழும் கோவிலிலே அம்மா
நித்தமும் கூடிநின்றோம் -      செல்லாத்தா

கற்பூரச் சட்டியை ஏந்திவந்தோம் - உந்தன்
காலடி காணவே ஏங்கி நின்றோம்
பொற்புடை நாயகி வடிவழகி – தாயே
பூவிழி திறந்தெமைப் பாருமம்மா! –      செல்லாத்தா

மஞ்சள் நிறச்சேலை கட்டிவந்தோம் – அம்மா
மாவிளக்கு கையில் ஏந்திவந்தோம்
செந்தூரத் திலகம் அணிந்தவளே – அம்மா
தேவியே கண்கொண்டு பாருமம்மா -      செல்லாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமர நீளல் கோவில்கொண்டு – எங்கள்
வேதனை போக்கி அருளும் தாயே
கூப்பிட்ட குரலுக்கு வருபவளே – உள்ளக்
கோவி லமர்ந்தெமை ஆள்பவளே! – செல்லாத்தா

தந்தனத் தந்தனத் தந்தானா தன
தந்தனத் தந்தனத் தானானா
தந்தனத் தந்தனத் தந்தானா தன
தந்தனத் தந்தனத் தானானா

## பாடல்-07

ஓங்கார தத்துவத்தின் உட்பொருளாகி நிற்பவளே!
ஓவ்வொரு உயிரினிலும் உயிர்ப்பாய் நிலைத்தவளே!
வேண்டும் வரமருளும் வித்தகியே திரிசூலி! – உனை
வேண்டினோம் அம்மா! வேதவல்லி வந்தருள்வாய்!
வேதவல்லி வந்தருள்வாய்! வேதவல்லி வந்தருள்வாய்!

குங்குமத்தில் குடியிருப்பாள்! எங்களுக்குப் படியளப்பாள்!
வெல்லாவெளி மாரியெனப் போற்றிப் புகழும் அன்னையே!
வெல்லாவெளி மாரியெனப் போற்றிப் புகழும் அன்னையே!
எங்கள் வடிவுடையே தாயே! என்றும் துணை நீயே!
எங்கள் வடிவுடையே தாயே! என்றும் துணை நீயே! (குங்குமத்தில்)

திரிசூலமே கையிலேந்தியே தினமும் வந்திடுவாள்
பரிவுபொங்கிடக் கருணைவிழியால் பார்த்து மகிழ்ந்திடுவாள்!
அரன் பாதமே தினம் போற்றிடும் ஆதியாம் சோதியிவள் - மன
இருளைநீக்கி ஒளியைப் பாய்ச்சும் அன்னையெம் மாரியிவள் (குங்குமத்தில்)

வேப்பிலைக் கொத்தாலே வீசியே அடியவர்
வேதனை போக்கிடுவாள்
வெண்ணீறை மருந்தாக உட்கொள்ளத் தந்துமே
வினையெல்லாம் நீக்கிடுவாள்
பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நின்ற
பார்வதி தேவியிவள் - இப்
பாரை ஒரு கையில் பம்பரமாய்க் கொண்ட
பராசக்தி மாரியிவள்! – அன்னை
பராசக்தி மாரியிவள்! (குங்குமத்தில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் – 08

வெல்லா வெளிக்கு மாரி யம்மனை
கண்டு தொழுதிட வாருங்கள் - அவள்
உள்ளம் மகிழ்ந்திட அள்ளிக் கொடுப்பவள்
என்ன வேணுமோ கேளுங்கள் - (வெல்லாவெளிக்கு)

சிம்ம வாகனத்தில் தேவி கொலுவரும்
அழகைப் பாருங்கள் – நம்
சிந்தை குளிர்ந்திட கருணைவிழி சிந்தும்
ஒளியைப் பாருங்கள் - (வெல்லாவெளிக்கு)

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவள்
வேப்பிலைக் காரியம்மா - எங்கள்
வேப்பிலைக் காரியம்மா - மனக்
குறையோடு வருபவர் நிறைவோடு செல்வதை
குவலயம் சொல்லுமம்மா! - இந்தக்
குவலயம் சொல்லுமம்மா - (வெல்லாவெளிக்கு)

சிந்தைக்கும் எட்டாத பிரபஞ்ச மனைத்தையும்
சேவிக்கும் தேவியம்மா - தனை
நம்பிய பக்தரை நெஞ்சிலே தாங்குவாள்
நவசக்தி மாரியம்மா! - எங்கள்
நவசக்தி மாரியம்மா! - (வெல்லாவெளிக்கு)

வெல்லா வெளிவாழ் வேப்பிலைக் காரிக்கு
எத்தனை மகிமையம்மா - அவள்
அள்ளிக் கொடுப்பதில் அகிலத்தில் எவருண்டு
சரிநிகர் சமானமம்மா! – அம்மா
சரிநிகர் சமானமம்மா! - (வெல்லாவெளிக்கு)

## பாடல்–09

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

தானதான தனனா – தன
தான தான தனனா
தானதான தனனா – தன
தான தான தனனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிவந்தாள் ஆடிவந்தாள் ஆனிமுதற் கூறில்
தேடிவந்தாள் தேடிவந்தாள் வெல்லாவெளி ஊரில்
தாயிருக்கும் கோவிலுக்கு நாலுபக்க வாசல்
வேணாமென்று தடுப்பதற்கு யாருமில்லை காவல் - நாம்
வேப்பமர நீளலில வாழுகின்ற சாதி – எங்கள்
மாரியிவள் சன்னிதியில் மாறாது நீதி
ஊரறியும் உலகறியும் கேட்டுப்பாரு நீயே! - என்றும்
மாறிவிட மாட்டாள் எங்கள் முத்துமாரித் தாயே!
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்

பச்சை போர்த்திய வயல்நடுவே – அன்னை
இச்சா சக்தியாய் வீற்றிருந்தாள்
வெல்லா வெளிமுத்து மாரியென்றே – அவள்
செல்லப் பெயரும் ஏற்றிருந்தாள்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்   (தானதான தனனா)

உன்னால்தானே உலகத்தைப் பார்த்தோம்!
உன்னையே உலகாய் எண்ணியே வாழ்ந்தோம்!
முதல்பால் எமக்கு ஊட்டிய தாயே!
முழுமுதற் தெய்வமாய் அமர்ந்திட்ட தேவியே!
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்   (தானதான தனனா)

இசைத்தோம் பாட்டிசைத்தோம் - தாய்
முத்து மாரியை நினைந்தே – அவள்
அருள் மழையில் தினம் நனைந்தே - நாம்
இசைத்தோம் பாட்டிசைத்தோம்!
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்   (தானதான தனனா)

வாய்ப்பளித்தாய் உன்னை வாழ்த்திப் பாடிட
வந்தமர்ந்தாய் நெஞ்சம் கோவில் கொண்டிட
நீயின்றி எமைக்காக்க வேறுயாரம்மா – நின்மலர்ப்
பதமன்றி துணையெமக்கு வேறுஏதம்மா!
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம்   ஓம் சக்தி ஓம்   (தானதான தனனா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி மகமாரியம்மன்

## திருவாதிரை ஊஞ்சல் பாடல்கள்

**-கலாபூஷணம் க.தணிகாசலம்-**

(திருப்பழுகாமம்)

**தரு :** தானதன்னா தன தானதன்னா தன தானினம் தானானே
தானதன்னா தன தானதன்னா தன தானினம் தானானே

**பிள்ளையார் காப்பு:**

செம்மொழி முத்தமிழ் செவ்விதழ் நாயகன்
செங்கை மழுவோனே – அன்னை
தேவியாம் மாரியும் பொன்னூஞ்சல் ஆடிடத்
தேரும் வரமருளே! - தான

குன்றொளி போலொளி வீசியருள்புரி
கோவிந்தன் சோதரியாள் - மக
மாரி வடிவிலே காட்சி கொடுத்திடும்
மாது உமைய வளாள் - தன

ஆதிரைத் தீர்த்தம தாடியே அம்மனும்
ஆறுதல் கொள்வேளை – பொன்
ஊஞ்சலில் வைத்துமே பாடியே ஆட்டிடப்
பாவையர் கூடினரே! - தான

வேப்பமரத் திரு கால்கள் நிறுத்தியே
மேல்வளை தானேற்றி – தெற்ப
நாணினைப் பூட்டியே சந்தணப் பேழையில்
தேவியைத் தானிருத்தி - தான

திங்கள் சடையொளிர் செஞ்சுடராம் சிவ
சோதியின் மாதுமையாள் – எழில்
சுந்தரப் பொன்னூஞ்சல் தோகையர் ஆட்டிட
தேவிநீ ஆடீரோ! - தான

மஞ்சள் குளித்துமே மங்கல நீராடி
வையம் சிறப்புறவே – எங்கள்
சஞ்சலம் போக்கிட வந்தனை பொன்னூஞ்சல்
தாயேநீ ஆடீரோ! - தான

மாரியம்மன் அவ தார மெடுத்துமே
மாதவம் செய்தவளே – எங்கள்
மாதுமை தேவியே வாழ்வு சிறப்புற
பொன்னூஞ்சல் ஆடீரோ! - தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழமுகத்து விநாயகனை வெற்றி
வேலனைப் பெற்றவளே – வேத
நாயகி ஆதி பராசக்தி தேவியே
பொன்னூஞ்சல் ஆடீரோ! - தான

பக்தர் உளமெல்லாம் நர்த்தன மாடிடும்
பத்தினித் தாயாரே – உந்தன்
சித்தம் குளிர்ந்திடும் திருவாதிரை நந்நாளில்
பொன்னூஞ்சல் ஆடீரோ! - தான

துர்க்கையும் நீயம்மா பேச்சியும் நீயம்மா
மாரியும் நீதாயே – சிவ
சக்தி வடிவான தேவி உமையேநீ
பொன்னூஞ்சல் ஆடீரோ! - தான

மட்டுநல் வாவி வளமுறு நீர்நிலை
மாதாவுன் கோவிலம்மா – எங்கள்
பொட்டு நிறைநுதல் பத்தினி அன்னையே
பொன்னூஞ்சல் ஆடீரோ! - தான

நீர்நிலை பட்டெழு மாருதம் வீசிடும்
நிழல்செறி உயர்மரங்கள் - உந்தன்
ஆலயம் சூழ்ந்து அழகுறும் போதினில்
ஆடீரோ பொன்னூஞ்சல்! - தான

கைவளை ஓசையும் காற்சிலம் போசையும்
கலந்தே இசையொலிக்க - எங்கள்
மெய்யொளிர் அன்னையே மேகநிறத்தாளே
ஆடீரோ பொன்னூஞ்சல்! -தான

நெற்கதிர் ஆடும் வயல்நிறை சூழலில்
நீர்நிறை குளத்தருகே – உந்தன்
பொற்பதம் நடமிடும் புண்ணிய தலமதில்
ஆடீரோ பொன்னூஞ்சல்! - தான

பள்ளி எழுச்சியும் பாவைநல் நோன்புமாய்
பத்துத் தினம் இருந்தோம் - எங்கள்
வெல்லா வெளிவாழும் வேப்பிலைக் காரியே
வேண்டினோம் உன்னருளே! - தான

மார்கழி மாதம் புனிதமம்மா இந்த
மாதம் வரும்விரதம் - திரு
ஆதிரைத் தீர்த்தமே ஆடினர் பக்தர்கள்
வாழிய வாழியவே! - தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வாழ வாழ்வளிப்பாய் மாரி!

-செல்வி ஹாஞ்சனா கணேசமூர்த்தி-

பத்தினியே உத்தமியே மாரியம்மா
பரிதவிக்கும் எங்களைநீ பாருமம்மா
எத்தினமும் மக்களிங்கே ஏங்கிநிற்க
ஏனென்றும் பாராமல் இருக்கலாமோ
உத்தமியே துயரலையில் உழலுகின்றோம்
ஓடோடி வந்தெம்மைக் காருமம்மா
சித்திதரு சக்தியெங்கள் வெல்லவூரின்
சிறிமுத்து மாரியே அருள்செய்வாயே!

பாராளும் தாயாரே மாரியம்மா
பக்கமிருந் தெங்களைநீ பாருமம்மா
பேராபத் தெப்போதும் வருகுதம்மா
பெரும்தொல்லை தொடர்ந்தெம்மை வருத்துதம்மா
போராலே எல்லாமும் இழந்துவிட்டோம்
போல்லாத ஊழ்வினையில் விழுந்துவிட்டோம்
தாராள நெஞ்சுடையாய் தாயேநீதான்
தற்காத்து எங்களுக்கு அருள்செய்வாயே!

பில்லிபிணி சூனியங்கள் அகற்றும்தாயே
பிரச்சனைகள் அண்டாமல் காருமம்மா
பல்லியென வீழ்வதற்கா பாரில்வந்தோம்
பயந்தொடுங்கிச் சாவதற்கா வளர்ந்திருந்தோம்
புல்லர்செயல் யாவுமென்ன புனிதமம்மா
பொறுத்திடுதல் இனியுனக்குப் போதுமம்மா
சொல்லரிய சக்தியெனத் தோன்றும்தாயே
தொடர்ந்தெம்மை துணையிருந்து அருள்செய்வாயே!

பீடுதுயர் நீக்கியெமை ஆளும்தாயே
பீதிகொண்ட வாழ்வாக வாழுகின்றோம்
நாடிநின்றோம் நாளுமுனைத் தேடிநின்றோம்
நாதியற்றுப் போனவரா நாங்களெல்லாம்
சூடுதணல் புழுவாகித் துடிக்கின்றோமே
சுந்தரிநீ பார்த்திடா திருப்பதேனோ
கூடிவர விடுதலைக்கு வித்தாய்நின்று
குவலயத்தே வடிவழகி அருள்செய்வாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதங்கள் எங்களுக்குள் வேண்டாமம்மா
பேறிலுயர் நல்லாட்சி நிலைக்கவேண்டும்
பாதகங்கள் அணுவளவும் தோன்றாவண்ணம்
பார்போற்ற பண்புடமை ஓங்கவேண்டும்
வேதனையும் சோதனையும் கடந்தேவாழ்வில்
விடியலொன்றே எஞ்ஞான்றும் விளங்கவேண்டும்
சீதமிகு செழும்பதியாம் வெல்லாவெளிச்
சிறிமுத்து மாரிநிதம் அருள்செய்வாயே!

பொலபொலென நல்மாரி பொழியவேண்டும்
பொன்பொருளாய் வாழ்வெல்லாம் பொலியவேண்டும்
நிலம்குளிர்ந்து நீர்நிறைந்து வளம்மலிந்து
நீடுலகில் எஞ்ஞான்றும் நிகழவேண்டும்
தளராது சமாதானம் தளைக்கவேண்டும்
சமத்துவே வாழ்வென்றும் நிலைக்கவேண்டும்
நிலைபேறாய் வெல்லவூர் வாழும்தாயே
நித்திலமே உனைப்பணிந்தோம் அருள்செய்வாயே!
அன்னை மகமாரி அருள்வாய் அம்மா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை மகமாரி அருள்வாய் அம்மா!

-கன்னிமுத்து வெல்லபதியான்-

(ச.நவேந்திரன்)

01

வெல்லாவெளித் தாயாரே மாரியம்மா –எங்கள்
வினையறுக்கும் பெரும்தெய்வம் நீயேயம்மா!

வேம்புமர நிழலினிலே குடியமர்ந்தாய் - தாயே
வேப்பிலையின் மகத்துவத்தை அறியத்தந்தாய்
நம்பிவரும் மக்கள்தமைக் காக்கும் தெய்வமே – இந்த
நாட்டுமக்கள் யாவருக்கும் கருணைத் தெய்வமே! - வெல்லா

வரலாற்றில் உயர்ந்தவள்நீ தேவியம்மா- அம்மா
வல்லமைகள் நிறைந்தவள்நீ மாரியம்மா
அரவணைப்பில் உனக்குநிகர் தெய்வமில்லையே – தாயே
ஆதிசக்தி என்பதிலே பொய்யுமில்லையே - வெல்லா

முத்தமிழின் சொத்தான முத்துமாரியே – அம்மா
மண்ணுக்கு கண்ணான மகமாரியே
புத்திதரும் சித்திதரும் லோகநாயகி – தாயே
பக்திதந்து முத்திநல்கும் தாயும்நீயே! - வெல்லா

02

அரோகரா கோசமது கேட்குது இங்கே – அன்னை
அருளாட்சி தினம்தினம் நடக்குது நன்கே

அன்னையென்று சொன்னாலே முன்னேவருபவள்
என்னவேணு மென்றுகேட்டு அருளைப்பொழிபவள்
கண்ணிமைபோ லிருந்துஎன்றும் காவல்செய்பவள்
கண்ணொளியாய் தினமியங்கி வாழச்செய்பவள் - அரோகரா

வெல்லாவெளி என்றதுமே எழுந்துவருபவள்
வேப்பிலையாய் உள்ளிருந்து பிணியைத்தீர்ப்பவள்
நெல்விளையும் பூமியிலே கோவில்கொண்டவள்
நெல்லும்நீரும் தந்துதந்தெம் உயிரில்வாழ்பவள் - அரோகரா

சிங்கமேறி விரைந்துவந்து சிக்கல்தீர்ப்பவள்
சிரித்தமுகம் காட்டிநிதம் நெகிழச்செய்பவள்
சங்கூதும் ஒலியோடு உடலிலூர்பவள்
சங்கத்தமிழா யுள்ளிருந்து உயரவைப்பவள் - அரோகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் தாலாட்டு

-வெல்லபதி சரவணன்-

(ச.கணேசமூர்த்தி)

வந்திடுவாய் வரமருள்வாய் முத்துமாரி
வருந்துவோரின் துயர்துடைப்பாய் முத்துமாரி
வேப்பிலையால் தான்தடவி முத்துமாரி
வேர்பிடித்த வினையறுப்பாய் முத்துமாரி
பாடிவந்தோம் பரவிவந்தோம் முத்துமாரி
பழவினைகள் போக்கிடுவாய் முத்துமாரி
தேடிவந்தோம் ஓடிவந்தோம் முத்துமாரி
தேவைகளைத் தீர்த்தருள்வாய் முத்துமாரி

நாலுமறை ஓங்காரி முத்துமாரி
நாம்வாழ வழிகாட்டு முத்துமாரி
கல்வியைத்தா கலைகளைத்தா முத்துமாரி
கலங்கரையாத் திசைகாட்டு முத்துமாரி
கும்பத்தின் மீதமர்ந்து முத்துமாரி
குவலயத்தை வழிநடத்து முத்துமாரி
சிங்காரி ஓங்காரி முத்துமாரி
சிவலோக நாயகியே முத்துமாரி

தினப்பூசை நாளினிலே முத்துமாரி
திக்கோரை திகழவைப்பாய் முத்துமாரி
துள்ளுமாவும் பாணக்கமும் முத்துமாரி
துதிப்போரால் நீபெறுவாய் முத்துமாரி
மாரியென்றால் மழைபொழிவாய் முத்துமாரி
தேவியென்றால் தேன்சொரிவாய் முத்துமாரி
மாரியிலும் கோடையிலும் முத்துமாரி
மரகதமாய் நீஜொலிப்பாய் முத்துமாரி

வீரையடி விநாயகனின் முத்துமாரி
வீரத்தாய் நீயல்லவோ முத்துமாரி
அரசையடி ஐங்கரனின் முத்துமாரி
ஆசையன்னை யானவளே முத்துமாரி
கல்லடியின் கணபதிக்கு முத்துமாரி
கருணையுள்ள தாயுமல்லோ முத்துமாரி
கைகாட்டிச் சந்தியிலும் முத்துமாரி
காவல்தெய்வ மாயமர்ந்தாய் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனியிலே சடங்கேற்பாய் முத்துமாரி
அனைவரையும் ஒளிரவைப்பாய் முத்துமாரி
வெள்ளிப் பிரம்பெடுப்பாய் முத்துமாரி
வேப்பிலையைக் கரம்பிடிப்பாய் முத்துமாரி
ஊர்காவல் நீவருவாய் முத்துமாரி
ஊரனைத்தும் பிசகறுப்பாய் முத்துமாரி
துஷ்டர்தம் துடுக்கடக்கும் முத்துமாரி
துதிப்போரின் துயர்துடைப்பாய் முத்துமாரி

சூனியக் காரர்களை முத்துமாரி
சூட்சுமமாய்ப் பணியவைப்பாய் முத்துமாரி
ஆறாம்நாள் சடங்கினிலே முத்துமாரி
ஆலயத்துள் பூசைசெவ்வாய் முத்துமாரி
கம்பமேறித் தவமிருப்பாய் முத்துமாரி
கச்சிதமாய் நீறெடுப்பாய் முத்துமாரி
பத்ததியும் ஆகமமும் முத்துமாரி
பவித்திரமாய் அனுபவிப்பாய் முத்துமாரி

பொல்லாத நோய்பிணியை முத்துமாரி
பொடிப்பொடியாய் தகர்த்தெறிவாய் முத்துமாரி
கொள்ளிவாய் பேய்களைநீ முத்துமாரி
கோபமுடன் துரத்திவைப்பாய் முத்துமாரி
குழந்தைகுட்டி இல்லார்க்கு முத்துமாரி
கொடையாக அருள்கொடுப்பாய் முத்துமாரி
அன்னபரி பூரணிநீ முத்துமாரி
அனைவரையும் வாழவைப்பாய் முத்துமாரி

உன்னைநம்பி தீமிப்போர் முத்துமாரி
உன்னருளால் நலம்பெறுவார் முத்துமாரி
சிங்கத்தின் மீதமர்ந்து முத்துமாரி
சிக்கல்களை வேரறுப்பாய் முத்துமாரி
கத்திபோல் வேப்பிலையை முத்துமாரி
கதறவிட்டாய் லோகமெல்லாம் முத்துமாரி
சாம்பிராணி வாசகியே முத்துமாரி
சகமேழும் காப்பவளே முத்துமாரி

கந்தனொடு கணபதியும் முத்துமாரி
கங்கையணி சிவனுமையும் முத்துமாரி
பேச்சிகாளி வைரவரும் முத்துமாரி
பேர்பெரிய நாரணரும் முத்துமாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவக்கிரக நாயருடன் முத்துமாரி
நாககன்னி சூழ்ந்திருக்க முத்துமாரி
வெல்லாவெளி கோவில்கொண்டாய் முத்துமாரி
வேண்டிநின்றோம் உன்பதமே முத்துமாரி

கும்பிட்டோம் தெண்டனிட்டோம் முத்துமாரி
குலம்காக்கச் சரணடைந்தோம் முத்துமாரி
நம்பியுனைக் கைதொழுதோம் முத்துமாரி
நாரணியே காத்தருள்வாய் முத்துமாரி
அழுதழுது ஓயவில்லை முத்துமாரி
ஆரெமக்கு காவலம்மா முத்துமாரி
சரணம் சரணமம்மா முத்துமாரி
சங்கரியே சரணமம்மா முத்துமாரி!

## வரமருள்வாய்!

-இசைமணி கு.வினாயகமூர்த்தி-

**பல்லவி:**

மதியோடு துதிபாட வரமே தந்தாய்- மகப்
பதிபோற்றும் திருவேயுன் பதமே தந்தாய்
எதிரேதும் கிடையாத சுகஞானம்தா- உந்தன்
எழில்கூறும் அடியார்க்கு சிவபோகம்தா!

**அனுபல்லவி:**

புவிமீதில் உனையன்றிக் கதியாரம்மா - தஞ்சம்
புகவேறு இடமுண்டோ பதில்கூறம்மா
கதிராடும் கணகங்கக் கணதாரியே - ஞானச்
சதிராடும் நவகோணத் தமர்வீரியே!

**சரணம்:**

மதுசூதன் தங்கைநீ மகமாரியே- தமிழ்
இசைபாடி உனைவாழ்த்திப் பணிந் தேத்தினேன்
திருவாக உருவான கருமாரியே- உந்தன்
திருவடி தொழுகின்றோம் கதிநீ அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லாவெளி மாரியம்மன்
## மான்மியப் பாடல்கள்:

**-கலாபூக்ஷணம் ஆ.அரசரெத்தினம்-**
(வெளியீடு: வெல்லாவெளி சக்தி கலா மன்றம்)

**பகுதி - 01**

வெல்லா வெளிப்பதி வீற்றிருந்து – எங்கள்
விக்கினம் தீர்க்கும் விநாயகரே
பொல்லாப்பு ஏதும் நேராமல்- முத்து
மாரியைப் பாட அருள் தாரீர்

வெல்லா வெளிநகர் வீற்றிருக்கும் - அருள்
வித்தகி முத்து மாரியம்மன்
இல்லா தெமக்கு ஆர்துணையே – தாயே
ஏழையைக் காத்திடக் கண்மலர்வாய்

தானாகத் தோன்றிய ஈஸ்வரரும் - பெரும்
மீனாகத் தோன்றிய மாயவரும்
தேனாகப் பாடல் இனித்திடவே – உங்கள்
தேவி துணையாக வாருமையா

கோலோடு கோவண மாகநின்ற – எங்கள்
குறிஞ்சிக் குமரா வாருமையா
வேல் வடிவாகவே வீற்றிருக்கும் - எங்கள்
வேலவனே அருள் தாருமையா

கல்லடிப் பிள்ளையார் காத்தவரும் - வீர
பத்திரர் காளி நாச்சிமாரும்
அல்லல் அறுத்தெமை ஆழுகின்ற – எங்கள்
அரசடிப் பிள்ளையார் காக்கவேணும்

வதனமார் வைரவர் தெய்வங்களும் - சீறிப்
படமெடுத் தாடும் நாகங்களும்
மதம் இனம் மொழி பேதமில்லா – முத்து
மாரியைப் பாட துணைவாரீர்

தேன்தமிழ் சொல்லில் பாட்டெழுதி – முத்து
மாரியை நாங்கள் பாடுதற்கு
நான்முகன் நாவில் வீற்றிருக்கும் - கலை
வாணியே வந்தருள் தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகள் எல்லாம் ஒன்றாகி – முத்து
மாரியாய் வெல்லா வெளியமர்ந்தாய்
சித்திகள் தந்திடும் முத்துமாரி – புகழ்
தித்திக்கப் பாடுறோம் கேளுங்களேன்

**பகுதி - 02**

குறிஞ்சி முல்லை மருதநிலம் -எழில்
கொஞ்சி விளையாடும் வெல்லாவெளி
அறிஞர் ஆய்வுக்கு உட்படணும் - அம்மன்
ஆதி வரலாறு தென்படணும்

ஆறு குளம்வயல் ஆலயங்கள் - பெரும்
ஆயிரம் காலில் மண்டபமும்
கூறும் பெருமைகள் பாடுதற்கு- முத்து
மாரி துணையாக வாருமம்மா

நெல்லு வயலில் கதிர்முதிர்ந்து – நல்ல
நித்திலம் போல அசைந்தாடும்
கல்லு மலையில் சாசனங்கள்- தமிழ்
தொன்மையைக் கூறி இசைபாடும்

கல்விசெல்வம் வீரம் மூன்றினையும் - அம்மன்
கட்டியணைத்து வளர்க்கும் பதி
ஒல்லும் வகையால் உதவிடுவர் -இந்த
ஊரின் பெயரிலும் ஆய்வுவேண்டும்

சோதிடர் வைத்தியர் அண்ணாவிமார் - பெரும்
கலைஞர் மந்திர வாதிகளும்
காதில் கடுக்கன் போட்டவராய்- பெரும்
போடிமார் ஒன்றாகக் கூடுமிடம்

போடியார் முல்லைக் காரர்களும் - ஒன்றாய்
கூடியே தோரணம் கட்டுகிறார்
ஆடியே பாடியே கொண்டுவந்து – அதை
ஆலய வாசலில் கட்டுகிறார்

முட்டித் தயிரை உறியில்வைத்து – முத்து
மாரிக்கு காவியே வந்திடுவார்
பட்டறை நெல்லில் மரக்காலை – நன்றாய்
பாய்ச்சி அளந்து கொடுத்திடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்பழம் சர்க்கரை தேன்கரும்பு – நல்ல
பக்குவ மான இளநீரும்
சேல்விழி மாதர் சுமந்திடுவார் - எங்கள்
வேல்விழி அம்மன் சடங்கினுக்கு

குயில்கள் கூவி இசைபாட – குட்டி
மந்திகள் கோவிலில் கூத்தாடும்
மயில்கள் நாட்டியம் ஆடுதுபார் - மட்டு
வாவியில் மீனினம் பாடுதுகேள்

பன்குளம் எங்கும் நீர்நிறைந்து- நல்ல
பளிங்கு போலத் தெளிந்திருக்கும்
பொன்மலர் போல ஒல்லிமலர் - பல
ஆயிர மாயிரம் பூத்திருக்கும்

காதலியின் முகம் காண்பதற்கு – எங்கள்
காய்கதிர்ச் செல்வன் காத்திருக்க
நாதனை ஆற்றில் தாமரைகள் - முத்து
மாரியின் பூசைக்காய் பூத்திருக்கும்

கமுகம் பாளை பத்திரமும் - அம்மன்
காவலைக் காட்டும் அடையாளம்
கமுகம் பாக்கும் பலகாரமும் -அம்மன்
பந்தலில் தொங்கும் அலங்காரம்

**பகுதி - 03**

பிள்ளையார் மூக்ஷிகம் ஏறிவர – நல்ல
வெள்ளை எருதில் சிவனுமையும்
கொள்ளை அழகாய் சிம்மத்திலே – முத்து
மாரியும் வீதி உலாவாறாள்

கம்பத்தின் மீது தவமிருந்து – அம்மன்
முத்துவகை பதினெட்டும் பெற்றார்
அம்பலத் தாடும் கூத்தனுடன் - எங்கள்
அம்மையும் நாட்டியம் ஆடிடுவாள்

காத்தானை ஈன்ற மகமாரி – எம்மைக்
காத்தருள் செய்யும் முத்துமாரி
ஆத்தாளே ஆயிரம் கண்ணியம்மா – எமக்கு
ஆறுதல் தந்திட வாருமம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தினைச் சோதிக்க முத்துமாரி – எங்கள்
முத்தனின் மேனியில் முத்தெறிந்தார்
பித்தன் உயிர்காக்க உத்தமியும் - மடிப்
பிச்சையை ஏந்தியே வந்தாளாம்

பூவையர் போற்றிப் பாடிவர – எங்கள்
பாவையர் பாற்குடம் ஏந்திவாறார்
சேவைகள் செய்யும் அடியவர்க்கு – அம்மன்
தேவைகள் யாவையும் பூர்த்திசெய்வார்

ஆனியில் பூரணை நாளினிலே – அம்மன்
நாதனை ஆற்றில் தீர்த்தமாடி
தேனியின் கூட்டில் ராணியைப்போல் - அம்மன்
திரும்பி வாறதைப் பாருங்களேன்

மங்கல கும்பம் விளக்குவைத்து – எங்கள்
மாதர்கள் அம்மனைப் போற்றிடுவார்
குங்குமம் காத்திடும் அம்மனுக்கு – மாதர்
குரவை போட்டு வாழ்த்திடுவார்

கும்மி கரகம் கோலாட்டம் - நாட்டுக்
கூத்துக்கள் ஆடிக் கொண்டாட்டம்
வம்மி மரத்து நிழலினிலே – நாட்டுப்
பாடல்கள் பாடி மன்றாட்டம்

மானை நிகர்த்த விழியுடைய – முத்து
மாரி புகழினை நாம்பாட
ஆனை முகம்கொண்ட ஐங்கரனே – எம்மை
ஆற்றுப் படுத்தினாய் போற்றுகின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் கும்மி

-ப.கறுவல்தம்பி-

(அண்ணாவியார்)

தந்தனத் தானா தனதானா தன
தந்தனத் தானா தனதானா
தந்தனத் தானா தனதானா தன
தந்தனத் தானா தனதானா

ஆனைமுகவா அடிபணிந்தேன் – எங்கள்
அம்பிகை மாரி புகழ்பாட
எங்கும் நிறைந்த பரம்பொருளே –எனக்கு
இன்னல்கள் வாராமல் காருமையா! -தந்தனத்

தாயே கலைவாணி தாழ்பணிந்தேன் – கும்மி
தங்கு தடையின்றி நான்பாட
நாவிலே நின்று நடம்புரிவாய் - உன்னை
நாடினேன் வரமது தாருமம்மா! -தந்தனத்

சிற்றெறும்பு கொஞ்சம் தானெடுத்து – அம்மன்
செப்பினுள் போட்டு அடைத்துவைக்க
மற்றநாள் ஈசன் படியளந்த பின்னர்
செப்பைத் திறந்தாளாம் ஈஸ்வரியும் -தந்தனத்

அப்போ தெறும்புகள் வாய்தனிலே மணி
தானிருக்கக் கண்ட ஈஸ்வரியும்
இப்பாவம் என்னையே சர்ருமென்று – தாயார்
ஈசனை வேண்டித் தவமிருந்தாள் - தந்தனத்

பாவாடை கட்டிப் பட்டாடை கட்டி அம்மா
பௌவியமாய் கன்னக் கொண்டைகட்டி
பூவாடைக்காரி வடிவழகி - எங்கள்
அம்பிகை வாறதைப் பாருங்கடி - தந்தனத்

சிங்கத்தி லேறிய பூரணியாள் தாயார்
செந்தமி ழர்க்கருள் வாகரியாள்
எங்கும் நிறைந்த பரம்பொருளாள் - தன்னை
ஏத்தியே கும்மிகொண் டாடுங்கடி - தந்தனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து விளக்கம்மா நீயேனக்கு தாயே
கோமளப் பூவம்மா நான் உனக்கு
குத்து விளக்குக்கும் கோமளப் பூவுக்கும்
கோபமுண்டோ சொல்லு மாரியம்மா! - தந்தனத்

தண்ணீர் குளமம்மா நானுனக்குத் தாயே
தாமரைப் பூவம்மா நீயெனக்கு
தண்ணீர் குளத்துக்கும் தாமரைப் பூவுக்கும் - கோப
தாபமுண்டோ சொல்லு மாரியம்மா! - தந்தனத்

காவடி யாட்டம் கரகாட்டம் உடன்
பக்தர்கள் பாற்குடப் பவனிவர
ஆரத்திப் பெண்களும் கூடவர மாரி
அன்னை வாறதைப் பாருங்கடி - தந்தனத்

கும்பத்தைக் கும்பத்தைக் கையெறிந்து உடல்
குலுங்கக் குலுங்கத் தான்நடந்து
மக்களைக் காக்க மனைகாக்கத் தாயார்
வலம் வருவதைப் பாருங்கடி - தந்தனத்

மல்லிகை முல்லை மணம்கமழ நல்ல
வாசனை கொண்ட மலர்சொரிய
எங்கும் நிறைந்த தயாபரியே உன்னை
ஏத்தியே கும்மிகொண் டாடுகின்றோம்! - தந்தனத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லடிப் பிள்ளையார் மழைக் காவியம்
## (1952ல் பாடப்பட்டது)

-கா.போ.அரசரெத்தினம்-
(37ஆம் கிராமம்)

சக்தியுமை மகனே சங்கரன் புதல்வோனே
பக்திக்கு வித்தை பகர்வோனே – தித்திக்க
அடியார்க் கருள்நல்கும் ஆனை முகவோனே
அடியேன் தமிழுக் கருள்!

சீர்பெருகு நாதனையில் வந்துஅவ தரித்த
பார்புகழும் யானை முகத்தோனின் அருளால்
காரோங்க மழைவேண்டிக் காவியம் பாட
காப்பதுவுன் செயலல்லோ கரிமுகத் தோனே
பால்பொழியும் நாச்சிமார் புவியதனில் வந்த
பேர்பெரிய கல்லடி ஐங்கரன்தன் புகழை
வாழவே புல்லறிவோன் நான் பாட
வரும்பிழைகள் யாவையும் பொறுத்தருளு மையா!

உள்ளமது உருகிடவே கண்ணீரும் மல்கி
உறுகின்ற வெயிலாலே மெய்யுமே வாடி
உன்கருணை இல்லாதோர் உய்வதுவு முண்டோ
உலகோர் படுந்துயரம் பார்க்கவு மிலையோ
வயல்களெலாம் பயிர்வாடும் நிலமையது கண்டும்
வாழா திருப்பதுவும் அழகாகு மோதான்
வானுயரப் புகழ்விளங்கும் நாதனைப் பதியின்
மகிபனே கருணைமழை பொழிந்தருளு மையா!

முப்புர மியற்றியே இப்புவியை ஆண்ட
மூர்க்கராம் அசுரரை வேருடன் அழிக்க
முன்னாளில் அரனேறு ரதமதை அழித்தாய்
முனிவருரை கேட்டுமே பாரதம் புனைந்தாய்
உன்ஏக தம்பியின் துயரத்தைப் போக்க
ஒருமன தாகநீ யானையுரு வானாய்
இந்நாளில் நாமிங்கு படுந்துயர் அகற்றி
இனிதாக வாழமழை பொழிந்தருளு மையா!

உன்னிரு பாதமதை நம்பினோர் தமக்கு
உடலுறு வல்பிணிகள் அகன்றுமே ஓடும்
சிந்தைதனி லென்னாளும் நீங்கா திருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினைக ளோடவே உளமது இரங்கி
கவலையுறு மானிடர் மனமது களிக்க
கருணையுரு வாகவே கஜமுகனு மாகி
காட்சிதந் தடியவரைக் காப்புதுன் கடனே
களனிகள் நிறைந்திடக் கருணைமழை பொழிவாய்!

ஆதிமுதலா யுலகில் அவதரித் தவனே
அண்டமதில் முதல்தெய்வ மானவனும் நீயே
காசினியோர் போற்றும் கஜமுகனும் நீயே
கவலைதனைப் போக்குமரு ளாளனும் நீயே
பாரெலாம் நிறைந்திட்ட வேழமுகன் நீயே
பருதியை அகற்றிய பரமனும் நீயே
காரேறு நாச்சிமார் கல்லடி அமர்ந்த
கற்பக விநாயகா கருணைமழை பொழிவாய்!

மூக்ஷிக வாகனத்தே ஏறி வருவோனே
மூவர்தொழு மூர்த்தியெனப் போற்ற வருவோனே
கார்சூழும் நாதனைப் பதிதேடி வந்து
கற்குன்றி னடிவாரம் கோவில் கொண்டாயே
பால்தயிர் வெண்ணெய் கொண்டபிக்ஷேகம் செய்து
பால்பொங்கல் மோதகம் படைத்துத் துதித்தோம்
வான்நிறைய வருணனும் கார்மேகமாக
வள்ளலே எங்குமே மழையது பொழிவாய்!

கற்றும் அறிவில்லாத கபடனானாலும்
காசினியில் பேர்பெரிய பாவியானாலும்
குற்றம் குறைகளவு செய்திருந்தாலும்
கூசாமல் மூத்தோரை வைதிருந்தாலும்
மற்றும்பல சூது வாதுவானாலும்
மகவிற் கிரங்கியருள் தந்தையைப்போலே
கற்பகக் கடவுளே கரியமால் மருகா
களனிகள் பொங்கிடக் கருணைமழை பொழிவாய்!

திங்கள் கங்கை சூடும்சிவ னாரதுமைந்தா
தேவரெலாம் போற்றிசெயும் திருமால் மருகா
துங்கவெண் கரிமுகவ னான வடிவே
சோதியெழிலான வேத ஞானச் சுடரே
சங்கு தாரைதப்பு தாளம் முழங்க
தாரைப் பொய்கையது முன்னால் விளங்க
பொங்குமெழில் கல்லடி உறைகின்ற தேவே
பொற்பதம் பணிந்தோம் எமைக் காத்தருளுவாயே!

**(பிரதி : திரு.மு.பேரின்பராசா)**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில்
## பாடப்படும் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாரியம்மன் தாலாட்டு

'பூதலத்தில் யாவர்க்கும் பேராதரவா யென்னாளும்
மாதரசி யென்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதரனார் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதலுட னோதக் கணபதியுங் காப்பாமே'

'முந்தி முந்தி விநாயகரே முக்கண்ணனார் தன்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
வேலவர்க்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற் பிள்ளையாரே விக்கினரே முன்னடவாய்
பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனரே
காரண மால்மருகா கற்பகமே மெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக்கணபதியே
ஒற்றைக் கொம்போனே உமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனே

வித்தைக்கு விநாயகனே வெண்ணையுண்டோன் மருகா
மத்தக்கரி முகவா மாயோன் மருகோனே
ஐந்துகரத்தோனே யானை முகத்தோனே
தந்தமத வாரணனே தற்பரனே முன்னடவாய்
நெஞ்சிற் குடியிருந்து நீயெனக்கு முன்னடவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சஞ்சு மெல்லடியாள் பார்வதியாள் புத்திரனே
வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
தாழ்விலாச் சங்கரனார் சற்புத்திரா வாருமையா
முன்னடக்கம் பிள்ளையார்க்கு கண்ணடக்கம் பொன்னாலே
கண்ணடக்கம் பொன்னாலே காற்சிலம்பு முத்தாலே
முத்தாலே தண்டை கொஞ்ச முன்னடவாய் பிள்ளையாரே
செல்வக் கணபதியுன் சீர்ப்பாதம் நான் மறவேன்.'
'தாயே சரஸ்வதியே சங்கரியே முன்னடவாய்
என்தாயே கலைவாணி யோகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே வாக்கில் குடியிருந்து
என்நாவிற் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலாசனத்தாளே காரடி பெற்றவளே
என்குரலிற் குடியிருந்து கொஞ்சடி பெற்றவளே
என்நாவு தவறாமல் நல்லோசை தாருமம்மா
மாரியம்மன் தன்கதையை மனமகிழ்ந்து நான் பாட
சரியாக என்நாவில் தங்கிக் குடியிரும்மா
கன்னனூர் மாரிமுத்தே கைதொழுது நான்பாட
பின்னமில்லாமல் பிறகிருந்து காருமம்மா.'

**மாரியம்மன் துதி:**

'மாயி மகமாயி மணிமந்திர சேகரியே
ஆயிவுமை யானவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா
மாயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன் சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
தாயே துரந்தரியே ஆஸ்தான மாரிமுத்தே
திக்கெல்லாம் போற்றும் எக்கால தேவியரே
எக்கால தேவியரே திக்கெல்லாம் நின்ற சக்தி
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே நாரணனார் தங்கையம்மா

நாரணனார் தங்கையம்மா நல்லமுத்து மாரியரே
உன் கரகம் பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே
உன் வேம்பு பிறந்ததம்மா விஜயநகர் பட்டணமாம்
உன் சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்
உன் அலகு பிறந்ததம்மா அயோத்திநகர் பட்டணமாம்
உன் பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்
உன் உடுக்கை பிறந்ததம்மா உத்திராட்ச பூமியிலே
உன் பம்பை பிறந்ததம்மா பளிங்குமா மண்டபத்தில்
உன் கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரி இந்திரபுரம்
உன் அருளர் தழைக்கவம்மா வையங்கள் ஈடேற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் குமாரவர்க்கந் தான்றழைக்க கொம்பனையே மாரிமுத்தே
உனக்கு மூன்று கரகமம்மா முத்தான நற்கரகம்
உனக்கு ஐந்து கரகமம்மா அசைந்தாடும் பொற்கரகம்
உனக்கு ஏழு கரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்கு பத்து கரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும் பொற்கரகம் வீதிவிளை யாடிவர
ஆயிரங் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா
பதினாயிரங் கண்ணுடையாள் பராசக்தி வாருமம்மா
துலுக்காணத் தெல்லையெல்லாம் குலுக்காடப் பெண்பிறந்தாய்
துலுக்காணத் தெல்லைவிட்டு துரந்தரியே வாருமம்மா

தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மலையாள தேசமெல்லாம் விளையாடப் பெண்பிறந்தாய்
மலையாள தேசம்விட்டு வாருமம்மா யிந்தமுகம்
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கன்னபுரம்
இருந்தாய் விலாடபுரம் இனியிருந்தாய் கன்னபுரம்
சமயபுரத்தாளே சாம்பிராணி வாசகியே
சமயபுரத் தெல்லைவிட்டுத் தாயாரே வாருமம்மா
கன்னபுரத்தாளே காரண சவுந்தரியே
கன்னபுரத் தெல்லைவிட்டு காரணியே வந்தமரும்
கடும்பாடி எல்லையெலாங் காவல்கொண்ட மாரிமுத்தே

ஊத்துக்காட் டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
படவேட்டை விட்டுமெள்ள பத்தினியே வாருமம்மா
பெரியபாளை யத்தமர்ந்த பேச்சியெனும் மாரியரே
பெரியபாளை யத்தைவிட்டு பேரரசி வாருமம்மா
ஆரணிபெரிய பாளையமாம் அதிலிருக்கும் ஆற்றங்கரை
ஆற்றங்கரை மேடைவிட்டு ஆச்சியரே வாருமம்மா
வீராம்பட் டணமமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
கோலியனூ ரெல்லையிலே குடிகொண்ட மாரியரே
அந்திரத்திற் தேரோட அருகே செடிலசைய
உச்சியிற் தேரோட உயரச் செடிலசைய

மச்சியிற் தேரோட மகரச் செடிலசைய
பக்கங் கயிரோட பகரச் செடிலசைய
ஆண்டகுரு தேசிகரை அறியாத மானிடரை
தூண்டிலாட் டாட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
சத்தியாய் நீயமர்ந்தாய் தனிக்குட்டி காவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைக்கிடா காவுகொண்டாய்
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் பிள்ளைகள்தான் எங்குமுண்டு வையகத்தில்
கோர்த்தமுத்து வடமசைய கொங்கைரெண்டும் பாலொழுக
ஏற்றவர்க்கு வரந்தருவாய் எக்காள தேவியரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காள தேவியரே திக்கெல்லாம் ஆண்டவளே
திக்கெல்லாம் ஆண்டவளே திகம்பரியே வாருமம்மா
முக்கோணச் சக்கரத்தில் முதன்மையாய் நின்றசக்தி
அக்கோணந் தன்னில்வந்து ஆச்சியரே வந்தமரும்
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மாயி மருளியரே மணிமந்திர சேகரியே
வல்லாண்மைக் காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லவரைக் கொன்றாய் வலியவரை மார்பிளந்தாய்
நீலி கபாலியம்மா நிறைந்த திருச்சூலியரே
நாலுமூலை ஓமகுண்டம் நடுவே கனகசபை

கனகசபை வீற்றிருக்கும் காரண சவுந்தரியே
நாரணனார் தங்கையரே நல்லமுத்து மாரியரே
நடலைச் சுடலையம்மா நடுச்சுடலை தில்லைவனம்
தில்லைவனத் தெல்லைவிட்டு திரும்புமம்மா யிந்தமுகம்
வார்ப்புச் சிலையாளே வச்சிரமணித் தேராளே
தூண்டில் துடைபெருமன் தூண்டிமுள்ளு கைபெருமன்
மண்டையிலே தைத்தமுள்ளு மார்புருகிப் போகுதம்மா
பக்கத்திற் தைத்தமுள்ளு பதைத்துத் துடிக்குதம்மா
தொண்டையிலே தைத்தமுள்ளு தோளுருவிப் போகுதம்மா
கத்திபோல் வேப்பிலையைக் கதறவிட்டாய் லோகமெல்லாம்

ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே
பத்திரிக் குள்ளிருக்கும் பாவனையை யாரறிவார்
வேப்பிலைக் குள்ளிருக்கும் வித்தைகளை யாரறிவார்
செடிலோ துடைபெருமன் தூண்டிமுள்ளு கைபெருமன்
தூண்டிமுள்ளைத் தூக்கி துடுக்கடக்கும் மாரிமுத்தே
ஒற்றைச் செடிலாட ஊரனைத்தும் பொங்கலிட
ரெட்டைச் செடிலாட படைமன்னர் கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பாற்பசுவைக் காவுகொண்டாய்
ஏமனிட வசலிலே எருமைக்கிடா காவுகொண்டாய்
எருமைக்கிடா காவுகொண்டாய் எக்கால தேவியரே

எக்கால தேவியரே திக்கெல்லாம் ஆண்டசக்தி
காசிவள நாட்டைவிட்டு கட்டழகி வாருமம்மா
ஊசி வளநாடு உத்தியா குமரிதேசம்
அறியாதான் பாடுகிறேன் அம்மைத் திருக்கதையை
தெரியாதான் பாடுகிறேன் தேவி திருக்கதையை
எட்டென்றா லிரண்டறியேன் ஏழையம்மா வுன்னடிமை
பத்தென்றா லொன்றறியேன் பாலனம்மா உன்னடிமை
பாடவகை யறியேன் பாட்டின் பயனறியேன்
வருத்த வகையறியேன் வர்ணிக்கப் பேரறியேன்
பேரு மறியேனம்மா பெற்றவளே யென்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வருந்துறதுன் கோவிலுக்குக் கேட்கிலையோ
மைந்தன் வருந்துறதுன் மாளிகைக்குக் கேட்கிலையோ
பாலன் வருந்துறதும் பார்வதியே கேட்கிலையோ
கோயிற் கடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி
சந்நிதி மைந்தனம்மா சங்கரியே பெற்றவளே
வருந்தி யழைக்கின்றேன்நான் வண்ணமுகங் காணாமல்
தேடி யழைக்கின்றேன்நான் தேவிமுகங் காணாமல்
ஏழைக் குழந்தையம்மா எடுத்தோர்க்குப் பாலகண்டி
பாலன் குழந்தையம்மா பார்த்தோர்க்குப் பாலகண்டி
மைந்தன் குழந்தையம்மா மகராசி காருமம்மா

கல்லோடீ உன்மனது கரையிலையோ எள்ளளவும்
இரும்போடீ உன்மனது இரங்கலையோ எள்ளளவும்
கல்லுங் கரைந்திடுமுன் மனங்கரையா தென்னவிதம்
இரும்பு முருகிடுமுன் இருதயமுருகா தென்னவிதம்
முன்செய்த தீவினையோ பெற்றவளே சொல்லுமம்மா
ஏதுமறி யேனம்மா ஈஸ்வரியே சொல்லுமம்மா
கடம்பாடி யெல்லையிலே கட்டழகி வீற்றிருப்பாய்
கடும்பாடி யெல்லைவிட்டு கட்டழகி வாருமம்மா
கரகத் தழகியரே கட்டழகி மாரிமுத்தே
கரகத்து மீதிருந்து கட்டழகி கொஞ்சுமம்மா

கும்பத் தழகியம்மா கோபாலன் தங்கையரே
கும்பத்து மீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மா பெற்றவளே குறைகளொன்றும் வாராமல்
உனக்குப் பட்டு பளபளென்ன பாடகக்கால் சேராட
உனக்குமுத்து மொளமொளென்ன மோதிரக்கால் சேராட
உலகமெல்லாம் முத்தெடுக்க உள்ளபடிதான் வந்தாய்
தேசமெல்லாம் முத்தெடுப்பாய் தேவிகன்ன னூராளே
முத்தெடுக்கத் தான்புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு ஈச்சங் குறக்கூடை யிருக்கட்டும் பொன்னாலே
உனக்கு தாழங் குறக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே

குறக்கூடை முத்தெடுத்து கொம்பனையே நீ புகுந்தாய்
கோயிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில் அழைத்தாலும் கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களிட சந்தடியோ மருமக்கள் சந்தடியோ
பிள்ளைகளின் சந்தடியோ பேரன்மார் சந்தடியோ
அனந்தல் பெருமையோ ஆசாரச் சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாரு மிங்கே வா
கொல்லிமலை யாண்டவனைக் குமர குருபரனை
காத்தவ ராயனைத்தான் கட்டழகி தானழையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டியத்துச் சின்னானை துரைமகனைத் தானழையும்
மதுரை வீரப்பனையென் மாதாவே தானழையும்
பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும்
கருப்பண்ண சுவாமியையுங் கட்டழகி தானழையும்
முத்தாலு ராவுத்தன் முனையுள்ள சேவகரை
மூங்கில் கருப்பனைத்தான் சடுதியிற் றானழையும்
பெரியபாளையத் தமர்ந்த பேச்சியரே மாதாவே
பாளையக் காரியம்மா பழிகாரி மாரிமுத்தே
கன்னனூர் மாரிமுத்தே கலகலென நடனமிடும்
உன்னைப் பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா

ஆதிபர மேஸ்வரியே அருகேதுணை நீயிரம்மா
உன்னைப்போல் தெய்வத்தை உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர் எங்குமுண்டு வையகத்தில்
உன்-மகிமை யறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன் -சேதி யறிவாரோ தேசத்து மானிடர்கள்
உன் -மகிமையை யானறிந்து மண்டலத்தில் பாடவந்தேன்
உன் -மகிமையறி யாதுலகில் மாண்டமனு கோடியுண்டு
உன் -சேதியறி யாதுலகில் செத்தமனு கோடியுண்டு
தப்புப்பிழை வந்தாலும் சங்கரியே நீபொறுத்து
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்ததெல்லாம்

மனது பொறுத்து மனமகிழ்ச்சி யாகவேணும்
தேவி மனம்பொறுத்து தீர்க்கமுடன் ரட்சியம்மா
கொண்டு மனம்பொறுத்து கொம்பனையே காருமம்மா
கார்க்கக் கடனுனக்குக் காரண சவுந்தரியே
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
வேணுமென்று காரடிநீ வேப்பஞ் சிலையாளே
பக்கத் துணையிருந்து பாலகனைக் காருமம்மா
பொரிபோ லெழும்பிநீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தா ளிறக்குமம்மா
சிரசினிற் முத்தையம்மா முன்னுதாய் நீயிறக்கும்

கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா வடிவழகி நீயிறக்கும்
துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரினி லிறக்கிவிடும்
பூமியில் இறக்கிவிடும் பெற்றவளே காருமம்மா
பெற்றவளே தாயே பேரரசி மாரிமுத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற துணையிருந்து உகந்தரியே காருமம்மா
உன்னைவிட பூமிதனில் உற்றதுணை வேறுமுண்டோ
பக்கத் துணையிருந்து பாதுகாத்து ரட்சியம்மா
செக்கச் சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனும் மாதரசி மகராசி காருமம்மா
திங்கள் வதனியரே தேவிகன்ன னூராளே
எங்கள்குல தேவியரே ஈஸ்வரியே கண்பாரும்
மக்கள் விநோதினி மாதாவே கண்பாரும்
ஏழைக் கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுதான் எக்காலம் வார்ப்புச் சிலையாளே

ஆயி மகமாயி ஆரணங்கு சொற்காரணியே
மாயி மகமாயி மணிமந்திர சேகரியே
இரங்கிறங்கும் தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
மாரித்தாய் வல்லவியே மகராசி காருமம்மா
வீரணன் சோலையிலே ஆரணம தானசக்தி
நீதிமன்னர் வாசலிலே நேராய்க் கொலுவிருந்தாய்
கொலுவிருந்த சக்தியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாத வாசகியே
பொய்யாத வாசகியே புண்ணியவதி ஈஸ்வரியே

செடிலோ துடைபெருமன் தூண்டிமுள்ளு கைபெருமன்
அடங்காத மானிடரை ஆட்டிவைக்கும் மாரிமுத்தே
துஷ்டர்கள் தெண்டனிட்டு துடுக்கடக்கும் மாரிமுத்தே
கண்டவர்கள் தெண்டனிட்டு கலக்கமிடும் மாரிமுத்தே
அண்டாத பேர்களைத்தான் ஆணவத்தைத் தானடக்கி
இராஜாக்க ளெல்லோரும் நலமாகத் தான்பணிய
மகுட முடிமன்னர் மனோன்மணியைத் தான்பணிய
கிரீட முடிதரித்த கீர்த்தியுள்ள ராஜாக்கள்
மகுடமுடி மந்திரிகள் மன்னித்துத்தெண்ட னிட்டுநிற்க
பட்டத் துரைகள் படைமுகத்து ராஜாக்கள்

வெட்டிக் கெலித்துவரும் வேதாந்த வேதியர்கள்
துஷ்டர்களைத் தானடக்கும் சூலி கபாலியம்மா
அடங்காத மானிடரை அடிமைபலி கொண்டசக்தி
மிஞ்சிவரும் ராட்சதரை வெட்டிவிரு துண்டகண்ணே
தஞ்சமென்ற மானிடரைத் தற்காக்கும் பராபரியே
அவரவர்கள் தான்பணிய வாக்கினையைப் பெற்றவளே
சிவனுடன் வாதாடும் சித்தாந்த மாரிமுத்தே
அரனுடன் வாதாடும் ஆஸ்தான மாரிமுத்தே
பிரமனுடன் வாதாடும் பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடன் வாதாடும் வேதாந்த மாரிமுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனுடன் வாதாடும் எக்கால தேவியரே
தேவருடன் வாதாடும் தேவிகன்ன னூராளே
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
காரண சவுந்தரியே கர்த்தனிட தேவியரே
நெருப்பம்மா உன்சொரூபம் நிஷ்டூரக் காரியரே
அனலம்மா உன்சொரூபம் ஆஸ்தான மாரிமுத்தே
தணலம்மா உன்சொரூபம் தரிக்கமுடி போதாது
அண்டா நெருப்பேயம்மா ஆதிபர மேஸ்வரியே
காத்தானைப் பெற்றவளே கட்டழகி மாரிமுத்தே
தொட்டியத்துச் சின்னானைத் தொழுதுவர பண்ணசக்தி

கருப்பனையுங் கூடவேதான் கண்டு பணியவைத்தாய்
பெண்ணரசிக்காகப் பிள்ளையைக் கழுவில் வைத்தாய்
அடங்காத பிள்ளையென ஆண்டவனைக் கழுவில் வைத்தாய்
துஷ்டனென்று சொல்லி துடுக்கடக்கிக் கழுவில் வைத்தாய்
பாரினில் முத்தையம்மா பத்தினியே தாயாரே
வாரி யெடுக்கவொரு வஞ்சியரை யுண்டுபண்ணாய்
முத்தெடுக்குந் தாதி மோகனப் பெண்ணேயென்று
தாதியரைத் தானழைத்துத் தாயாரே முத்தெடுப்பாய்
முத்தெடுத்துத் தான்புகுந்து உத்தமியாள் மாரிமுத்தே
மாயி மகமாயி மணிமந்திர சேகரியே

ஆயி உமையவளே ஆஸ்தான மாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
சொற்கேளாப் பிள்ளையென்று தூண்டில் கழுவில் வைத்தாய்
கழுதனக்கு மோர்வார்க்க கட்டழகி யுண்டுபண்ணாய்
நல்லதங்காளை யுண்டுபண்ணாய் நற்கழுவுக்கு மோர்வார்க்க
உரியில் தயிர்வார்க்க உத்தமியே யுண்டுபண்ணாய்
உன் -மருமகளைக் காத்தார்ப்போ லிவ்வடிமையைக் காருமம்மா
எவ்வளவு நேரமம்மா ஏறெடுத்துப் பாருமம்மா
கடுகளவு நேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா

கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிப் போவேனம்மா
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக் காருமம்மா
பேரரசி மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
மகமாயி மாரிமுத்தே மைந்தர்களைக் காருமம்மா
பெற்றவளே மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
ஆணழகி மாரிமுத்தே அடிமைகளைக் காருமம்மா
பூணாரம் கொண்டவளே பிள்ளைகளைக் காருமம்மா
பாரமெடுக்கவோ அம்மா பாலனா லாகுமோதான்
பூணாரந் தானெடுக்க பிள்ளையா லாகுமோதான்
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் படுந்துயரம் பாக்கியவதி பார்க்கிலையோ
மைந்தன் படுந்துயரம் மாதாவே பார்க்கிலையோ
குழந்தை படுந்துயரம் கொம்பனையே பார்க்கிலையோ
சிற்றடிகள் படுந்துயரம் தேவியரே பார்க்கிலையோ
பூணார முத்திரையைப் பெற்றவளே தானிறக்கும்
ஆபரண முத்திரையை ஆத்தா ளிறக்குமம்மா
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக்காப் பாற்றுமம்மா
அடிமைதனைக் காப்பாற்றி யாணழகி நீயிறக்கும்
குப்பத்து மாரியரே கொலுவிலங் காரியரே
கொலுவிலங் காரியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்

கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே
மாரியென்றால் மழைபொழியும்
தேவியென்றால் தேன்சொரியும்
தேவியென்றால் தேன்சொரியும் திரிபுர சுந்தரியே
திரிபுர சுந்தரியே தேசத்து மாரியம்மா
பொன்னுமுத்து மாரியரே பூரண சவுந்தரியே
தாயாரே பெற்றவளே சத்தகன்னி சுந்தரியே
பேரு மறியேனம்மா பெற்றவளே தாயாரே
குருடன்கைக் கோலென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப் பிடுங்கிக்கொண்டால் குருடன் பிழைப்பானோ

இப்படிக்கு நீயிருந்தால் இனி பிழையோம் தாயாரே
கலிபிறக்கு முன்பிறந்த கனத்ததோர் மாரிமுத்தே
யுகம்பிறக்கு முன்பிறந்த உத்தண்ட மாரிமுத்தே
கலியுகத்தில் தாயாரே கண்கண்ட தெய்வம் நீ
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர்தான் எங்குமுண்டு வையகத்தில்
அனலை மதியாய் நீ யாவரையும் சட்டை பண்ணாய்
புனலை மதியாய்நீ பூலோகஞ் சட்டைபண்ணாய்
வருந்தி யழைக்கிறேனுன் திருமுகத்தைக் காணாமல்
பாலகனைக் காத்துப் பாதத்தா லுதைத்துவிடு

மைந்தனைக் காத்து மகராசி உதைத்துவிடு
குழந்தையைக் காத்து கொம்பனையே உதைத்துவிடு
ஆதிபரஞ்சோதி அங்குகண்ணே வாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண் மாரியரே
வெள்ளியிலுந் திங்களிலும் வேண்டியபேர் பூஜைசெய்ய
பூஜை முகத்திற்குப் போனேனென்று சொல்லாதே
இந்த மனையிடத்தில் ஈஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனை வாழுமம்மா இருந்தமனை ஈடேறும்
இருந்தமனை ஈடேற ஈஸ்வரியே வந்தருள்வாய்
கண்பாரும் கண்பாரும் கனகவல்லித் தாயாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பான பிள்ளைகளை நலிந்திடச் செய்யாதே
உன்னை நம்பினோரை ஓய்ந்துவிடச் செய்யாதே
அந்நீதஞ் செய்யாதே ஆயி மகமாயி
வேம்பு ரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலை ரதமேறி பார்வதியே வாருமம்மா
கொலுவி லிருந்தசத்தி கோர்த்தமுத்து நீயிறக்கும்
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோகமாரிமுத்தே
கேளிக்கை யாகக் கிளிமொழியே முத்திறக்கும்
அரும்பால கன்றன்னை அவஸ்தைப் படுத்தாதே
வருத்தப் படுத்தாதே மாதாவே கண்பாரும்

அன்ன மிறங்கவம்மா ஆத்தாளே கண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து உத்தமியே காருமம்மா
இரக்கங் கொடுத்து ஈஸ்வரியே காருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலை நோகாமல்
எங்கேயோ பாராமுகமாய் இருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்தி பூஜையில் அசதியா யெண்ணாதே
ஒட்டாரம் பண்ணாதே ஓங்காரி மாரிமுத்தே
பாவாடம் நேருமம்மா பழிகள் வந்து சேருமம்மா
பாவாடம் நேர்ந்ததென்றால் பாலருக் கேறாது
கண்டார் நகைப்பார்கள் கலியுகத்தா ரேசுவார்கள்

கலியுகத்தா ரேசுவார்கள் கட்டழகி மாரிமுத்தே
பார்த்தார் நகைப்பார்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
உதடு படைத்தவர்கள் உதாசீனஞ் சொல்லுவார்கள்
பல்லைப் படைத்தவர்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
நாவைப் படைத்தவர்கள் நாணயங்கள் பேசுவார்கள்
பார்த்தோர் நகைக்கவம்மா பரிகாசம் பண்ணாதே
கச்சிப் பதியாளே காமாட்சி தாயாரே
தாயாரே பெற்றவளே தயவுவைத்துக் காருமம்மா
மாதாவே பெற்றவளே மனது வைத்துக் காருமம்மா
பார்வதியே பெற்றவளே பட்சம் வைத்துக் காருமம்மா

ஆயிரங் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா
பதினாயிரம் முத்தினிலே பார்த்தெடுத்த ஆணிமுத்து
ஆறாயிரங்கண் முத்துதனி லாத்தாள் வளர்ந்தெழுந்தாள்
நாகத்தின் கண்ணேயம்மா நல்ல விடப்பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்ன விடப்பாம்பே
அஞ்சுதலை நாகமுனைக் கொஞ்சிவிளை யாடுதம்மா
பத்துதலை நாகமம்மா பதிந்துவிளை யாடுதம்மா
செந்தலை நாகமம்மா சேர்ந்துவிளை யாடுதம்மா
கருந்தலை நாகமம்மா காக்குதம்மா உன்கோவில்
சேஷனென்ற பாம்பையெல்லாம் சேரவே பூண்டசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமென்ற பாம்பையெல்லாம் நலமாகப் பூண்டசக்தி
அரவமென்ற பாம்பையெல்லாம் அழகாகப் பூண்டசக்தி
ஆபரணமாய்ப் பூண்டாய் அழகுள்ள பாம்பையெல்லாம்
நாகங் குடைபிடிக்க நல்லபாம்பு தாலாட்ட
தாராள மாய்ப்பூண்டாய் தங்கத்திரு மேனியெல்லாம்
பாலாட்ட தாலாட்ட தாயார் மனமிரங்கி
சேஷன் குடைகவிய செந்நாகம் வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகண்ண னூராளே
மார்மேலே நாகமம்மா மடிமேல் புரண்டாட
மார்மேலுந் தோள்மேலும் வண்ண மடிமேலும்

கொஞ்சிவிளை யாடுதம்மா கோபாலன் தங்கையரே
ஏழையா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
குழந்தையா லாகுமோதான் கொம்பனையேத் தோத்தரிக்க
அடியேனா லாகுமோதான் ஆத்தாளைத் தோத்தரிக்க
எந்தனா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
இல்லையென் பார்பங்கில் ஈஸ்வரியே மாரிமுத்தே
நில்லா யரை நாழி நிஷ்டூரத் தாண்டவியே
உண்டென் பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்றசக்தி
பார்த்தோர்க்குச் செல்வனம்மா பாலன் குழந்தையம்மா
உன்னைப் பகைத்தோர்க்கு உருமார்பி லாணியம்மா

நினைத்தோர்க்கு தெய்வமம்மா எதிர்த்தார்க்கு மார்பிலாணி
தாயே நீ வாருமம்மா தற்பறையாய் நின்றசக்தி
வாக்கிட்டால் தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாது பொய்யாது பூமலர்தான் பொய்யாது
பூவிரண்டு பூத்தாலும் நாவிரண்டு பூக்காது
மறவரிட வாசலிலே மல்லிகைப்பூ பூத்தாலும்
மறவ ரறிவாரோ மல்லிகைப்பூ வாசனையை
குறவரிட வாசலிலே குடமல்லி பூத்தாலும்
குறவ ரரிவாரோ குடமல்லி வாசனையை
பன்றி முதுகினில் பன்னீரைப் பூசினாக்கால்

பன்றி யறியுமோதான் பன்னீரின் வாசனையை
எந்தனா லாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
மைந்தனா லாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பாலனா லாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சி லொருகோடி இளந்தீட்டு முக்கோடி
தீட்டு மொருகோடி தெருவெங்குந் தானுண்டு
கன்னிகள் தீட்டுக் கலந்தோடி வந்தாலும்
ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்தாலும்
தாயே மனம்பொறுத்து தயவாகக் கருமம்மா
எச்சிற் கலந்ததென்று இடையப்போய் நின்றாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுக் கலந்தாலும் ஈஸ்வரியே மனம்பொறுத்து
பக்ஷம்வைத்துக் காருமம்மா பராபரியே ஈஸ்வரியே
விருப்பம்வைத்துக் காருமம்மா விருது படைத்தசக்தி
நீலிகபாலியம்மா நிறைந்த பஞ்சாட்சரியே
சூலி கபாலியம்மா சுந்தரியே மாரிமுத்தே
நிஷ்டூரக் காரியரே விஸ்தார முள்ளசக்தி
வேப்பிலையால் தான் தடவி விசிறிமுத் தழுத்திவிடு
ஆனபரா சத்தியரே அம்மைமுத் தழுத்திவிடு
இறக்கிறங்குந் தாயே ஈஸ்வரியே நான்பிழைக்க
படவேட் டமர்ந்தவளே பாங்கான மாரிமுத்தே

ஊத்துக்காட் டமர்ந்தவளே உதிரபலி கொண்டவளே
வீராணம் பட்டணமமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கன்னபுரம்
கன்னபுரத் தெல்லையெல்லம் காவல்கொண்ட மாரியரே
எக்கால தேவியரே ஈஸ்வரியே யிறங்குமம்மா
திக்கெல்லாம் பேர்படைத்த தேசத்து மாரியரே
அண்ட புவனமெல்லாந் துண்டரீக முள்ளசக்தி
கச்சிப் பதியாளே காமாட்சித் தாயாரே
கைலாச லோகமெல்லாம் காவல்கட்டி யாண்டவளே
பாதாள லோகமெல்லாம் பரதவிக்கப் பண்ணசக்தி

காலைக் கொலுவிலம்மா காத்திருந்தா ராயிரம்பேர்
உச்சிக் கொலுவிலம்மா உகந்திருந்தா ராயிரம்பேர்
அந்திக் கொலுவிலம்மா அமர்ந்திருந்தா ராயிரம்பேர்
கட்டியக் காரரெல்லாம் கலந்தெச்சரிக்கை பண்ண
பாடும் புலவரெல்லாம் பண்பிசைந்த பாடல்சொல்ல
வடுகர் துலுக்கரோடு மராட்டியர் கன்னடியர்
கன்னடியர் காவலுடன் கர்னாட்டுப் பட்டாணியர்
இட்டசட்டை வாங்காத இடும்பரெல்லாம் காத்திருக்க
போட்டசட்டை வாங்காத பொந்திலியர் காத்திருக்க
வடுகர் துலுக்கரம்மா மறுதேசப் பட்டாணியர்

வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ் சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து
மாயமெல்லா முன்மாயம் மருளரெல்லா முன்மருளர்
மருளர் தழைக்கவம்மா மருமக்க ளீடேற
பலிச்சட்டி தானெடுக்கும் புத்திரர்கள் தான்றழைக்க
வேதங்கள் தான்றழைக்க விண்ணவர்க ளீடேற
குமாரவர்க்கந் தான்றழைக்க கொம்பனையே கண்பாரும்
மைந்தர்கள் தான்றழைக்க மாதாவே கண்பாரும்
காஞ்சிபுரியிலே தான் கர்த்தரையும் நீ நினைத்து
கர்த்தரையும் நீ நினைத்துக் காமாட்சி பூஜைபண்ணாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை முழுகியம்மா கிளிமொழியே தவமிருந்தாய்
வைகை மூழ்கியம்மா வனமயிலே தவமிருந்தாய்
தவத்தில் மிகுந்தவளே சத்தகன்னி தாயாரே
ஆற்று மணலெடுத்து அரனாரை யுண்டுபண்ணாய்
சேற்று மணலெடுத்துச் சிவனாரை யுண்டுபண்ணாய்
கம்பை நதியிலே காமாட்சி தவமிருந்தாய்
இருநூற்றுக் காதவழி திருநீற்றால் கோட்டையிட்டாய்
திருநீற்றால் கோட்டையிட்டாய் திகம்பரியே மாரிமுத்தே
அருணா சலந்தனிலே ஈசான்ய மூலையிலே
திருவண்ணா மலையிலேதான் தேவிதவமிருந்தாய்

அருணா சலந்தனிலே ஆத்தாள் தவமிருந்தாய்
ஈசான்ய மூலையிலே இருந்தாய் பெருந் தபசு
இருந்தாய் பெருந் தபசு இடப்பாகம் பேறு பெற்றாய்
இடப்பாகம் பேறுபெற்றாய் ஈஸ்வரியே மாதாவே
காக முதுகினில் கதம்பப்பொடி பூசிவைத்தால்
காக மறியுமோதான் கதம்பப்பொடி வாசனையை
கொக்கு முதுகினிற் கோமேதகங் கட்டிவைத்தால்
கொக்கு மறியுமோதான் கோமேதகத்தி னொளியை
மூலக் கனலின் முதன்மையாய் நின்ற சக்தி
பாலனுக்கு வந்த பார எரிச்சல்களில்

காலெரிவு கையெரிவு கட்டழகி வாங்குமம்மா
குத்தல் குடைச்சல் குலைமாரிடி நோவு
மண்டை குடைச்சலோடு மாரடைப்பு தலைநோவு
வாத பித்த சீதசுரம் வல்பிணியைக் காருமம்மா
இடுப்புக் குடைச்சலைத்தான் ஈஸ்வரியே வாங்குமம்மா
பித்த யெரிவுகளைப் பெற்றவளே வாங்குமம்மா
கழுத்து வலியதனைக் கட்டழகி வாங்குமம்மா
பத்திரியால் தான்தடவி பாரமுத் தழித்துவிடு
விபூதியைப் போட்டு இறக்கிவிடு முத்திரையை
வேப்பிலை பட்டவிடம் வினைகள் பறந்தோடுமம்மா

பத்திரி பட்டவிடம் பாவம் பறந்தோடுமம்மா
விபூதிபட்ட தக்ஷணமே வினைகள் பறந்தோடுமம்மா
பஞ்சா க்ஷரம்பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
பத்தென்றா லிரண்டறியேன் பாலனம்மா வுன்னடிமை
எட்டென்றா லிரண்டறியேன் ஏழையம்மா வுன்னடிமை
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடப் பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடப் பாம்பே
பாம்பே தலைக்கணைதான் வேப்பிலையோ பஞ்சுமெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
ஐந்நூறு பாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரசடை மேலிருந்து விமலியரே கொஞ்சுமம்மா
முந்நூறு சந்தி முதற் சந்தி யுன்னுதென்றாய்
நானூறு சந்தி நடுச்சந்தி யுன்னுதென்றாய்
சந்திக்குச் சந்தி தனிச்சந்தி யுன்னுதென்றாய்
வீதிக்கு வீதி வெளிச்சந்தி யுன்னுதென்றாய்
பட்டத் தழகியம்மா படைமுகத்து ராஜகன்னி
கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே
திருவிளக்கு நாயகியே தேவிகன்ன னூராளே
மணிவிளக்கின் மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற் குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா

திருவிளக்கின் மேலிருந்து தேவியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே
சிரித்தார் முகத்தையம்மா செல்லரிக்கக் கண்டிடுவாய்
பரிகாசஞ் செய்பவரைப் பல்லைப் பிடுங்கி வைப்பாய்
மூலைவீட்டுப் பெண்களைத்தான் முற்றத்தி லாட்டிடுவாய்
அரண்மனைப் பெண்களைத்தா னம்பலத்தி லாட்டிடுவாய்
பொல்லாத பெண்களைத்தான் தோற்பாதங் கட்டிடுவாய்
தோற்பாதங் கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே
நடுவீதியிற் கொள்ளிவைத்து நானறியேன் என்றிடுவாய்
கடைவீதியிற் கொள்ளிவைத்துக் கடக்கப் போய் நின்றிடுவாய்.

கடியா விஷம் போலே கடிக்க விட்டுப் பார்த்திருப்பாய்
தீண்டா விஷம் போலே தீண்ட விட்டுப் பார்த்திருப்பாய்
பாம்புகன்னி நீலியம்மா பழிகாரி மாரிமுத்தே
தாயே துரந்தரியே சர்வலோக மாதாவே
ஆறாத கோபமெல்லாம் ஆச்சியரே விட்டுவிடு
கடலில் மூழ்கியம்மா கடுகநீ வாருமம்மா
காவேரியில் தான்மூழ்கி காமாக்ஷி வாருமிங்கே
வந்தமனை வாழுமம்மா இருந்தமனை ஈடேறும்
கஞ்சா வெறியன் கனவெறியன் பாவாடை
பாவாடை ராயனைத்தான் பத்தினியே தானழையும்

தாயாரும் பிள்ளையுமாய்த் தற்காக்க வேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனது வைத்துக் காருமம்மா
ஆத்தாளும் பிள்ளையுமாய் அன்பு வைத்துக் காருமம்மா
காரடி பெற்றவளே காலுதலை நோகாமல்
காசிவள நாட்டைவிட்டு காரணியே வந்தமரும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தமரும்
பம்பை முழங்கிவர பறைமேள மார்ப்பரிக்க
சிற்றுடுக்கை கொஞ்சிவர சிறுமணிக ளோலமிட
வேடிக்கைப் பார்த்திருந்தாள் வேப்பஞ் சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய புரத்தாளே சாம்பிராணி வாசகியே
முக்கோணத் துள்ளிருக்கும் முதன்மையாய் நின்ற சத்தி
நாற்கோணத் துள்ளிருக்கும் நல்லமுத்து மாரியரே
பஞ்சா க்ஷரப்பொருளே பார்வதியே பெற்றவளே
அறுகோணத் துள்ளிருக்கும் ஆதிபர மேஸ்வரியே
அஷ்டா க்ஷரப்பொருளே ஆனந்த மாரிமுத்தே
நாயகியே மாரிமுத்தே நாரணனார் தங்கையரே
ஐம்பத்தோ ரட்சகியே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மைமுத்து மாரியரே
பேருலக ரக்ஷகியே பெருமா ளுடன்பிறப்பே

பெருமாளுடன் பிறந்து பேருலகை யாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே
திருகோணத் துள்ளிருக்கும் திரிபுர சவுந்தரியே
ஆறாதா ரப்பொருளே அபிஷேகப் பத்தினியே
மூலாதா ரப்பொருளே முன் பிறந்த தேவதையே
தாயே துரந்தரியே சர்வலோ கேஸ்வரியே
பத்திரியால் தான்தடவி பாரமுத்தைத் தானிறக்கும்
வேப்பிலையால் தான்தடவி மெல்லியரே தானிறக்கும்
மேனியெல்லாந் தானிறக்க மெல்லியரே தானிறக்கும்
இறக்கிறக்குந் தாயாரே எங்களைக்காப் பாற்றுமம்மா

முத்திலு முத்து முகத்திலிடு மாணிமுத்து
எங்கும் நிறைந்த எல்லார்க்கும் மாரிமுத்து
பெண்ணாய்ப் பிறந்து பேருலகை யாளவந்தாய்
பேருலகை யாளவந்தாய் பெண்ணரசி மாரிமுத்தே
நித்தம் பராமரிக்க நிஷ்ட்டூரி நீ பிறந்தாய்
தேசம் பராமரிக்க தெய்வகன்னி நீ பிறந்தாய்
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்தியக் கல்யாணி நீலி பரஞ்சோதி
அம்மணியே பார்வதியே ஆணிமுத்துத் தாயாரே
லோகமெல்லாம் முத்தளக்கும் லோகபர மேஸ்வரியே

வெற்றிக்கொடி பறக்க விருதுபம்பை தான்முழங்க
எக்காள மூதிவர எங்கும் கிடுகிடென்ன
பஞ்சவர்ண டால்விருது பக்கமெல்லாம் சூழ்ந்துவர
நாதசுர மேளம் நாட்டியங்க ளாடிவர
தப்பட்டை மேளம் தவில்முரசு தான்முழங்க
தாளங்கள் ஊதிவர கவிவாணர் எச்சரிக்க
சின்னங்கள் ஊதிவர சிறப்பாய்க் கொடிபிடிக்க
ஜண்டா சிலர்பிடிக்க தனிமுரசு தானடிக்க
கொடிகள் சிலர்பிடிக்க கொக்கரிப்பார் வீரமக்கள்
சாமரைகள் தான்வீசி சந்திப்பார் வீரமக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரை பூரி சின்னம் ஆரவர மாய்முழங்க
தக்க வுடுக்கைகளும் தவிலோடு பம்பைகளும்
மிக்க கவுண்டைகளும் மிருதங்கந் தான்முழங்க
நன்மகுடி யுஞ்சுதியும் நன்றாக ஊதிவர
தம்புரு வீணை தக்கபடி தான் வாசிக்க
பம்பை யடித்துப் பறமேளந் தானதிர
கெண்செட்டு வாத்தியமும் கிளர்நெட்டு வாத்தியமும்
கொடுவாத்தி யம்புதிதாய் கொண்டுவந்தர் உன்மக்கள்
இத்தனை வாத்தியங்கள் இசைக்கின்றார் பாருமம்மா

பார்த்துக் குளிருமம்மா பாங்கான உன்மனது
கண்டு குளிருமம்மா கல்லான உன்மனது
எப்படி யாகிலுந்தான் ஏழைகளுமீ டேற
கண்பாரும் பாருமம்மா காரண சவுந்தரியே
இந்திரனுக் கொப்பா யிலங்குமக மாரியரே
கும்பத் தழகியம்மா கொலுமுகத்து ராஜகன்னி
சகலகுற்றம் சகலபிழை தாயாரே நீ பொறுப்பாய்
வணங்குகிற மக்களுக்கு வாழ்வு மிக அளிப்பாய்
ஓங்கார ரூபியென்று உன்னையே தோத்தரிக்க
படவேட்டில் வீற்றிருக்கும் பரஞ்சோதி தாயாரே

ஆரறிவா ருன்மகிமை ஆணிமுத்து தாயாரே
அண்ட புவனமெல்லாம் அம்மா வுனைத் தொழுவார்
தேசங்க ளெங்கும் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்தசக்தி
எங்கும் நிறைந்தவளே எல்லார்க்குந் தாயாரே
அஞ்சேலென்ற அஸ்தமொடு அடியார் தமைக்காக்க
வேப்பிலை யுங்கையில் விபூதியெங்குந் தூளிதமும்
கருணாகடாக்ஷம்வைத்து காக்கு மகமாயிவுந்தன்
சரணார விந்தமதைத் தந்தருளு மாரிமுத்தே
உன்பேர் நினைத்தால் பில்லிபிசாசு பறந்தோடுமம்மா

சூனியமும் வைப்பும் சுழன்றலைந் தோடிவிடும்
பாதாள வஞ்சனமும் பறந்துவிடும் உன்பேர்நினைத்தால்
சத்தகன்னி மாதாவே சங்கரியே மனோன்மணியே
கரகத்தில் வீற்றிருக்கும் கன்னனூர் மாரிமுத்தே
சூலங் கபாலமுடன் துய்ய டமருகமும்
ஓங்கார ரூபமம்மா ஒருவ ரறிவாரோ
மகிமை யறிவாரோ மானிடர்கள் யாவருந்தான்
அடியார் தமைக்காக்கும் மந்திர நிரந்தரியே
அடியார்கள் செய்தபிழை ஆச்சியரே நீ பொறுப்பாய்
கோயி லடிமையம்மா கொண்டாடும் பாலகண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னதி பிள்ளையைத்தான் தற்காரும் பெற்றவளே
உன்னையல்லால் வேறுதுணை ஒருவரையுங் காணேனம்மா
வருந்துவார் பங்கில் வளமாய்க் குடியிருப்பாய்
பாவாடைக் காரியம்மா பராபரியே அங்குகண்ணே
உண்ணுகின்ற தேவதைகள் உடுத்துகின்ற தேவதைகள்
கட்டுப்பட்ட தேவதைகள் கார்க்கின்ற தேவதைகள்
இந்த மனையிடத்தி லிருந்துண்ணும் தேவதைகள்
சாம்பிராணி தூபத்திற் குட்பட்ட தேவதைகள்
அனைவோரும் வந்திருந்து அடியாரைக் காக்கவேணும் [589]

ஓராம் படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்
ஓலைப்பூ மண்டபத்தில் உகந்து கொலுவிருந்தாள்
இரண்டாம் படித்தளமாம் இரத்தின சிம் மாதனமாம்
இரத்தின சிம்மாதனத்தி லிருந்தரசு தான்புரிவாள்
மூன்றாம் படித்தளமாம் முனைமுகப்புச் சாலைகளாம்
முனைமுகப்புச் சாலைகளில் முந்திக் கொலுவிருந்தாள்
நான்காம் படித்தளமாம் நவரத்ன மண்டபமாம்
நவரத்தின மண்டபத்தில் நாயகியும் வந்தமர்ந்தாள்
ஐந்தாம் படித்தளமாம் அழுந்தியசிம் மாதனமாம்
அழுந்திய சிம்மாதனத்தில் ஆயி கொலுவிருந்தாள்
ஆறாம் படித்தளமாம் அலங்காரச் சாவடியாம் [600]

அலங்காரச் சாவடியில் ஆய்ச்சியரும் வந்திருந்தாள்
ஏழாம் படித்தளமாம் எழுதிய சிம் மாதனமாம்
எழுதிய சிம்மாதனத்தி லீஸ்வரியாள் கொலுவிருந்தாள்
எட்டாம் படித்தளமாம் விஸ்தார மேடைகளாம்
விஸ்தார மேடைகளில் விமலியரும் வந்தமர்ந்தாள்
ஒன்பதாம் படித்தளமாம் ஒருமுகமாய் நின்றசக்தி
ஒருமுகமாய் நின்றசக்தி உத்தமியுங் கொலுவிருந்தாள்
பத்தாம் படித்தளமாம் பளிங்குமா மண்டபமாம்
பளிங்குமா மண்டபத்தில் பத்திரியாள் கொலுவிருந்தாள்
ஆத்தாள் கொலுவிலேதான் ஆரார் கொலுவிருந்தார் [610]

ஐங்கரனும் வல்லபையும் அன்பாய்க் கொலுவிருந்தார்
தொந்தி வயிற்றோனும் துந்துபியுங் கொலுவிருந்தார்
குழந்தை வடிவேலன் குமரேசர் தானிருந்தார்
தோகை மயிலேறும் சுப்பிரமணியர் கொலுவிருந்தார்
சிங்கவா கனமேறும் தேவி கொலுவிருந்தார்
ஊர்காக்கும் காளி உத்தமியாள் கொலுவிருந்தாள்
துர்க்கையொடு காளி தொடர்ந்து கொலுவிருந்தாள்
வள்ளிதெய் வானையுடன் மகிழ்ந்து கொலுவிருந்தாள்
பச்சைமலை நாயகியாள் பைங்கிளியாள் தானிருந்தாள்
பூவைக் குறத்தியரும் பொருந்திக் கொலுவிருந்தாள் [620]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்முனியும் செம்முனியும் வந்து கொலுவிருந்தார்
காத்தன் கருப்பனொடு கட்டழகர் வீற்றிருந்தார்
தொட்டியத்துச் சின்னானும் துரைமகனுந் தானிருந்தார்
மருமக்க ளெல்லோரும் கூடிக் கொலுவிருந்தார்
குமாரர்க ளெல்லோரும் மகிழ்ந்து கொலுவிருந்தார்
ஆரிய மாலையுட னனைவோரும் வீற்றிருந்தார்
ஆயன் பெருமா ளனந்த சயனென்னும்
மாயன் பெருமாள் மங்கை மணவாளன்
ஐவரைக் காத்த ஆதி நெடுமாலும்
பஞ்சவரைக் காத்த பாரளந்தோர் தாமிருந்தோர்

கொற்றவரைக் காத்த கோபாலர் தாமிருந்தார்
முட்டையிற் குஞ்சு முகமறியா பாலகரை
பிட்டு வளர்த்தெடுத்த பெருமாள் கொலுவிருந்தார்
செட்டையிற் காத்த செயராமர் சீதையரும்
அலமேலு மங்கையம்மா ளரிராமர் சீதையரும்
மங்கையோடு லட்சுமியும் மகிழ்ந்து கொலுவிருந்தார்
சீதேவி மூதேவி சேர்ந்துக் கொலுவிருந்தார்
பாஞ்சால னெக்கியத்தில் பதுமைபோல் வந்துதித்த
பத்தினியாள் துரோபதையும் பாரக் கொலுவிருந்தார்
தளரா தனஞ்செயரும் தருமர் கொலுவிருந்தார்

தேவேந்திரன் புத்திரனார் தேர்விஜயன் தாமிருந்தார்
நகுல சகாதேவர் நலமாய்க் கொலுவிருந்தார்
கானக் குயிலழகர் கட்டழகர் வீற்றிருந்தார்
ஐவர்களுங் கூடி அன்பாய்க் கொலுவிருந்தார்
பட்டத் தரசி பைங்கிளி சுபத்திரையும்
ஆயன் சகோதரியா ளாரணங்கு வீற்றிருந்தாள்
நல்லதங்காள் வீரதங்காள் நல்லசங் கோதியம்மாள்
அந்தமுள்ள சுந்தரியா ளாரணங்கு வீற்றிருந்தாள்
மலையனூர் தானமர்ந்த மாரிக் கொலுவிருந்தாள்
கைச்சூலங் கப்பறையுங் கையிற் கபாலமுடன்

பச்செலும்பு தின்றால் பாலொழுகுமென்று சொல்லி
சுட்டெலும்பு தின்றவளே சுடலைவனங் காத்தவளே
அக்காளுந் தங்கையரும் ஐந்திரண்டேழு பேரும்
ஐந்திரண்டேழு பேரும் அங்கே கொலுவிருந்தார்
தங்காது பேய்பில்லிதன் பேரைச் சொன்னவுடன்
அங்காள ஈஸ்வரியும் அமர்ந்து கொலுவிருந்தார்
தொல்வினை நீக்கிச் சுகுணமதை யளிக்கும்
எல்லைப் பிடாரியரும் இங்கே கொலுவிருந்தார்
காவலர்கள் தான்புகழக் கனகசிம் மாதனத்தில்
காவ லதிகாரி கட்டழகி வீற்றிருந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தமனைமுதலா ஏழுமனை யுன்காவல்
சந்தத முன்காவல் சாதுகுண மாரியரே
காவல் கவனமம்மா கட்டழகி மாரிமுத்தே
காவலுக் குள்ளே களவுவரப் போகுதம்மா
பார சவுக்கிட்டுப் பத்திரமாய்க் காருமம்மா
தீரா வினைகளைத்தான் தீர்க்கும் பராபரியே
தாழும் பதிகளைத்தான் தற்காத்து ரட்சியம்மா
ஏழு பிடாரியும் இசைந்து கொலுவிருந்தார்
முத்தலு ராவுத்தன் முனையுள்ள சேவகரும்
முற்றத்தில் வந்து முனைந்து கொலுவிருந்தார்

பூவாடை கங்கையென்று பூரித்துக் காத்திருக்கும்
பாவாடை ராயனும் பக்கங் கொலுவிருந்தார்
தாட்சியில்லா சிவசங்கரியா ளென்றுசொல்லும்
ஆச்சியுடன் கொலுவில் அமர்ந்து கொலுவிருந்தார்
தேவித் திருக்கொலுவில் சேர்ந்து கொலுவிருந்தார்
ஆயித் திருக்கொலுவில் அனைவரும் கொலுவிருந்தார்
மாரிக் கொலுவில் மனமகிழ்ச்சி யாயிருந்தார்
வீரியக் கொலுவில் வீற்றிருந்தா ரெல்லோரும்
ஆலித்துத் தானிருந்தார் அம்மைத் திருக்கொலுவில்
பாலித்துத் தானிருந்தார் பராபரியாள் தன் கொலுவில்

கூடிக் கொலுவிருந்தார் கொம்பனையாள் தன் கொலுவில்
நாடிக் கொலுவிருந்தார் நாரணியாள் தன்கொலுவில்
சந்தேகம் போக்கிச் சாயுச் சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தா ரெல்லோரும் ஜ684ஸ
நாடு தழைக்கவம்மா நானிலத்தோர் தான்வாழி
மாடு தழைக்கவம்மா நல்லோர் மிகவாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும் மங்கையரும்
ஆரியரும் மற்றோரும் யாவர்களும் தான்படிக்க
முன்னாளில் மூத்தோர் மொழிந்த இந்த தாலாட்டை
இன்னாளில் போற்ற எழுதா எழுத்ததனால்

அச்சுக்கூடத் ததிபர் அநேகர் இதுவரையில்
உச்சிதமாய் அச்சிலிதை யோங்கிப் பதிப்பித்தார்
கற்றோரும் மற்றோருங் களிப்பாய்ப் படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப் பிரதியாய்
பாரிலுள்ளோ ரிக்கதையைப் படித்துத் தொழுதேற்ற
கற்றவரும் மற்றவரும் களிப்படைய வாழி
சங்கரனும் சங்கரியும் ஆறுமுகனுந்தான் வாழி
செங்கண்மால் ஸ்ரீராமர் சீதையரும் தான்வாழி
பஞ்சவர்க ளனைவரும் பைங்கிளியாள் துரோபதையும்
அல்லி சுபத்திரையும் அனைவோரும் தான் வாழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து முக்கோடி தேவர்க ளும்வாழி
சொற்பெரிய சோம சூரியாக் கினிவாழி
நாற்பத் தெண்ணாயிரம் நல்முனிவர் தான்வாழி
சந்திரனுஞ் சூரியனுந்தானவர்கள் தான்வாழி
இந்திரனுந் தேவர்கள் எல்லோருந் தான்வாழி
கற்பகக் காவும் காமதேனுவும் வாழி
பற்பல தீவும் பஞ்சாக்ஷரம் வாழி
காத்தனோடு வீரன் கருப்பன் மிகவாழி
சங்கிலிக் கருப்பன் சப்பாணி தான்வாழி
பாவாடை ராயன் பலதேவரும் வாழி [710]

இக்கதை கேட்டோர் என்னாளுந் தான்வாழி
பெருமையுடன் கேட்கும் பெரியோர் மிகவாழி
ஊரெங்கும் கீர்த்தி பெற்ற உத்தமருந் தான்வாழி
பாருலகி லிக்கதையைப் படித்தோர் மிகவாழி
நாயகியாள் தன்கதையை நாள்தோறும் வாசிப்போர்
பாரினில்புத் திரபாக்கியம் படைத்து மிகவாழ்வாரே
மாரித் திருக்கதையை மகிழ்ந்துமே கேட்டோரும்
தேவி திருக்கதையை தீர்க்கமய்க் கேட்டோரும்
பாடிப் படித்தோரும் பாக்கியத்தைத் தான்பெறுவார்
நாடித் துதிப்போரும் நற்கதியைத் தானடைவார் [720]

ஆல் போல்தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார். [722]

மங்களம் மங்களம் மாரியம்மன் தன் கதைக்கு !
எங்கும் நிறைந்த ஈஸ்வரிக்கு மங்களமாம் !!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாரியம்மன் வாழி!

'பூதலத்தில் யாவர்க்கும் பேராதரவா யென்னாளும்
மாதரசி யென்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதரனார் தங்கை சிறப்பான வாழியினை
காதலுட னோதக் கணபதியுங் காப்பாமே'

ஆதி பராபரியே ஆயனுடை தங்கையரே
நாதமறை ஓங்கார நற்பொருளாய் நின்றசக்தி
தக்கன் மகளாகத் தானுதித்தாள் வீரசக்தி
மிக்கசிவ னாரிடத்தில் வீற்றிருந்தா ளாதிசக்கி
பின்னும் மலையரசன் பிள்ளையென வந்துதித்தாள்
அன்னநடை மாதுமையாள் அருகிருந்தா ளரனிடத்தில்
சக்தியென வேதான் தாபரிக்கவே நினைந்தாள்
உருண்ட சடையழகி உருத்திராட்ச மார்பழகி
ஆதிசிவ னாரிடத்தில் அறுமுகனைப் பெற்றெடுத்தாள்
தில்லை வனத்தே திருநடன மாடையிலே
மார்மேலே நாகம் மடிமேல் புரண்டாட
தோள்மேலே நாகம் தொடைமேல் புரண்டாட
வல்லதொரு பேச்சியென வந்துநட மாடிநின்றாள்
பத்திர காளியென பார்வதியாள் உற்பவித்து
ஈசன் நினைக்க எழுந்தருளி வந்துநின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றவே யக்கடலை வாரிக் குடித்துநின்றாள்
வாதாடி நின்றதொரு வல்லபுக ளாதிசக்கி
மாரியெனப் பிறந்த வல்லபுக ளெங்களம்மா
பார்தளைக்க வேணுமென்று பத்தினியா ளெங்களம்மா
சித்திக்க நற்றவசு செய்வதென்று தானினைந்தாள்
கன்னனூர் வாழுகின்ற காரண சவுந்தரியே
புகழ்முத்து மாரியரே பூலோக நாயகியே
ஆதியபி ராமியெனும் ஆனந்த ரூபியரே
மாயவனார் தங்கையரே மனோன்மணி தேவியரே
எங்கள்வினை தீர்ப்பாய் ஈசுபரித் தாயாரே
ஒன்பது கோடிசக்தி உண்டாக்கவே நினைந்தாய்
சக்தி யொருசக்தி சமயம் பதினாறாம்
பத்தினியார் தான்நினைக்க பலமுகமாய்த் தான்பிறந்தார்
கும்பத்து மாரியென்றும் கோவிந்தன் தங்கையென்றும்
ஏழுபேர் மாரியென்றும் ஏகாபரா சக்தியென்றும்
ஆழிமால் தங்கையென்றும் ஆச்சிகா மாட்சியென்றும்
மதுரைமீ னாட்சியென்றும் வல்லபத்திர காளியென்றும்
துர்க்கை யபிராமியென்றும் சொல்லரிய பேச்சியென்றும்
கண்ணிலே வந்துதித்த கண்ணகித்தா யம்மனென்றும்
பரமனுமை யருளால் பாருலகிலே யுதித்தாய்
வெள்ளியிலே வந்துதித்தாள் மெய்ப்பொருளாம் மாரியம்மன்
மாரியெனும் மாரி மகமாரி யாதிசக்தி
நண்ணும் தவம்புரிய நாரணியும் தான்நினைந்தாள்
வண்ணமிகு வடவை யக்கினியை யுண்டுபண்ணி
வடவைக் கடல்தனிலே வாய்த்தகும்பம் தானிறுத்தி
கும்பத்தின் மேலே குணமாய்த் தவமிருந்தாள்
பரமன் தனைநினைந்து பார்வதியாள் மாரியம்மன்
அரிய தவமாக அன்னையவள் வீற்றிருந்தாள்
வீற்றிருந்தா ளன்னை வெகுநாள் தவமாக
அம்மன் தவப்பெருமை கண்டுபர மேஸ்வரனும்
செம்மையுட னம்மன் திருமுகத்தைத் தான்பார்த்து
என்னவரம் வேணுமுனக் கீஸ்வரியே கேளுமென்றார்
அப்போது பார்வதியு மன்பாய் மனம்மகிழ்ந்து
இவ்வரிய முத்துவகை எனக்கருள வேணுமென்று
பாராம லேயெனக்கு பதினெட்டு முத்துவகை
தாராயெனக் கேட்டாள் தார்குழலாள் அப்போது
அரனும் மனம்மகிழ்ந்து ஆனதொரு முத்துவகை
பரமேஸ்வரி தனக்கு பார்சிறக்க வேகொடுத்தார்
பொற்கரகம் பொற்பிரம்பு பொற்சிலம்பு வெண்கொற்றம்
வேப்பந் திருக்குழையும் மெய்யுடுக்கும் வேணுமென்றார்
கேட்ட வரமெல்லாம் கிருபையுடனே கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மாரியம்மன் அன்பாய் மனம்மகிழ்ந்து
இவ்வரிய முத்தருமை யானறிய வேண்டுமென்று
ஆதிசிவன் மேனியிலே அழகுமுத்தைத் தானெறிந்தார்
கறைகண்டன் மேனிதனில் கனகமுத்தைத் தானெறிந்தார்
வருத்தம் மிகவாகி வன்னெருப்பாய் நின்றெரிக்க
பொறுக்க முடியாமல் போதமுட னாதிசிவன்
காலன் தனையுதைத்த கண்ணுதலோன் ஆதிசிவன்
மதனை யெரித்தோன் மகாமேருவை வில்வளைத்தோன்
ஈரேழு லோகமெல்லா மீடேற்றும் ஆதிசிவன்
நீறுபூசிச் சுடலை நின்றாடும் ஆதிசிவன்
வேலவனை ஐங்கரனை மேன்மையுடன் பெற்றசிவன்
சால மனம்தளர்ந்து தான்பொறுக்க மாட்டாமல்
அன்னை தனைமனதில் அன்பாகவே நினைந்தார்
மாரிசிவ பார்வதியை மனதினிலே தானினைந்தார்
அந்த நினைவுதனை அன்னையவள் தானறிந்து
சிந்தை மகிழ்ந்து செல்வியெனும் மெங்களம்மை
பரமசிவன் வருத்தம் பண்புடனே மாற்றவென்று
செய்யதிரு நீறுகொண்டு சிவனார்தன் மேனிதனில்
முத்தெறிந்த அக்கினியை முதன்மைபெற வாங்கிநின்றார்
மதியணிந்தோன் உடலில் வருத்தமது தீரவென்று
அதிக புகழுடைய அரனைமன தில்நினைத்த
பார்வதியார் தன்முகத்தைப் பார்த்துமே செப்பலுற்றார்
பிரமாவை விஷ்ணுவை வேதமதை ஆகமத்தை
சந்திரரை சூரியரைத் தானவரை வானவரை
இந்திரரைத் தேவர்களை ஈரேழு லோகமதை
உண்டாக்கியே எல்லா வுயிர்க்குயிராய் நின்றவென்மேல்
பாராமலே எறிந்தாய் பட்டமுத்து செய்வருத்தம்
பொறுக்கவரி தாகையினால் பூவுலகில் உள்ளவர்கள்
தங்களுக்கு இந்தமுத்தை தானெறிய லாகாது
வயது முதிர்ந்தவர்கள் மாதவத்தோர் தங்களுக்கும்
அங்கமுறும் கிழவி ஆனவர்க்கும் பாலகர்க்கும்
மதிசேர் கதிநிறைந்த மங்கையர்க்கு மிப்போது
அதிகவித முத்தெறிய லாகாது பொற்கொடியே
சதிகேடர் துர்ச்சனர்கள் சண்டாளர் பொல்லாதார்
அவகேடர் ஏழைகட்கும் அநியாயம் செய்தவர்க்கும்
சிவபூசை குருபூசை செய்யநினை யாதவர்க்கும்
சத்தியமா யிதனைத் தான்செய்யாப் பாவிகட்கும்
பக்திமுக்தி யில்லாப் பாவிகட்கும் தீயவர்க்கும்
தானருமங் செய்யாச் சண்டாளர் துர்ச்சனர்க்கும்
பொல்லாத முத்துகளை போயெறிநீ பொற்கொடியே
அக்கினிக் கம்பமதில் அதிகதவம் செய்ததனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துவகை பெற்றாய் மும்மூர்த்தி தேவரெல்லாம்
பார்வதியே உந்தனையும் பரமேஸ்வரன் தனையும்
நாரணி துர்க்கையென்றும் நல்லமுத்து மாரியென்றும்
பேச்சிகா மாட்சியென்றும் பேர்பெரிய மாரியென்றும்
மதுரைமீ னாட்சியென்றும் வல்லபத்திர காளியென்றும்
உரியதொரு பேருரைத்தாய் உத்தமியே உந்தனக்கு
கன்னனூர் மாரியரே கம்பநதி உன்னூராம்
வேப்பங் குழைபிடிப்பாய் வெண்கமலம் வீற்றிருப்பாய்
முத்தளக்கும் மாரி முதல்மாரி பெய்மாரி
முத்தளந்த கொத்தையெல்லாம் விட்டெறிந்தாய் பட்டணத்தில்
பட்டணமும் சூழப் பலதிசையும் சுற்றிவந்தாய்
கன்னியரும் சூழக் கனதிசையும் சூழ்ந்துவந்தாய்
பூலோக மெங்குந் தானதிர ஓடிவந்தாய்
வண்ணமுத்து மாரியம்மா மாருகரம் வீற்றிருந்தாய்
பொன்னின் ரதமேறிப் பூலோகம் சுற்றிவந்தாய்
எல்லோரையும் கூட்டி எங்கெங்கும் சுற்றிவந்தாய்
கயிலைதனில் வீற்றிருக்கும் காரணி சவுந்தரியாள்
பயமறுக்க மாரியெனப் பாருலகில் வந்துதித்தாய்
வெப்பாற்ற வேண்டுமென்று மேன்மையுட னேநினைத்தாய்
உடுகுதனை யெடுத்தாய் ஓம்நம சிவாயமென்றாய்
பொற்பிரம்புக் கோலெடுத்தாய் பொற்கரகம் தானெடுத்தாய்
வேப்பங் குழையெடுத்தாய் வீதிவலம் சுற்றிவந்தாய்
அன்றுமுத்து மாரியராய் அந்தவன மிருந்தாய்
அந்தவன மிருந்தபின்னர் ஆதிசிவ னாருந்தான்
வந்துன் னுடனே மனமகிழ்ந்து ஏதுசொல்வார்
ஏழுலகும் காவல்செய்யும் ஈஸ்வரியே மாரியம்மா
அரனோடு வாதாடும் ஆதிசக்தி மாரியம்மா
சிவனோடு வாதாடும் தேவி பராபரியே
வல்லவளே என்தாயே மாதாவே இவ்விடத்தில்
கம்பநதி மாயவரம் கன்னனூர் காத்திருந்தாய்
சக்தி பரிகலங்கள் தானெங்கும் காவல்நிற்க
பத்துலட்சம் கோடி பரிகலங்கள் தான்சூழப்
பொன்னின் சிலம்பெடுத்து பூலோகம் சுற்றிவந்தாய்
சிற்றுடுக்கு தானெடுத்து செகமெங்கும் சுற்றிவந்தாய்
ஒன்பது கோடிசக்தி லோகமெங்கும் சுற்றிவந்தாய்
வயிரவரும் கின்னரரும் மாத்தாண்ட வீரர்களும்
குருநாத தேவருடன் கோடிபடை சூழ்ந்துவர
சற்றே மனதிரங்கித் தாபரித்துக் காருமம்மா
நம்பினே னுன்பாதம் நாரணியே யென்தாயே
துன்பமகற்றித் துயர்வினைகள் தானகற்றி
அச்ச மகற்றி அன்பிரக்கம் தந்தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தினியே நம்பினோர்க்கு பழுதொன்றும் வாராமல்
ஆயிரம் கண்ணுடைய ஆதிபரா சக்தியம்மா
உன்னித மாயிருந்த உத்தமியே மாரியம்மா
என்னைநீ காத்து இரட்சிக்க வேணுமம்மா
கின்னரர் கிம்புருடர்கீதநாதம் தொனிக்க
முப்பத்து முக்கோடி தேவர் மலர்சொரிய
வானத் தரம்பையர்கள் மாமலரிட்டே பொழிய
அம்புவியி லுள்ளோர்கள் அனைவருமே போற்றிசெய்ய
இன்பமுடன் மாரி இருந்தாய் பெருங்கொலுவாய்
என்னவினை செய்தாலும் என்தாயே நீபொறுத்து
பேரால் பெருமை பெற்றவள்நீ ஆதிசக்தி
துட்டர்களைச் சங்கரிக்கும் துய்யபுக ளாதிசக்தி
உண்டென்ற பேர்க்கு ஒளிவிளக்காய் நின்றிடுவாய்
இல்லையென்ற பேர்தம்மை எரித்திடுவாய் என்தாயே
தாள்பணிந்து போற்றிசெய்தேன் சரணம் சரணமென்றேன்
பாதம் தொழுதேன் பலமுகமாய் தானுதித்த
தேவி சரணமென்று திருவடியை நான்தொழுதேன்
மாதாவைப் போற்றுவார்க்கு மரணமொரு நாளுமில்லை
உன்னைத் தொழுபவர்க்கு ஒருகுறையும் வருவதில்லை
துன்ப மகற்றித் துயர்வினையை நீக்கிடம்மா
வெண்ணீறு கொண்டு வினையை அறுத்திடம்மா
அன்னை பதம்வாழி! அரன்பாதம் வாழியவே!

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவநிலைப் பாடல்கள்

தத்துவ போத ஞானம்
சமயநூல் பலவும் கற்றேனில்லை
பத்தியா யுன்சீர் பாதம்
பணிந்துநான் தொழுதே னில்லை
முத்திநான் பெறுவ தெப்போ
முக்கண்ணா ஞான மூர்த்தி
அத்தனே உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

தாண்டவ மூர்த்தி யுன்னைச்
சரியையாய் கிரியை தன்னில்
நீண்டதோர் யோக ஞான
நெறியிலே நின்றே னில்லை
பூண்டறம் தொழுதே னில்லை
பொற்பதம் காண்ப தெப்போ
ஆண்டருள் உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

திருந்திய கொன்றை தும்பை
திங்களோ டரவு தானும்
பொருந்தவே சடையில் வைத்த
புனிதனே நின்பொற் பாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துநான் செய்த தோசம்
பவவினை தொலைவ தெப்போ
அருள்தரு முமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

தீதுநான் செய்த பாவம்
செப்பிடி லெண்ண லாமோ
நீதியா யுன்னைப் போற்றி
நெறியிலே நின்றே னில்லை
ஓதிலா வுன்பொற் பாதம்
உறுதியாய் பெறுவ தெப்போ
ஆதியே யுமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

துலைவுற்ற நெஞ்சுக் குள்ளே
துக்கமாங் கவலை யாலே
நிலைவற்று உன்னைப் போற்றி
நெறியிலே நின்றே னில்லை
புலையற்ற நயனே யுந்தன்
பொற்பதம் பெறுவ தெப்போ
அலைவற்ற உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

தூக்கிய பாதம் தன்னை
தோத்திரம் பலவும் செய்து
வாக்கினால் வணங்கா வண்ணம்
மலர்ப்பதம் பெறுவ தெப்போ
நோக்கிய அன்பர்க் கெல்லாம்
நோக்கினா லுந்தன் வன்மை
ஆக்கிடு முமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

தெண்கடல் நஞ்சை யுண்ட
தேவர்கள் தேவா வுன்றன்
முண்டகத் திருத்தாள் போற்றி
முத்திநான் பெறுவ தெப்போ
பண்டுநான் செய்த பாவம்
பலவினை தொலைவ தெப்போ
ஆண்டருள் உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரணி யோடும் வீதி
திருவரு ளுடனே வந்து
ஆரணி நரியை யன்று
பரியாக்கும் தம்பி ரானே
சீரணி யுன்பொற் பாதம்
சிக்கெனப் பிடிப்ப தெப்போ
ஆரணி மன்று ளாடும்
அரகரா நமச்சி வாயம்

தையலார் கங்கை தன்னை
சடையினில் மறைத்தார் பாதம்
மெய்யிலே நீறு பூசி
மிக்கவைந் தெழுத்தை யோதி
உய்யநான் தொழுதே னில்லை
உன்பதம் பெறுவ தெப்போ
ஐயனே உமையாள் பங்கா
அரகரா நமச்சி வாயம்

தோடவிழ் கோதை மாதர்
தொடுத்தகண் வலையிற் புக்குந்
தேடரும் துணையாய் நின்ற
சிவனின் ஐந் தெழுத்தையேதான்
பாடகச் செம்பொற் பாதம்
பங்கயத் தயன்மால் காண
ஆடக மன்று ளாடும்
அரகரா நமச்சி வாயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காத்தவராயன் கும்மி

தொட்டியத்துத் துரைமகனே காத்தான் துரைமகனே- உந்தன்
சூட்சிமத்தை யாரறிவார் மகனே யாரறிவார்
வங்கணத்து சின்னானடா மகனே சின்னானடா – எந்தன்
மரிக்கொழுந்தே வாமகனே காத்தான் வாமகனே
எங்கேயடா கண்டுவந்தாய் மகனே கண்டுவந்தாய் - அந்த
இறுமகுலப் பெண்ணவளை மகனே பெண்ணவளை

மருக்காலம் சோலையிலே தாயே சோலையிலே – நாங்கள்
மான்வேட்டை ஆடையிலே தாயே ஆடையிலே
திருக்கொன்றைச் சோலையிலே அம்மா சோலையிலே – நாங்கள்
தேனெடுக்கும் வேளையிலே தாயே வேளையிலே
பாசுபடாக் கெங்கையிலே தாயே கெங்கையிலே – அந்தப்
பவளநீர் ஓடையிலே அம்மா ஓடையிலே
கோதுபடா மஞ்சள்கொண்டு தாயே மஞ்சள்கொண்டு – அவள்
குளிக்கையிலே கண்டுகொண்டேன் அம்மா கண்டுகொண்டேன்
கண்டுவந்த நாள்முதலாய் தாயே நாள்முதலாய் - எனக்கு
கண்ணுறக்கம் தோணுதில்லை தாயே தோணுதில்லை
பார்த்துவந்த நாள்முதலாய் அம்மா நாள்முதலாய் - எனக்கு
பசி தாகம் தோணுதில்லை தாயே தோணுதில்லை
கண்டுவந்த மாலைதன்னை ஆரிய மாலைதன்னை -இப்போ
கொண்டுவர வேணுமம்மா தாயே வேணுமம்மா
பார்த்துவந்த மாலைதன்னை ஆரிய மாலைதன்னை - இப்போ
சேர்த்துவர வேணுமம்மா தாயே வேணுமம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாதடா என்மகனே காத்தான் என்மகனே – நானொரு
புத்திசொல்வேன் நீகேளடா மகனே நீகேளடா
அண்ணன்நல்ல மகளிருக்க மகனே மகளிருக்க – உனக்கு
அயல்வீட்டாள் ஆகாதடா மகனே ஆகாதடா
மாமன்நல்ல மகளிருக்க மகனே மகளிருக்க – உனக்கு
மறுதாரம் வேணாமடா மகனே வேணாமடா
பாலைவனம் போனவர்கள் மகனே போனவர்கள் - அங்கே
பட்டிறந்தார் கோடிசனம் மகனே கோடிசனம்
செட்டிவனம் போனவர்கள் மகனே போனவர்கள் - அங்கே
செத்தவர்கள் மெத்தவுண்டு மகனே மெத்தவுண்டு
மாமன்நல்ல மகளிருக்க மகனே மகளிருக்க – உனக்கு
மறுதாரம் வேணாமடா மகனே வேணாமடா

சட்டியிலே தயிரெடுப்பாள் இடைச்சி தயிரெடுப்பாள் - அதில்
சத்தமிட மத்தெடுப்பாள் அம்மா மத்தெடுப்பாள்
சிட்டியிலே பாலெடுப்பாள் இடைச்சி பாலெடுப்பாள் - பின்னர்
மோருவிக்கப் போறேனென்பாள் தாயே போறேனென்பாள்
முந்தானைச் சேலையெல்லாம் தாயே சேலையெல்லாம் - அங்கே
மோருமொச்சை நாறுமம்மா தாயே நாறுமம்மா

போகதடா என்மகனே காத்தான் என்மகனே – நானொரு
புத்திசொல்வேன் நீகேளடா மகனே நீகேளடா
கழுவிலுன்னை வைத்திடுவார் மகனே வைத்திடுவார் - நீ
காய்ந்துலர்ந்து சாகவென்று மகனே சாகவென்று
கழுமரத்தைச் சுற்றியல்லோ மகனே சுற்றியல்லோ – அங்கே
குழுநரிகள் காவலுண்டு மகனே காவலுண்டு

காவல்மெத்த தோணுதென்றால் தாயே தோணுதென்றால் - நானும்
கதவாலே ஏறிடுவேன் தாயே ஏறிடுவேன்
கட்டெறும்பு வடிவெடுத்து அம்மா வடிவெடுத்து – அவள்
கட்டிலிலே போயிருப்பேன் தாயே போயிருப்பேன்

கட்டெறும்பு பிடிக்கவென்று மகனே பிடிக்கவென்று –அவள்
கருங்குளவி வளர்த்திருக்காள் மகனே வளர்த்திருக்காள்

சிற்றெறும்பு வடிவெடுத்துத் தாயே வடிவெடுத்து – அவள்
சேலையிலே போயிருப்பேன் தாயே போயிருப்பேன்
என்னதான் சொன்னாலும் அம்மா சொன்னாலும் - இப்போ
ஏற்குதில்லை என்மனது தாயே என்மனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றெறும்பு தின்னவென்று மகனே தின்னவென்று – அவள்
சிறுகாடை வளர்த்திருக்காள் மகனே வளர்த்திருக்காள்
நாவல்நல்ல பழத்திலையும் மகனே பழத்திலையும் –அவள்
நல்லதொரு வான்கறுப்பி மகனே வான்கறுப்பி
ஈச்சம்நல்ல பழத்திலையும் மகனே பழத்திலையும் – அவள்
ஈன்றெடுத்த வான்கறுப்பி மகனே வான்கறுப்பி
கொண்டைநல்ல பெருத்தவள்தான் மகனே பெருத்தவள்தான் – நம்ம
குடிவழிக்கும் ஆகாதடா மகனே ஆகாதடா
கெண்டைநல்ல பெருத்தவள்தான் மகனே பெருத்தவள்தான் – நம்ம
கிழவழிக்கும் ஆகாதடா மகனே ஆகாதடா

என்னதான் நீசொன்னாலும் தாயே நீசொன்னாலும் – அதனை
ஏற்குதில்லை என்மனது தாயே என்மனது

அந்திபட்ட நேரத்திலே மகனே நேரத்திலே – உன்னை
ஆடடைக்கப் போகச்சொல்வாள் மகனே கோகச்சொல்வாள்
மாலைபட்ட நேரத்திலே மகனே நேரத்திலெ – உன்னை
மாடடைக்கப் போகச்சொல்வாள் மகனே போகச்சொல்வாள்
வேணாம்டா துரைமகனே காத்தான் துரைமகனே – அந்த
விறுமகுலப் பெண்ணுக்கு மகனே பெண்ணுனக்கு

**வதனமார் ஊர்சுற்றுக் காவியம்**

திருமருவு அயோத்தியம் பதிதனி லிருந்து
செப்பரிய காஞ்சிமா நகர்தன்னி லேகி
மருவருவு மங்கல ருடன்வதன மாரும்
வந்தனர் மாயவன் தன்புகழ் வகுத்து
எருதேறு மீசரிட மாகிவளர் கின்ற
ஈசுபரி தன்கிருபை பெற்றருள் கின்ற
கருமமது விகடதட வீரமுக் கண்ணன்
கணபதியை யொருபோதும் மனதில் மறவேனே

மறவாம லந்தணர் குலத்தவ தரித்து
மதயானை எருமைகுழு மாடுகள் பிடித்து
திறமாக வயதுமே ஈரெட்டுச் சென்றபின்
செப்பரிய மத்துபொல் கண்டகோ டாலி
நிறமான பட்டுடன் சட்டைசக லதுவும்
நீள்துளப மாலையணி பூசண மணிந்து
குறமாது மணவாளர் கதிரையம் பதிநகர்
குறித்தவர் மனத்தினில் நினைந்துவந் தனரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துமது ராபுரியில் நின்றவ தரித்து
வைகைதனில் நீராடி யேமன மகிழ்ந்து
விந்தைசெறி கும்பகோ ணந்தன்னில் வந்து
மேன்மையுட னேமூழ்கி நன்மைபெற வேதான்
இந்தவகை யெண்ணியவர் சந்தோச மாக
இன்புற்று ராமேஸ் வரந்தன்னில் வந்து
செந்தமிழ் சிறந்துவளர் கந்தமா பருவதம்
திரிகோண மலைதன்னில் வந்தவ தரித்தார்

வந்தவ தரித்தவர்கள் தம்முள மகிழ்ந்து
வளமுள நற்பதிக ளெங்கணும் நிறைந்து
கந்தமலர் மாதுளை செவ்வந்தி செண்பகம்
கனகமலர் நிறைவாவி கண்டவர் மகிழ்ந்து
சிந்தையுட னேயெடுத் தனைவரு மணிந்து
சீருலவு கன்னிமா ரும்வதன மாரும்
சந்தோச மாகவே கந்தாளைக் குளத்தில்
தம்மன மகிழ்ந்தவர்கள் அருளபுரிந் தனரே

அருள்பொழிந் தேகொட்டி யாரநகர் கிளிவெட்டி
ஆனதம் பன்கடவை தம்பல காமம்
தருவளரு கந்தைமலை சலவைபா ணகையுடன்
தமிழ்பெருகு நாவலூர் நாகமுனை யறுகாமம்
எருமைமத யானைகள் பிடித்துவிளை யாட
இதமான தலமென்று அவர்மனதி லெண்ணி
வரிசைபெற வேயவர்கள் அனைவரும் வந்து
வதனவெளி தன்னிலே இனிதிருந் தனரே

இனிதிருந் தேசிறிது பேரங் கிருக்க
இன்பமுட னேசிறிது பேரெழுந் தருளி
தனிமைபெற வேதிருக் கோவில்நக ரெய்தி
தம்பட்டை பட்டிநகர் தளகைக் குடாவும்
கனியனைய மொழிபயிலும் துடியிடைப் பிடிநடைக்
கன்னியர்க ளுறைகின்ற காரைநக ரெய்து
பனிமழை சொரிகின்ற கல்முனையில் வந்து
பரந்துசெறி யாலநிழல் வீற்றிருந் தனரே

விற்றிருந் தேயெழிய மானிடர் தமக்கு
வினைதுய ரகற்றிநல் வெளிகள்விளை வித்து
கீர்த்திபெற வேபூசை பொங்கல்கள் விரும்பி
கிருபையுட னேயவர் தமக்கருள் புரிந்து
போற்றிசெய் தேநல்ல தோத்திரம் செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோக மெங்கணும் வாழவென் றேதான்
நாற்றிசையும் புகழ்கின்ற நாதனைப் பதியில்
நாச்சிமார் கல்லடிநற் பதியென விருந்தார்

நற்பதிக ளென்றவர்க ளொப்பமுட னேதான்
நளினமலர் கமழ்வாவி அரியதல மென்று
பொற்பிளவை நீலநவ ரெத்தின மணிந்து
பொன்னினரை ஞாணுடன் சட்டைசக லதுவும்
செப்பமுட னேயெடுத் தனைவரு மணிந்து
சீர்மையுள கன்னிமா ரும்வதன மாரும்
எப்பொழுது மித்தல மிரட்சிப்போ மென்று
எல்லோரும் பொங்கல்மடை கொண்டிருந் தனரே

மடைகொண் டிருந்தவர்கள் அனேகநெடு நாளாய்
மாறாத வல்வினை வரும்பிணி யகற்றி
படைவந்து கிருக்ஷ்ணனு மணுகாம லேதான்
பஞ்சட் சரம்கொண்டு அஞ்சத் துரத்தி
தடையின்றி வாழவே நற்கிருபை செய்து
சந்தோச மாகவே நாதனை நகரில்
அடைவுபெற வேபூசை அர்ச்சனை புரிந்து
அனைவரு மேயங்கு அமர்ந் திருந்தனரே

இருந்துமத யானைகுழு மாடுகள் பிடித்து
இயல்புற வேயவர்கள் ஓடிவி ளையாடி
செறிந்த மலர்வாவி தனில் நீராடியேதான்
திருமனதி லெண்ணிநற் சிவதல மெனவே
பொருந்துமங் கலவீர வதனமார் தாமும்
புகழ்நிறைந்த தான்தோன்றி யப்பர்நக ரேகி
மருந்துமந் திரம்முகிலி சித்திக்கும் நல்ல
மணற்பிட்டி தனில்வந்து வீற்றிருந் தனரே

திருந்துமங் கலவீர வதனமார் வாழி
சிவசமய மைந்தெழுத் தோதுவோர் வாழி
பொருந்துபூ சனைகள்செய் கட்டாடிமார் வாழி
பூலோக நற்பதிகள் நீடூழி வாழி
அருந்தவம் செய்சிவ முனிவோர்கள் வாழி
அருள்பெருகு மட்டக் களப்புநகர் வாழி
வருந்துய ரகற்றியருள் நாதனைப் பதிவாழ்
மகமாரி பொற்பாதம் வாழவா ழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலுக்கான அனுசரணையாளர்கள்

(ஆலய பரிபாலன சபையால் வழங்கப்பட்ட பட்டியல்)

| பெயர் | தொகை |
|---|---|
| 01. ஆலய பரிபாலன சபை - (ஆலயக் கணக்கில்) | 150,000.00 |
| 02. வெல்லாவெளி இந்துசமய அபிவிருத்திக்கழகம் | 25,000.00 |
| 03. கோபிநாத் வதனி அவர்கள் - கோவில்போரதீவு | 20,000.00 |
| 04. சட்டத்தரணி முத்துலிங்கம் கணேசராசா அவர்கள் | 10,000.00 |
| 05. அருணாசலம் சியரூபன் அவர்கள்- வெல்லாவெளி | 6,000.00 |
| 06. சிவகுரு கருணேஸ்வரன் அவர்கள் -தலைவர்,ஆலய பரிபாலன சபை | 5,000.00 |
| 07. முத்துலிங்கம் பேரின்பராசா அவர்கள்-செயலாளர்,ஆலயபரிபாலன சபை | 5,000.00 |
| 08. வினாயகமூர்த்தி நித்தியானந்தம் அவர்கள், குடி வண்ணக்கர் | 5,000.00 |
| 09. வேதநாயகம் மகாமாயவன் அவர்கள், குடி வண்ணக்கர் | 5,000.00 |
| 10. குமரப்போடி லோகநாதன் அவர்கள், குடி வண்ணக்கர் | 5,000.00 |
| 11. கறுவல்தம்பி சுந்தரம்பிள்ளை அவர்கள், குடிவண்ணக்கர் | 5,000.00 |
| 12. பரமானந்தம் றொசானந்தன் அவர்கள், குடிவண்ணக்கர் | 5,000.00 |
| 13. அமரசிங்கம் யோகேஸ்வரன் அவர்கள், குடிவண்ணக்கர் | 5,000.00 |
| 14. மாணிக்கப்போடி அன்னகேசரி அவர்கள்,ஆலோசகர்,ஆலய பரிபாலனசபை | 5,000.00 |
| 15. சிவசிறி சாம்பசிவக் குருக்கள் அவர்கள், ஆலய பிரதம குரு | 5,000.00 |
| 16. கந்தப்போடி சிவாகரன் அவர்கள், முன்னாள் செயலாளர் | 5,000.00 |
| 17. வசந்தராசபிள்ளை மேகநாதன் அவர்கள், முன்னாள் தலைவர் | 5,000.00 |
| 18. இராசதுரை தனுராஜ் அவர்கள், முன்னாள் பொருளாளர் | 5,000.00 |
| 19. போரப்போடி சிவனேசராசா அவர்கள், முன்னாள் உப தலைவர் | 5,000.00 |
| 20. சிவகுரு சிவகுமாரன் அவர்கள், முன்னாள் குடிவண்ணக்கர் | 5,000.00 |
| 21. குமரப்போடி சரவணமுத்து குடும்பம், வெல்லாவெளி | 5,000.00 |
| 22. திரு.குகராசா துரைராசா சகோதரர்கள் | 5,000.00 |
| 23. குமரப்போடி வினாயகமூர்த்தி அவர்கள். சங்கீத அசிரியர் | 5,000.00 |
| 24. திரு.மு.கந்தசாமி (மேசிலார்) குடும்பம் | 5,000.00 |
| 25. செல்லத்துரை பாலகிருஷ்னன் அவர்கள் (இ.ச.அ.க.உ) | 5,000.00 |
| 26. லலாசேகரன் கிரிசோத்மன் அவர்கள் (கண்ணன் - லண்டன்) | 5,000.00 |
| 27. தம்பிராசா சுதாகரன் அவர்கள், பீலியாறு, வெல்லாவெளி | 5,000.00 |
| 28. சோமசுந்தரம் வினாயகமூர்த்தி அவர்கள், கோவில்போரதீவு | 5,000.00 |
| 29. மானாகப்போடி அருள்நாயகம் அவர்கள், ஆலய உபகுரு | 5,000.00 |
| 30. செல்லையா நவரெத்தினம் அவர்கள் | 5,000.00 |
| 31. கந்தப்போடி சிவலிங்கம் அவர்கள் | 5,000.00 |
| 32. பாலசுந்தரம் சுந்தரராஜன் அவர்கள் | 5,000.00 |
| 33. கந்தையா கலைவாணி அவர்கள் | 5,000.00 |
| 34. கந்தப்போடி ரவீந்திரராசா அவர்கள் | 10,000.00 |
| 35. நாராயணபிள்ளை கலாமதி அவர்கள் | 5,000.00 |
| 36. அழகிப்போடி அழகேசன் அவர்கள் | 5,000.00 |
| 37. தியாகராசா தியதீஸ்வரன் அவர்கள் | 5,000.00 |
| 38. கந்தப்போடி அருளானந்தம் அவர்கள் | 5,000.00 |
| 39. இராசநாயகம் யோகராணி அவர்கள் | 5,000.00 |
| 40. சிவபாதம் தயானந்தன் அவர்கள் | 5,000.00 |
| 41. வசந்தராசா ஜீவரஞ்சன் அவர்கள் | 5,000.00 |
| **42. பெரியதம்பி பிரதீப்குமார் அவர்கள்** | **5,000.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













சக்தியின் நாமம் புத்துயிர் பெற்றது
வெல்லா வெளியினிலே
சாந்த சொரூபி மகமாரி தேவியின்
அழகிய கோலத்திலே
எத்தனை ஆயிரம் பக்தர் குவிகின்றார்
அன்னையின் வாசலிலே
அத்தனை பேருக்கும் சித்தி யளிக்கின்றாள்
வடிவுடை நாயகியே – எங்கள்
வடிவுடை நாயகியே!

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவள்
வெல்லா வெளியாத்தா – வந்து
வேப்பிலைக் கொத்தாலே வேதனை தீர்ப்பவள்
பக்தர் முகம் பார்த்தா! – சிவ
சக்தி வடிவான திரிசூல காரியெம்
தீவினைகள் அறுப்பாள் - என்றும்
நித்திய சொரூபியாய் நீக்கமற நின்று
காத்திடும் செல்லாத்தா! – எம்மைக்
காத்திடும் செல்லாத்தா!

ISBN: 9 789554 269460

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org